
கல்கி





35 காசு

KALKI 26.12.1965


கல்கி பொருளடக்கம்

விசுவாவசு மார்கழி 11 ● டிசம்பர் 26

நீங்கள் தீர்ப்புச் செய்யாதிருங்கள். அப்பொழுது நீங்களும் தீர்ப்புப்பெறுதிருப்பீர்கள். மற்றவர்களை ஆணையிடாதிருங்கள். அப்போது நீங்களும் ஆணையிடப் படாதிருப்பீர்கள். விடுதலை பண்ணுங்கள். அப்போது நீங்களும் விடுதலையடைவீர்கள். கொடுங்கள். அப்போது உங்களுக்கும் கொடுக்கப்படும்.

— இயேசுவின் அருள்மொழி

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



நரம்புத் துடிப்பை நீக்கும் மருந்து!
உணவு மந்திரி
மாணவர்களே! அரசியலில் தலையிடாதீர்கள்
அரசியல்வாதிகளே! சர்வகலாசாலையில் தலையிடாதீர்கள்
PK



மலர் 25 ❋ இதழ் 22

மக்கள் சுதந்திரம் தேர்தல் விஷயமல்ல!

மக்களுக்குக் காப்பு அளித்து, சமூகத்தில் ஒழுங்குப்பாட்டை உண்டாக்குவதற்கு மட்டுமே ஏற்பட்ட அரசாங்கம் தனிமனிதர்களின் சுதந்திரத்தில் அதமபட்சமாகவே பிரவேசிக்கலாம் என்பது உலகத்தின் பல நாடுகளில் உள்ள 'லிபரல்' கட்சிகளின் கொள்கையாகும். இக்கொள்கையைப் பொருளாதாரத்துக்குப் பொருத்திப் பார்த்தால், தொழிலிலும் வர்த்தகத்திலும் தனியார் முதலீட்டுக்குப் பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்றாகும்; சுதந்திரமான வியாபாரமும் சுதந்திரமான போட்டியும் நடைபெற வேண்டும் என்றாகும். லிபரல் கொள்கையை மக்களின் நெறிகளோடு பொருத்திப் பார்க்கும்போது, சிந்தனைச் சுதந்திரமும் ஆன்ம சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் கிடைக்கும்; தடையின்றி அறிவு வழியில் ஆராய்ச்சி செய்து புதுமைகளைக் கண்டுபிடிக்க வசதி ஏற்படும். இதுவே சுதந்திரக் கட்சியின் கொள்கை.

பொது நலனை ஏற்படுத்துவது எப்படி என்பதே கேள்வி. இரண்டு வழிகள் உண்டு. மக்கள் சுதந்திரமாகச் சிந்தித்து முடிவு செய்து, தங்கள் நலனுக்கிசையத் தாங்களே செயலாற்ற அனுமதிப்பது ஒரு வழி. இரண்டாவது வழி: மக்களின் நலனுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அரசாங்கமே முடிவு செய்து, சட்டத்தின் மூலம் மக்களைச் செயலில் ஈடுபடுத்துவது. மக்களில் யார் எதை எப்படிச் செய்ய வேண்டுமென்பதெல்லாம் இவ்வழியில் சர்க்காராலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இதுவே இந்தியாவில் 'கியாதி' வாய்ந்த பெர்மிட் — லைசென்ஸ் — கோட்டா ராஜ்யமாக உருவெடுத்திருக்கிறது.

ஆங்கில அறிஞர் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (1820-1903) அடியில் வருமாறு எழுதினார் :

> சோஷலிஸ அமைப்பு ஏற்பட்டு விட்டதாயின், அதன் செயல்முறைகளை அமுல் செய்வதற்காக எங்கணும் விரிந்து பரவிக் கிளைவிட்டுக் கொண்டு நிலைபெறும் சோஷலிஸவாதிகள் யாவரும் தங்களது முறையின் நலனுக்குத் தேவையான எல்லாவித பலவந்தங்களையும் தடையின்றிப் பிரயோகிப்பார்கள். (அவர்களது முறையின் நலன் என்பதும் இப்போது அவர்களின் சொந்த நலனாகவே ஆகியிருக்கும்.) உண்மையில் பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் வியாபாரிகள் தொழிலாளிகள் ஆகியோரின் வாழ்வு முழுவதின் மீதும் கடுமையான ஆட்சியைச் செலுத்த அவர்கள் தயங்க மாட்டார்கள். இதன் விளைவாகப் பல வரிசைகளில் அதிகார வர்க்கம் ஓங்கும். இதுவரை உலகம் கண்டிராத பயங்கர முறையில் ராட்சதக் கொடுங்கோன்மை உண்டாகும்.

ஸ்பென்ஸர் தீட்டும் இந்தச் சித்திரத்தில் நாம் இன்றைய இந்தியாவையே ஒருவாறு கண்டு விடலாம். தொழில் நிருவாகத்தில் சர்க்கார் தலையிட்டு, அதில் ஈடுபாடு கொண்டிருந்த தனி மனிதர்களின் கையிலிருந்து பிடுங்கி, ஈடுபாடோ பொறுப்போ இன்றி அதிகாரம் மட்டும் பெற்றுள்ள அதிகாரிகளிடம் ஒப்புவிப்பதற்காக வரிகள் உயர்த்தப்படுகின்றன. குறைபாடுகளோ தவறுகளோ எடுத்துக் காட்டப்பட்டால் அதிகாரத்தில் உள்ளவர்கள் அக்குறைபாடுகளுக்கும் தவறுகளுக்கும் காரணமானவர்களைக் கட்டிக் காத்துப் பேசுவதே வழக்கமாகி விட்டது. இல்லாவிடில் சோஷலிஸத்தையே அல்லவா கைவிட நேரிடும்? சர்க்காரின் கட்டுப்பாடுகள் நாள்தோறும் பெருகிக் கொண்டே யிருப்பதால் இதற்காகப் புதிது புதிதாகச் சிப்பந்திகளை நியமித்துக் கொண்டேயிருக்கவேண்டியுள்ளது. இவற்றுக்காகப் புதுப் புது வரிகள் விதித்தபடியே இருக்கிறார்கள். 'சர்க்காருக்கு உரிய பங்கு எவ்வளவு?' என்ற கேள்வியில் சர்க்காருக்குச் சாதகமாகவே

வரி விதிப்புக் கொள்கை அமைந்திருக்கிறது. ஸ்பென்ஸர் இதையே எளிய முறையில் கூறுவார்:

''இதுவரை உங்களுடைய சம்பாத்தியத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை நீங்கள் சுதந்திரமாக உங்கள் இஷ்டப்படி செலவழித்து வந்தீர்கள்; இனி மேல் அவ்வாறு செலவழிக்க உங்களுக்குச் சுதந்திரமில்லை; அதை நாங்கள் எடுத்துக் கொண்டு பொதுநலனுக்காகச் செலவழிப்போம்'' என்று சர்க்கார் கூறும்.

உண்மையாகவே பல பொதுநன்மைகள் ஏற்பட்ட போதிலும், முன்காலத்தில் சர்க்கார் சிறிதளவு நிர்ப்பந்த முறைகளை மேற்கொள்வதையும்கூட அரசியல் சீர்திருத்தவாதிகள் பெருந் தீங்காகக் கருதினார்கள். ஆனால் இன்றைய அரசாங்கத்திலோ, பொதுநலனைக்கூடக் காரணம் காட்டாமல் பொதுத் தேர்தலில் ஒரு கட்சி பெற்ற பலம் காரணமாகவே அது எப்படி வேண்டுமானாலும் பலவந்த ஆட்சி புரியலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஸ்பென்ஸர் கேட்கிறார்:

மக்கள் தங்களுடைய சுதந்திரத்தையே விட்டுக் கொடுக்கும் விதத்தில் தங்களது வாக்கைச் சுதந்திரமாக உபயோகிக்கிறார்கள் என்பதால், அவர்கள் அதன் பின் அடிமையல்லர் என்று கூற முடியுமா? வாக்கெடுப்பின் மூலம் மக்கள் ஒரு சர்வாதிகாரியைத் தேர்ந்தெடுப்பின், அவர்களே தேர்வுசெய்த சர்வாதிகாரியாயினும் அவர் கீழ் அவர்கள் சுதந்திரமாக இருப்பதாகச் சொல்ல முடியுமா? 'அவர்கள் சுதந்திரமாக அளித்த வாக்கினால்தானே இந்தச் சர்வாதிகாரம் உண்டாயிற்று? எனவே, இச்சர்வாதிகாரத்தில் விதிக்கப்படும் பலவந்தச் சட்டங்கள் யாவும் நியாயமானவையே' என்று சொல்ல முடியுமா? சர்க்கார் எந்த அளவு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறது என்பதைக் கொண்டு தனி மனிதனின் சுதந்திரத்தைக் கணக்கிடக் கூடாது; சர்க்கார் எந்த அளவுக்கு அவனைக் கட்டுப்படுத்தாமல் இருக்கிறதோ, அந்த ஒரே அளவினைக் கொண்டுதான் தனிநபரின் சுதந்திரத்தைக் கணிக்க வேண்டும். பிறமனிதர்களின் உரிமையில் ஒருவன் ஆக்கிரமிப்புச் செய்யாதவாறு அவனைத் தடுப்பதோடு நிற்காமல், அதற்கு மேலும் செல்லுகிற எந்த சர்க்காரும் சுதந்திர முறைக்கு ஒவ்வியதாகாது.

தேர்தல்கள் மக்களின் திறமைகளையோ நடத்தையையோ முன்னேற்றுவதில்லை. மனிதர்களின் நடத்தையைக் கொண்டே ஸ்தாபனங்களின் காரியக்கிரமம் உருவாகிறது. ''சர்வாதிகாரம் வாய்ந்த சிப்பந்திவர்க்கம் வளருவதைத் தடுப்பதற்குப் போதுமான பொது நடத்தை உருவாகவில்லை'' என்று ஸ்பென்ஸர் எச்சரித்தது இன்றைய இந்தியாவில் உண்மையாகி விட்டது.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

காட்கில் நினைவூட்டும் உண்மை

சுதந்திரக் கட்சியின் பூனா மாவட்டக் கிளையினர் கொண்டாடிய ராஜாஜி ஜயந்தி விழாவில் முன்னாள் மத்திய மந்திரியும், பூனா சர்வகலாசாலையின் இன்றைய உப அத்தியட்சகருமான ஸ்ரீ என். வி. காட்கில் அவர்கள் கலந்துகொண்டு மனம் திறந்து பேசினார்.

''பாகிஸ்தான் பிரிவினைக்கு ராஜாஜிதான் காரணம் என்று சமீப காலமாகச் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது! அது ஆதாரமற்றது. நான் அப்போது காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினராக இருந்தபடியால் எனக்கு உண்மை தெரியும். பாகிஸ்தான் பிரிவினையை சர்தார் படேல் ஒப்புக்கொண்ட பின் காரியக் கமிட்டியும் அதற்கு அங்கீகாரம் அளித்தது. இதற்கு ராஜாஜி காரணமல்ல. மாறாக ராஜாஜியோ இதற்கு முன்னரே இந்தியா — பாகிஸ்தான் இரண்டும் பொதுவான பாதுகாப்பு இலாகாவுடன், அரசியலிலும், பண்பாட்டிலும், சமூக ரீதியிலும் ஒரே மதிலுக்குள் வசிக்கும் அமைப்பைக் கூறி வந்தார். துரதிருஷ்ட வசமாக அதை நாம் ஏற்காததால் பிற்பாடு அசல் பிரிவினைக்கே இணங்க வேண்டியதாயிற்று.

''இந்தியாவில் ஜனநாயகம் வளருவதற்கு ராஜாஜி புரியும் பணி மிகவும் முக்கியமானது. ராஜாஜியின் தலைமை காந்திஜியின் தலைமைக்குச் சமமானது; ராஜாஜியின் அறிவோ ஆதிசங்கரரின் அறிவுக்கு இணையானது.''

இவ்வாறு ஸ்ரீ காட்கில் கூறியிருப்பதை ஆள்கிற கட்சியினர் யாவரும் மாற்சரியம் இன்றிக் கவனிக்க வேண்டும்.

ஸாமர்ஸெட் மாம்

உலகில் பேனா பிடித்த சொல்லேர் உழவர்கள் யாவரும் பிரபல ஆங்கில எழுத்தாளர் ஸாமர்ஸெட் மாம் அவர்களின் பெயரை மரியாதையுடன் உச்சரிப்பார்கள். அவர்களுக்கெல்லாம் மாமின் மறைவு பேரதிர்ச்சியாகும். சுமார் எழுபதாண்டு காலமாக ஆங்கில இலக்கிய வானில் ஒரு சுடர்த் தாரகையாகத் திகழ்ந்து, தெள்ளிய நடையில் நவ நவமான உத்திகளுடன் பல நாவல்களையும் சிறுகதைகளையும் விமரிசனங்களையும் அளித்தவர் மாம். ஆன்மிக உந்துதலும் பெற்றவர் அவர். அவரது கத்தி முனை (The Razor's Edge) என்ற நவீனத்தில் ஸ்ரீ ரமண மகரிஷிகளிடம் அவர் பெற்ற அநுபவங்கள் கொப்புளிக்கக் காண்போம். தொண்ணூற்றோராவது வயதில் நெடு மரமாகச் சாய்ந்த மாம் அவர்களின் அடியொற்றிப் புதுக் கன்றுகள் தோன்றுமென நம்புவோமாக!

★

சென்ற வாரத்தில் என் பிறந்த நாளை யொட்டி என் சார்பில் பிரார்த்தித்தவர்களுக்கும் நல்வாழ்த்து அனுப்பியவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

★

முன்பே நான் ஆட்சேபித்த ஒரு விஷயமாக மீண்டும் ஆட்சேபனை தெரிவிப்பது அவசியம் எனக் கருதுகிறேன். ஸி. ஐ. டி. போலீஸ் முதலிய சர்க்கார் இலாகாக்கள், குறிப்பிட்ட நபர்கள் சுதந்திரக் கட்சி அங்கத்தினரா என்று கேள்வி கேட்பதும், கடிதங்களை உடைத்துப் பார்த்துக் காங்கிரஸ் கட்சிக்குச் சாதகமாகத் தகவல் சேகரிப்பதும், காங்கிரஸின் உபயோகத்துக்காகச் சுதந்திரக் கட்சிக் கூட்டங்களில் குறிப்பெடுப்பதும் வெட்கக்கேடான செயல்கள். சர்க்கார் இலாகாக்கள் நாடு முழுவதற்குமாக ஒரே போல் பணி புரிய ஏற்பட்டவை; ஒரு கட்சி ஆட்சியிலுள்ளது என்பதால் அக்கட்சிக்குத் தொண்டு செய்ய ஏற்பட்டவையல்ல.

சமீபத்தில் நண்பரொருவரிடம் ஸி.ஐ.டி. இலாகாவினர் சென்று, அவர் சுதந்திரக் கட்சியில் சேர்ந்திருக்கிறாரா எனக் கேட்டிருக்கிறார்கள். எனக்கும் அவருக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்து நடுவில் உடைத்துப் பார்க்கப் பட்டிருப்பதிலிருந்தே இந்த விசாரணை எழுந்திருக்கவேண்டும். இவ்வாறு கடிதங்களை உடைத்துப் பார்ப்பது மக்களின் சுதந்திர உரிமைக்கு முரணானது; எனினும் இது நீண்ட கால நடைமுறையாய் ஒரு சம்பிரதாயம் போலாகி விட்டது. இதைவிடக் கொடுமை, ஒரு கட்சியின் நோக்கத்துக்காகப் போலீஸைப் பயன் செய்து கொள்வது. அந்நியர்களான பிரிட்டிஷாரின் ஆட்சியில் போலீஸாரைக் கொண்டு காங்கிரஸ்காரர்களைப் பற்றித் தகவல் சேகரித்தார்கள். ஆனால் ஜனநாயகச் சுதந்திர இந்தியாவில் ஆட்சி செலுத்தும் சர்க்கார் அந்த வழக்கத்தைப் பின்பற்றுவது நியாயமாகாது. சட்டத்துக்கிணங்க நடைமுறைகளை விரைவில் ஒழுங்கு செய்ய வேண்டும்.

ஸி. ஐ. டி. சர்வீஸுக்குக் காங்கிரஸ் கட்சி சம்பளம் தரவில்லை. அது தனக்கென்றே உளவாளிகளை வைத்துக் கொள்ளட்டும். தேசிய போலீஸையும், மாஜிஸ்திரேட்டுகளையும், தபால் அதிகாரிகளையும் உபயோகப்படுத்திக் கொள்ளக் காங்கிரஸுக்கு உரிமையில்லை.

★

தாஷ்கென்டில் இந்தியா — பாகிஸ்தான் தலைவர்கள் சந்திப்பதால் நன்மை உண்டாகும் என்று நம்பி, இச்சந்திப்புக்கு என் ஆசியை அளிக்கிறேன்.

பாகிஸ்தான் — இந்தியா இரண்டையும் நட்பில் நெருங்கச் செய்வதோடு, ருஷியா—அமெரிக்கா ஆகிய இரு வல்லரசுகளையும் நெருங்கச் செய்யக் கூடிய வாய்ப்பும் தாஷ்கென்ட் சந்திப்பில் உள்ளது. இதனால் இச்சந்திப்பு சரித்திர முக்கியத்துவமும் பெறக் கூடும். இச்சந்திப்புக்கு ஜனாதிபதி ஜான்ஸனின் மனப்பூர்வமான வாழ்த்து உண்டு என்பது இப்போது ஐயமற வெளியாகியுள்ளது.

ஸ்ரீ லால் பகதூர் அவர்கள் தமக்குக் கிடைத்துள்ள இந்த மகத்தான வாய்ப்பையும், இதன் மூலம் இந்தியா — பாகிஸ்தான் இருநாடுகளுக்கும் நிரந்தரமான நன்மை செய்யத் தமக்குச் சக்தி உள்ளதென்பதையும் உணர்ந்திருப்பாரென நம்புகிறேன். இச் சந்தர்ப்பத்தில் சந்தேகம் என்கிற கவசத்தில் தமது மனத்தை அவர் மறைத்துக் கொள்ளக் கூடாது. ஐயங்களை ஈசுவரன் பொறுப்பாக்கி அவர் இதயம் திறந்து பேச வேண்டும்.



சோவியத் பிரதமராயினும் சரி, பாகிஸ்தான் ஜனாதிபதியாயினும் சரி ஒருவரிடமுள்ள நல்லதை வெளிக் கொண்டு வந்து செயலில் ஈடுபடுத்தும் வழி, நாம் நம் இதயத்தைத் திறந்து பேசுவதே. இதை நான் பிரதமருக்கு நினைவூட்ட அவசியமில்லை. மனம் விட்டுப் பேசுவதால் ருஷியப் பிரதமரும் பார்வையாளராக ஒதுங்கி இராமல் நேரடியான அக்கறை செலுத்த முடியும்.

இந்தச் சந்திப்பு வெறுமே பேரம் பேசுகிற விஷயம் அல்ல. ஒத்துழைப்பையும் நன்னம்பிக்கையையும் எழுப்புவதில் வெற்றி அல்லது தோல்வியை நிர்ணயிக்கும் சந்திப்பு இது. தாஷ்கென்ட் சந்திப்பின் முக்கியத்துவத்தைச் சீனம் உணர்ந்திருப்பதாலேயே இப் பேச்சுவார்த்தை ரத்தாக வேண்டும், அல்லது தள்ளிப் போடப்பட வேண்டும் என்கிற முயற்சியில் இறங்கி, நமது எல்லைப் புறத்தில் ஊடுருவல் செய்து வருகிறது. சந்திப்பின் விளைவில் நான் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறேனோ அந்த அளவுக்குச் சீனம் பயம் கொண்டிருக்கிறது.

சமயத்துக்கு உரிய தீர்வை விட்டு 'இப்படி நடந்திருக்கலாமே' என்று பிறகு வருந்துவதில் பயனில்லை. தாஷ்கென்ட் சந்திப்பு பிற்காலத்தில் இம்மாதிரி வருத்தத்துக்கு இடம் தராமலிருக்க ஈசன் அருள்வானாக!

★

தென்காசியைச் சேர்ந்த ஹமீத் அவர்களின் மறைவில் சுதந்திரக் கட்சி ஒரு பெரும் நஷ்டத்துக்கு ஆளாகி-யுள்ளது. முந்தைய திருநெல்வேலி மாவட்ட சுதந்திரக் கட்சித் தலைவர் ஸ்ரீ ராமசுவாமி கோனார் மறைந்தவுடன் அப்பொறுப்பை ஸ்ரீ ஹமீத் ஏற்றுக் கொண்டார். இருவருமே மாவட்ட மக்களின் பெருமதிப்பைப் பெற்றிருந்தவர்கள். திருநெல்வேலிச் சீமைக்கு ஏதோ துரதிருஷ்ட தசை நடப்பதாகவே தோன்றுகிறது.

சென்னையில் சதஸ்



ஸ்ரீமது காமகோடி ஜகத்குரு அவர்களின் சந்நியாச பட்டம் 'இந்திரசரஸ்வதி' என்பதாகும். 'சரஸ்வதி' என்ற பதம் முற்றிலும் பொருந்துமாறு அவர்கள் ஆயகலைகள் அறுபத்துநான்கிலும் தேர்ச்சி பெற்றுத் தாமே ஒரு நடமாடும் சதஸாக விளங்குகிறார்கள். இவர்கள் சென்ற நாலாண்டுகளாகக் கலைகளைப் பேணும் பொருட்டு நடத்திவரும் வியாஸ பாரத ஆகம சில்ப சதஸின் பெருமையை நாடறியும். இந்த ஆண்டு சதஸ் சென்னையில் நடைபெற்றது இந்நகர் செய்த பாக்கியம். நெருக்கடி நிலைமை, மின்வெட்டு இவை காரணமாக இவ்வருஷ சதஸில் கலைகாட்சியும், கிராமக் கலைகளும் இடம்பெற முடியவில்லை. ஆனால் சிறிய அளவில் நடைபெற்ற இச்சதஸில் இத்தனை ஆண்டுகளாக இல்லாத பஞ்சாங்க கணனமும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

பிரபஞ்ச விஷயங்கள் அவ்வளவும் இடம் (Space) காலம் (Time) என்ற இரண்டுக்குள் அடங்கிவிடும். இடத்தால் அளவு கட்ட முடியாத ஆண்டவனை ஆகம சாஸ்திரங்களும் சிற்பங்களும் ஓரிடத்தில் தேக்கித் தருகின்றன. அதே போல் காலத்தால் கட்ட முடியாத கடவுளைக் காலத்துக்குள் காட்டிக் கொடுக்கிறது பஞ்சாங்கம். எனவே, பஞ்சாங்க கணனமும் சதஸில் இடம் பெற்றது பொருத்தம்தானே?



இம்மாதம் பதின்மூன்றுந் தேதி காலையில் சிவாசாரியர்களும், பட்டாச்சாரியர்களும், ஸ்தபதிகளும், சாஸ்திர வித்பன்னர்களும் புடைசூழ,



ஆகம — சிற்ப சாஸ்திர சுவடிகளைத் தாங்கிய யானைகள் முன் செல்ல, ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் மயிலையில் ஊர்வலமாக வந்து, சதஸ் நடைபெற்ற ஸ்ரீகபாலீசுவரர் — கற்பகாம்பிகை கல்யாண மண்டபத்தை அடைந்தார்கள். ஸ்ரீ வி.எல். தியாகராஜ முதலியார் வரவேற்புரை வழங்கினர். தொடக்கவுரை ஆற்றிய முதன்மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் பழைய கோயில்களில் புது மோஸ்தர் சந்நிதிகளைச் சேர்ப்பதன் பொருத்தமின்மையை எடுத்துக் கூறினர்.

கோடெடுத்த கவிக்கலையாகத் திருவாய் மலர்ந்தார் ஸ்ரீ ஜகத்குரு அவர்கள்: சோஷ

விஷத்துக்காக இறைவனை ரத்து செய்யும்போது சம்பிரதாயக் கலைஞர்களுக்கு உரிய புராதன மானியங்களை நிறுத்தி விடக்கூடாது என்று அவர் யோசனை கூறினார். 'கோவில்களும் சிற்பங்களும் நாடோடிக்கதை — பாடல் — கூத்து இவையும் எழுத்தறிவில்லாதவருக்கும் பண்பை ஊட்டின; இறைவன் சந்நிதானத்தில் நடைபெறும் சாக்கியர் கூத்தில் இடம்பெற்ற கிராமக் கலைஞர்கள் மன்னனின் தவற்றையும் நாடக உத்திபாக எடுத்துக் கூறி நயமாகக் கண்டிக்கும் உரிமை பெற்றிருந்தனர்' என்று எடுத்துரைத்தார்.

சதஸ் நடைபெற்ற ஐந்து நாட்களிலும் சிவாசாரியர்களும் பட்டாசாரியர்களும் சிற்பிகளும் ஜோதிஷ வல்லுநர்களும் கலை விற்பன்னர்களும் சுவையான ஆராய்ச்சிகளும் சர்ச்சையும் செய்தனர். கோயில்களில் வழிபடும் மூர்த்திகளுக்கு பெயர்வைப்பது எப்படி, பரிவார தேவதைகளின் நிலைகள் என்ன, கோயில் வலம்வரும் வழி யாது, என்பன போன்ற விஷயங்களில் தெளிவான விளக்கங்கள் தரப்பட்டன.

'ஆகமம்' என்றால் வருதல் என்று பொருள். தெய்வ சக்தியை ஒரு சிலைக்குள் கொண்டுவருவதே 'ஆகம சாஸ்திரம்' என்பதுபோன்ற பல கருத்துக்களைத் தெரிந்துகொண்டோம். முறைப்படி கட்டப்பெற்ற கோயிலின் அமைப்பைக் கொண்டே அதற்குள் உறையும் மூர்த்திகளின் இயல்பைக் கூறிவிடலாமாம்!

இந்தியப் பண்பின் கருவூலமான ராமாயணம் நம் வாழ்வில் எப்படி ஊறியுள்ளது என்பதைக் காண இங்கு வந்துள்ள பக் அவர்களை அறிமுகம் செய்த டாக்டர் வே. ராகவன், ராமாயணக் கதை எத்தனை விசித்திரமான பேதங்களுடன் கிழக்காசியா முழுவதிலும் பரவியுள்ளது என்பதை விளக்கினார். '95 சதவிகிதம் முஸ்லீம் ஜனத் தொகையைப் பெற்றுள்ள இந்தோனேஷியாவில் ராமாயணச் சித்திர நூல்கள் சிறுவர் யாவருக்கும் அச்சிட்டுத் தரப்படுகின்றன. இந்தியக் குழந்தைகளின் கல்வித் திட்டத்திலும் இராமாயணத்தைச் சேர்க்க ஸ்ரீ ஆசாரியர்கள் தூண்டுகோல் அளிக்க வேண்டும்' என்று ஸ்ரீ ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் கேட்டுக்கொண்டார். சகல கலைகளையும் 'சோஷலிஸ முறை'யில் அனைவரும் அநுபவிக்க ஏற்பட்ட இடமே ஆலயங்கள் என்பதை விளக்கினார் ஸ்ரீ சா. கணேசன்.

கோயில்களில் இடம் பெற்றுள்ள ஆபாசப் பொம்மைகள் பற்றியும் விவாதம் நடைபெற்றது. விஷயம் ஆபாசத்தைப் பற்றியாயினும் விவாதம் ரஸமாக இருந்தது. பிரபஞ்சம் முழுவதையும் கோபுரம் பிரதிபலிக்க வேண்டுமாயின் அதில் ஆபாசத்துக்கும் இடம் தரவேண்டும் என்றார் ஒருவர். அவரவரும் தம் மனத்தைச் சோதித்துப் பார்த்துக் கொள்ள ஏற்பட்டவையே இவை என்றார் இன்னொருவர். எப்படியாயினும் அந்நியர்களின் பழிச் சொற்களைப் பெற்றுத் தரும் இவை, சாஸ்திர சம்மதமானவை யல்லவாதலால் இவற்றை அகற்றிவிடலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

பதினேழாம் தேதி வெள்ளிக் கிழமையன்று சதஸின் பூர்த்தி விழாவில் தெள்ளத் தெளியப் பேசினார் ஸ்ரீ ஸ்வாமிகள். தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி ஒவ்வொரு சிறிய கோவிலுக்கும் தேர் கட்டி, அதனை மக்கள் அனைவரும் எவ்வித பேத உணர்ச்சியுமின்றி இழுத்துச் செல்வதேயாகும் என்றார்.

கோயில்களில் சேவார்த்திகள் சுத்தமாகச் செல்ல வேண்டியது அவசியம்; உல்லாசப் பயணம் செய்யும் பெண்டிர் இது விஷயத்தில் கவனமாயிருக்கவேண்டும் என்று ஸ்வாமிகள் கூறியது நெஞ்சைத் தொட்டது.



சதஸைத் தொடங்கி வைத்த முதன் மந்திரி.



வரவேற்புக் கமிட்டித் தலைவர் வி. எஸ். டி.



அறநிலைய ஆணையாளர் சாரங்கபாணி முதலியார்.

கோயில்கள், சிற்பங்கள், ஸ்தல புராணங்கள் இவை யாவற்றையும் தொகுத்துக் கலைக் களஞ்சியமாக வெளியிட வேண்டும் என்ற அரிய யோசனையையும் ஸ்ரீ ஸ்வாமிகள் வெளியிட்டார்கள். அவர்களின் வாக்கே காரியத்தை நடத்தித் தரும். அறநிலைய ஆணையாளரும் இவ்விஷயத்தில் முனைந்திருக்கிறார் என நம்புகிறோம். எனவே இந்த சதஸ் ஒரு கலைக் களஞ்சியத்தைப் பிறப்பித்த பெருமையே பெறக் கூடும்.




செய்திப் படங்கள்








சென்னை தியாகராயநகர் சுகன்விகார் கட்டிடத்தில் சுதந்திரக் கட்சிக் கூட்டம் டிசம்பர் 6ந்தேதி ஸ்ரீ சித்ரா நாராயணசாமி அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. ராஜாஜி அவர்கள் உடல்நலம் தேறிக் கலந்து கொண்ட முதல் கூட்டம் இது. ராஜாஜிக்கு எண்பத்தெட்டாவது வயது பிறப்பதையொட்டி அன்று அவருக்குப் பூரண கும்பம் வழங்கி மரியாதை செலுத்தினர். தேர்தல் நிதிக்கு ஆயிரம் ரூபாய் ராஜாஜியிடம் வழங்கினர். இந்தக்கூட்டத்தில் டாக்டர் ஹாண்டே, விருதுநகர் சுப்பிரமணிய நாடார், ஸ்ரீ எஸ். வை. கிருஷ்ணசாமி முதலியவர்கள் பேசினர்.





கால்கேட், பாமாலிவ் ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ வி. எல். கோடிகால் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு ஒரு லட்சம் ரூபாய் மகாராஷ்டிர முதன் மந்திரியிடம் அளிக்கிறார்.

●

ஆசிரியர்களுக்கான தேசிய விருதை ராமநாதபுரம் ராஜா ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ எம். ராஜா அவர்களுக்கு ராஷ்டிரபதி வழங்குகிறார்.



வெற்றித் திருநகர்

அகிலன்



அத்தியாயம் பதினேழு

இளைஞனின் தனிக்குரல்!

மேல்மாடத்தின் சாளரத்தின் அருகில் நின்றவாறே கீழே கூடத்தில் நடைபெற்ற பேச்சுக்களை உற்றுக் கேட்டான் விசுவநாதன். அவன் அப்படிக் கேட்பதை யாரும் கண்டுவிடக் கூடாது என்று கவலைப்படுபவள்போல் அவனுக்குப் பாதுகாப்பாக நின்றாள் லட்சுமி. கூட்டத்தில் பேசியவர்கள் இப்போது உணர்ச்சி வயப்பட்டிருந்ததால் அவர்களது குரல் அவனுக்குத் தெளிவாகவே கேட்டன.

அச்சுதராயரும் அமரநாயக்கர்களும் சக்கரவர்த்தியின் நோக்கத்துக்கு மாறாக வெளிப்படையாகவே தங்கள் தங்கள் எண்ணங்களை வெளியிட்டார்கள். அவர்களில் யாருக்குமே வடக்கே படையெடுத்துச் செல்வதுகூட அவ்வளவு தவறாகப்படவில்லை. ஆனால் பிற நாடுகளை வென்று சாம்ராஜ்யத்தின் பரப்பைப் பெருக்குவதற்கென்றால் மட்டிலுமே போர் தொடுக்க வேண்டும் என்றார்கள்.

அச்சுதராயர் அதை மறுபடியும் வலியுறுத்திப் பேசினார்:

''விஜயநகரம் என்றைக்குமே போர் தொடுக்கப் பின்வாங்கியதில்லை. முன்பு வடக்கேயிருந்து எப்படி ஊழிப் பெருக்காகத் தெற்கு நோக்கி வந்தார்களோ, அதே போல் வேண்டுமானால் நாம் வடக்கு நோக்கித் திரண்டு செல்லலாம். அப்படிச் செல்ல நம்முடைய படைகள் மட்டிலுமே போதும். வெற்றி நம்முடைய சொந்த வெற்றியாக இருக்கும். நாடுகளைக் கைப்பற்றி அங்கங்கே நம் ஆட்சியை நிலைநாட்டலாம்.''

''சக்கரவர்த்திகளுக்குப் போர் வெறி கிடையாது. அப்படி யிருந்தால் இதற்குள் வடக்கிலுள்ள அண்டை அயல்நாடுகளை வென்று விஜயநகரத்தோடு இணைத்திருப்பார்கள்'' என்றார் சாளுவ நரசிம்மர்.



''பிறகு எதற்காக இந்தப் போர்? டில்லியை வென்று கைப்பற்றினால் நமக்கென்ன கவலை? காபூல்காரனும் நமக்கு ஒன்றுதான்; இப்போது உள்ள இப்ராஹிம் லோடியும் ஒன்றுதான். தெற்கிலுள்ள நாம் இதனால் பாதிக்கப்படப் போவதில்லை. எதற்காக நாம் வரிந்து கட்டிக் கொண்டு அவ்வளவு தொலைவில் போய்ப் போராட வேண்டுமென்று கேட்கிறேன்.''

அச்சுதராயரின் பேச்சு விசுவநாதனுக்கு ஆத்திரமூட்டத் தொடங்கியது. உடனடியாக இதற்கு அமைச்சர் மறுமொழி கூறினார்.

''இளவரசே! தங்களுடைய இந்தக் கருத்தோடு நான் மாறுபடுகிறேன்'' என்றார் அமைச்சர்.

''ஏன்?''

''நமது வாழ்வைக் குலைப்பதற்காக நடைபெற்ற அன்னியப் படையெடுப்புக்கள் ,எல்லாமே இதுவரையிலும் வடக்கிலிருந்துதான் நடைபெற்றிருக்கின்றன. டில்லியோடு அவை நின்று விடாமல் தெற்கே குமரிமுனை வரையிலும் அவை சென்றிருக்கின்றன. ஆகவே டில்லி நமக்கு ஓர் அரண்போல் விளங்கினால் தான் இனிமேலாவது நாம் பாதுகாப்போடு வாழலாம் என்று சக்கரவர்த்தி கருதுகிறார். இது தீர்க்கதரிசனத்தோடு உள்ள கருத்து மட்டுமல்ல; பயங்கரமான பழைய அநுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினையும்கூட!''

விசுவநாதனுக்கு அமைச்சர்மீது இப்போது தான் முழு நம்பிக்கை ஏற்பட்டது. பரபரப்போடு அவனும் அங்கு சென்று அமைச்சருடன் சேர்ந்து கொள்ளத் துடித்தான்.

அதற்குள் அச்சுதராயரின் குரல் கேட்டது:

''அமைச்சர் கூறுவது சரிதான். ஆனால், இப்போது உள்ள சூழ்நிலையில் நமக்கு மற்றவர்களுடைய ஒத்துழைப்புக் கிடைக்காது. இதில் நாம் தோற்று விட்டால், பிறகு லாகூர்க்காரனும், காபூல்காரனும் நேரே விஜயநகரத்துக்கே வந்து விடுவார்கள்.''

''இதுவும் யோசனை செய்ய வேண்டிய விஷயந்தான்'' என்று தயக்கத்தோடு கூறினார் அமைச்சர். ''மண் குதிரைகளை நம்பி ஆற்றில் இறங்கத் துணிந்து விட்டார் சக்கரவர்த்தி.''

''நம்புவது இருக்கட்டும். பாமினி சுல்தான்கள் நம்மோடு ஒத்து வரமாட்டார்கள். அவர்களுக்குள் நடக்கும் போர் களே இன்னும் ஓய்ந்தபாடில்லை'' என்றார் அச்சுதராயர்.

''ஆமாம்'' என்று நம்பிக்கையிழந்த குரலில் கூறினார் அமைச்சர்.

அதற்கு மேலும் அங்கு விசுவநாதனால் பொறுத்துக் கொண்டு நிற்க முடியவில்லை. இராஜதந்திரியான அமைச்சர் அச்சுதராயரைத் திருப்பிச் சக்கரவர்த்தியின் வழியில் திருத்துவதற்குப் பதிலாக, அச்சுதராயருக்குப் பின்னால் போய் நிற்பதுபோல் தோன்றியது.

''லட்சுமி! நான் இப்போதே அங்கு போக வேண்டும்'' என்று கூறி விட்டு, அவளுடைய சொல்லுக்குக் காத்திராமல், வெகு வேகமாக விரைந்தான் விசுவநாதன். லட்சுமி பதறிப் போனாள். கூண்டுக்குள் இதுவரையிலும் அடைபட்டிருந்த புலி, இப்போது கூண்டைப் பின்னோக்கித் தள்ளிவிட்டுப் பாய்ந்து செல்வது போல் அவளுக்குத் தோன்றியது. கண்ணீர் பொங்க அவனுக்கு முன்னால் ஓடிச் சென்று படிகளில் நின்று கொண்டாள்.

''வேண்டாம்! அப்பாவும் வருத்துவார்கள். அச்சுதராயரும் மற்றவர்களும் தங்கள் மீது பகை கொள்வார்கள். வேண்டாம்!'' என்று தடுத்தாள் லட்சுமி.

''நாட்டின் தலைவிதியை முடிவு செய்யும் கூட்டம் இது. இந்த நாட்டின் தலைவிதியை மாற்றியமைத்த தலைவரின் குரலை நான் இதில் பிரதிபலிக்கப் போகிறேன். கோழையாக நான் ஒதுங்கியிருக்கும் நேரமில்லை இது. தயவுசெய்து என்னை விட்டுவிடு!'' என்று துடித்தான் விசுவநாதன்.

லட்சுமியின் கண்களில் அருவி பொங்கியது. தன்னையும் மறந்து போய் அவனுடைய கரங்கள் இரண்டையும் அவள் இறுகப் பற்றிக் கொண்டாள். மெல்லிய குரலில் அவனிடம் மன்றாடினாள் அவள்.

அவளுடைய மென்தளிர்க் கரங்களின் முதல் ஸ்பரிசம் அவனை மெய்சிலிர்க்க வைத்த தென்றாலும், அதனால் அவனுடைய மனக் குமுறல் தணியவில்லை. அவளிடம் கெஞ்சுவது போல் தனது நிலையை விளக்கிவிட்டு, வேகமாகப் படிகளில் பாய்ந்து சென்றான். லட்சுமி அப்படியே நிலைகுலைந்து போய்ப் படிகளில் சாய்ந்து விட்டாள். அவளுடைய கண்ணீர் நிற்கவில்லை.

வாயில் காவலர்கள் அங்கு நிற்பதையே பொருட்படுத்ாதவன்போல் அவர்களுடைய வேல்களை ஒதுக்கிக் கொண்டு கூடத்துக்குள் புகுந்தான் விசுவநாதன். அவன் அங்கே நின்ற காட்சியைக் கண்டுவிட்டு அனைவருமே திடுக்கிட்டார்கள். அமைச்சர் சாளுவநரசிம்மர் முதலில் பிரமித்து விட்டு, பிறகு முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, ''சக்கரவர்த்திகள் உன்னை அவசரமாக அனுப்பியிருப்பார்கள் போலிருக்கிறது'' என்று மழுப்பினார்.

''ஆமாம்!'' என்றான் விசுவநாதன்.

அச்சுதராயர் .முதல் அங்கிருந்த அனைவருமே வெலவெலத்துப் போனார்கள். கூட்டத்திலிருந்த எல்லா விழிகளும் அவன் முகத்தில் பதிந்திருந்தன.


''என்ன செய்தி?'' என்று அமைதியோடு கேட்டார் அமைச்சர்.

''பாமினி சுல்தான்களை அணுகும் முறையில் அணுகியிருப்பதால் கட்டாயம் பலன் கிடைக்கும் என்று சக்கரவர்த்திகள் நம்புகிறார்கள். அவரில் பீஜப்பூரும் கோல்கொண்டாவும் இணங்கி விட்டால்கூடப் போதுமென்றார்கள். இதைத் தங்களிடம் தெரிவிப்பதற்காகவே இங்கு வந்தேன்.''

விசுவநாதனை அன்போடு அழைத்துத் தமக்கருகே அமரச் செய்தார் சாளுவநரசிம்மர். தமக்குள் சிரித்துக் கொண்டார். அவருக்கு எல்லாமே விளங்கி விட்டன. துடிப்புமிக்க இளைஞன் தமது குமாரத்தியின் அன்புப் பிடியையும் மீறிக் கொண்டு அங்கு வந்திருக்



மக்ளீன்ஸ் பற்பசையின் புதிய புல்லரிக்கும்
ருசியே சொல்லும் உங்களுக்கு,
அது செயலாற்றுகிறதென்று!
சுத்தமாக்க
– உங்கள் பற்களிலிருந்து அந்த மங்கிய மஞ்சள் திரையைப் போக்குகிறது
வெண்மையாக்க
– அவைகளுக்கு அந்த அதிகமான வெண்மையைத் தருகிறது
காக்க
Macleans
tooth paste
மக்ளீன்ஸ்–அதிவெண்மையான பற்பசை


காட்பரி- ஃப்ரையிலிருந்து
இனிய விருந்து...
Cadbury-Fry
பரவசமூட்டும் பல
சுவை இனிப்புகள்
ஆழ உட்பொதிந்த சத்து
வளமிக்க, ஆடைமயமான
பால் சாக்லேட்.
இஷ்டம்போல் தேர்ந்
தெடுக்க எண்ணற்ற
ரகங்கள்:
பட்டர்ஸ்காட்ச்
காரமெல்ஸ்

இருள் என்பதை உணர்ந்துகொள்ள அவனுக்கு நெடுநேரமாகவில்லை.

"அதுதான் நம்முடைய மிகப் பெரிய சோதனை. நாம் என்றுமே ஒன்றுபட்டுப் பகைவருக்கு எதிராகத் திரண்டெழுந்து நின்றதில்லை. வழக்கத்துக்கு மாறான முயற்சியாக இது இருப்பதால்தான் எல்லோரும் தயங்குகிறார்கள். அவர்களுடைய தயக்கத்தையும் நாம் புறக்கணித்துவிட முடியாது" என்றார் அமைச்சர்.

அமைச்சரின் இராஜ தந்திரத் தராசு இப்போது அச்சுதராயர் பக்கம் சாய்ந்ததால், அச்சுதராயர், "பாமினிசுல்தான்கள் ஒருகாலும் ஒன்றுபட்டு வரமாட்டார்கள்!" என்று கூறினார்.

"அவர்களுடைய சொந்த நலனுக்காகவே அவர்கள் ஒன்றுபட்டு வரவேண்டும். மேலும் சக்கரவர்த்திகளை அவர்கள் நேரடியாகப் பகைத்துக் கொள்ளவும் துணியமாட்டார்கள். அதற்காகவாவது அவர்கள் இணைந்து நிற்பார்கள்" என்றான் விசுவநாதன்.

கூடியிருந்தவர்கள் யாவரும் இதைக் கேட்டுத் திடுக்குற்றார்கள். சக்கரவர்த்தியின் பகை கூடாது என்பதற்காகப் பாமினி அரசுகள் கூடிவிட்டால் என்ன செய்வது? இந்தக் கவலை ஒன்றுதான் அவர்களை வாட்டிக் கொண்டிருந்தது. சக்கரவர்த்திகள் அனுப்பியுள்ள தூதுவர்கள் வெற்றியுடன் திரும்பி விட்டால்?

அது வெற்றி பெறாமல் இருப்பதற்கான வழிகளை ஆராய்வதற்கும், அதில் அமைச்சரின் பேருதவியைப் பெறுவதற்குமே அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் சார்பாக அமைச்சர் இறங்கி வரும் வேளை பார்த்து எங்கிருந்தோ இவன் வந்து முளைத்து விட்டானே!

"சக்கரவர்த்திகளின் கருத்து ஒருவிதத்தில் மிகவும் உறுதியான கருத்து: இனியும் நாம் நமக்குள் பகைத்துக் கொண்டு ஒன்று சேராமலிருந்தால், முதலில் நம் நாடுகள் ஒன்றோடொன்று போரிடும் நிலை ஏற்படும். இதைப் பயன்படுத்திக் கொண்டு எல்லையில் காத்திருக்கும் அன்னியர்கள் நம் மீது பாய்வார்கள். பிறகு விஜயநகரமும் நிலைக்காது; பாமினி நாடுகளும் நிலைக்கப் போவதில்லை. கால மாறுதலுக்குத் தக்கபடி நாம் சிந்தித்துப் பழக வேண்டும். புதிய சிந்தனையும் செயலும் நமக்கு வேண்டுமென்கிறார் சக்கரவர்த்தி" என்று தனது உள்ளத்தைத் திறந்து, அதில் குமுறிக் கொண்டிருந்த எண்ணங்களை அங்கு கொட்டி விட்டான் விசுவநாதன்.

அச்சுதராயருக்கு அளவற்ற கோபம். வயதிலும் அநுபவத்திலும் குறைந்த ஒருவன் அந்த இடத்தில் துணிவோடு பேசியது அவருக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. என்றாலும் அவன் சக்கரவர்த்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரியாகி விட்டான். ஆகவே அவர் பொறுத்துக் கொண்டார்.

"விசுவநாதா! நீ கூறியது முற்றிலும் உண்மை!" என்று அவனைத் தட்டிக் கொடுத்து விட்டு, அச்சுதராயரை ஓரக் கண்களால் பார்த்தார் சாளுவநரசிம்மர். பிறகு, "எல்லோருமே சாம்ராஜ்யத்தின் நன்மையை மனத்தில் வைத்துக் கொண்டு தான் இருக்கிறோம்; அதை மட்டும் யாரும் மறந்துவிட மாட்டோம்" என்று அவனுக்கு மறுமொழி கூறுவது போல் கூறினார்.

விசுவநாதனுக்கு அதற்கு மேல் அங்கு தங்கியிருக்கப் பிடிக்கவில்லை. அவனுடைய கடமையைச் செய்துவிட்ட மன நிறைவு அவனுக்கு ஏற்பட்டது. இருந்தாலும் அமைச்சரின் மறுமொழியும் கூடியிருந்தவர்களின் போக்கும் அவனுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியவையாக இல்லை.

விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து எழுந்தான். வெளியே வந்த போது அங்கே அவனுக்காக வெளுத்த முகத்தோடு லட்சுமி காத்து நின்றாள்.

அவளைத் தனியே அழைத்துச் சென்று, "எனக்கு ஓர் உதவி நீ செய்ய வேண்டும்" என்றான் விசுவநாதன்.

"என்ன?"

"உன்னுடைய அப்பாவின் முடிவுதான் இந்தக் கூட்டத்தின் முடிவாக இருக்கும். அதை நீ எப்படியாவது அவரிடமிருந்து அறிந்து கொண்டு வந்து எனக்குச் சொல்ல வேண்டும்."

அவள் தயங்கினாள்.

"நீ கூறுவது இரகசியமாகவே இருக்கும். அதை நான் யாரிடமும் வெளியிட மாட்டேன்...."

"நான் அறிந்து கூறுகிறேன்" என்று தழுதழுத்த குரலில் கூறினாள் லட்சுமி.

விசுவநாதனின் குதிரை வேகமாகப் பறந்து சென்றது.

அத்தியாயம் பதினெட்டு

இருளில் நடந்தது

விசுவநாதன் திரும்பிச் சென்ற பிறகு அமைச்சரின் மாளிகையில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. அமரநாயக்கர்களுக்கு அதற்குமேல் எதையும் வாய் திறந்து பேசுவதற்குத் துணிவு ஏற்படவில்லை. நிலைமையை உணர்ந்து கொண்ட அச்சுதராயர் அவர்களுக்கெல்லாம் விடை கொடுத்து அனுப்பி விட்டுத் தனியே அமைச்சரிடம் ஆலோசனை செய்யத் தொடங்கினார்.

லட்சுமி மேல்மாடத்துச் சாளரத்தருகே சென்று அவர்களது பேச்சை உற்றுக் கேட்க முனைந்தாள். அவர்கள் தங்களுக்குள் மிகவும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டதால் அவளால் எதையும் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. சற்று நேரம் கழித்து அவர்கள் இருவரும் பின்புறத் தோட்டத்துக்குள் புகுந்தார்கள். திராட்சைக் கொடிகளுக்கிடையில் நடந்து பளிங்குமேடையை

நோக்கி நடந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டவுடன் ஏனோ லட்சுமிக்கு நெஞ்சு கனத்தது.

'அமைச்சர் அப்பாஜி அந்தரங்கமாகப் பேசும் அதே பளிங்குமேடைக்கு அப்பாவும் அச்சுதராயரை அழைத்துக் கொண்டு செல்கிறாரே! அவர் சென்ற அதே வழியில் அப்பாவும் செல்லத் துணிந்து விட்டாரோ? அப்பாஜிக்குக் கிடைத்த தண்டனை அதற்குள் இவருக்கு மறந்து போய் விட்டதா ?'

லட்சுமிக்கு அவர்கள் பேச்சைக் கேட்க வேண்டுமென்ற துடிப்போடு, அவள் தந்தையின் செய்கையால் ஒரு வகை அச்சமும் ஏற்பட்டது. நேரமும் இருள் பரவும் நேரம். சற்று முன்பு அவளும் விசுவநாதனும் அங்கு சென்றபோது இருந்த மாலை நேரத்தின் மஞ்சள் கதிரொளி இப்போது அங்கே தவழவில்லை. மெல்ல மெல்ல இருள் புகுந்து கொண்டிருந்தது.

சந்தடி செய்யாமல் திராட்சைக் கொடிகளின் மறைவில் அவர்களைப் பின்பற்றினாள் லட்சுமி. அவர்கள் இருவரும் மரங்களின் பின்புறம் சென்று பளிங்குமேடை மீது மிகவும் நெருக்கமாக அமர்ந்தார்கள். அவர்கள் பேசிக் கொண்டது எதுவுமே லட்சுமியின் செவிகளில் விழவில்லை. அந்த அளவுக்கு அவர்களிடையே பயங்கரமான இரகசியம் நிலவியது.

லட்சுமிக்கு மூச்சை அடைத்தது. அவள் தந்தை அமைச்சராகி விட்டதற்காக அது வரையில் ஆனந்தம் கொண்டிருந்தவள் அவள். அப்போதுதான் முதன் முறையாக அவள் வருந்தினாள். அப்பாஜி சிறை வைக்கப்பெற்றிருந்த மலைக்கோட்டை அவள் கண் முன்னே வந்தது. துங்கபத்திரா நதியின் வடக்குக் கரையிலிருந்த ஆனைமலையின் உச்சியில், பயங்கரமான சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருந்த கற்கோட்டை அது. பகல் பொழுதுகளிலேயே மனிதர்கள் அந்தப் பக்கம் செல்வதற்கு அஞ்சுவார்கள். 'முதல் நாள் வரையில் இந்த சாம்ராஜ்யத்தையே தமது சுண்டு விரலால் ஆட்டி வைக்கும் அதிகாரம் பெற்றிருந்த அப்பாஜி. இந்தப் பளிங்குமேடையின் மீதிருந்து சூழ்ச்சி செய்ததால்தானே மறுநாள் முதல் அங்கு அடைக்கப்பட்டார்?'

லட்சுமியால் பொறுக்க முடியவில்லை. மெல்ல அந்த இடத்திலிருந்து திரும்பி வந்தாள். தன் தந்தையின் அறைக்குள் சென்று அங்கிருந்த ஆசனத்தில் சரிந்து விழுந்தாள். எல்லையற்ற ஆனந்தக் கனவுகளில் திளைத்திருக்க வேண்டிய அவள் மனம் அதற்கு மாறான உணர்ச்சிகளில் தத்தளித்துத் தடுமாறியது. முதன் முறையாக அன்றுதான் விசுவநாதனோடு அவள் அந்த அளவுக்கு நெருங்கிப் பழகியிருக்கிறாள். இரும்பை யொத்த அவன் கரங்களின் உறுதியை அன்றுதான் அவள் உணர்ந்திருக்கிறாள். அப்படிப்பட்ட ஒரு நாளில்......?


அச்சுதராயரும் அவள் தந்தையும் பேசிக் கொண்டே திரும்பி வரும் சத்தம் கேட்டது. அச்சுதராயருக்கு விடை கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார் சாளுவ நரசிம்மர். அச்சுதராயரின் பேச்சிலும் குரலிலும் கலகலப்பும் களிப்பும் மிகுந்திருந்ததால், முடிவு எந்தப் பக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதை அப்போதே ஊகித்துக் கொண்டாள் லட்சுமி. அவள் ஊகத்தை உறுதிப்படுத்துவது போலவே சாளுவ நரசிம்மரும் அச்சுதராயரிடம் பேசினார்.

''இளவரசே! அந்தப் பொறுப்பு முழுவதையும் தாங்கள் என்னிடம் விட்டுவிடலாம். வடக்கே நாம் படையெடுத்துச் செல்லாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன். சக்கரவர்த்திகள் பாமினி சுல்தான்களிடம் அனுப்பியிருக்கும் தூதுவர்கள் வெற்றியுடன் திரும்பப் போவதில்லை.''

''பீஜப்பூரும் கோல்கொண்டாவும் இணங்கி விட்டால், மற்ற மூன்று நாடுகள் பற்றிக் கவலை இல்லை என்று விசுவநாதன் கூறினானே?'' என்று தயக்கத்தோடு கேட்டார் அச்சுதராயர்.

''அவர்கள் இருவரும் இணங்கி வரமாட்டார்கள். அவர்களை இணங்கி வராமல் இருக்கச் செய்வது என் பொறுப்பு.''

திரும்பத் திரும்ப நன்றி கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார் அச்சுதராயர். அவரை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்த சாளுவ நரசிம்மர் தமது அறைக்குள் லட்சுமி இருப்பதைக் கண்டு துணுக்குற்றார். அவள் சோர்ந்து



கிடந்த நிலை அவருக்கு என்னவோபோல் இருந்தது. அன்போடு அவளிடம் காரணத்தைக் கேட்டார்.

''நான் எவ்வளவோ தடுத்துப் பார்த்தும் அவர் நிற்கவில்லையப்பா!'' என்று விசுவநாதனைப் பற்றிக் கூறினுள் லட்சுமி.

அதை அவர் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ''இதற்காக ஏன் கவலைப்படுகிறாய்? இளம் கன்று பயமறியாது என்பது போல் அவன் நடந்து கொண்டிருக்கிறான். எல்லாம் பழகப் பழகச் சரியாய்ப் போய் விடும்'' என்றார்.

''ஏதாவது வேலைகள் இருந்தால் கவனிக்கலாமென்று காத்திருக்கிறேன். ஓலைகள் எழுத வேண்டியிருந்தால் சொல்லுங்கள்'' என்று ஆர்வமில்லாதவள் போல் கேட்டாள் லட்சுமி. கூட்டத்தின் விவரத்தை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற பரபரப்பு அவளுக்கு.

''இன்றைக்கு நாழிகையாகி விட்டது. நான் பார்த்துக் கொள்ளுகிறேன். எனக்குப் பசியில்லை. உணவை முடித்துக் கொண்டு நீ உறங்கப் போகலாம்'' என்றார் சாளுவ நரசிம்மர்.

லட்சுமி ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள். அன்றைக்கு இரவு அவளுக்கும் உணவு கசந்தது. உறங்குவது போல் பாவனை செய்வதற்காகக் கட்டிலில் வந்து விழுந்தாள். அமைச்சரின் கூடத்தில் நடுச்சாமம் வரையில் விளக்கு எரிந்தது. அவரே தம் கரத்தால் ஓலைகள் எழுதுவதை அவருக்குத் தெரியாமல் லட்சுமி கவனித்தாள். அவளுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. இனம் புரியாத அச்சம் அவளை அன்று மாலையிலிருந்தே அரித்துக் கொண்டிருந்தது. நாழிகை செல்லச் செல்ல அது விருத்தியாகிக் கொண்டிருந்ததே தவிரக் குறையவில்லை.

நடுச்சாமத்துக்குப் பிறகு சாளுவ நரசிம்மர் மட்டிலும் தனியே வெளியில் சென்றார். குதிரையின்மீது ஏறிய அவர் உருவம் மெல்ல இருளில் கரைவதையும் லட்சுமி கண்ணுற்றுப் பெருமூச்செறிந்தாள். நீண்ட பெருமூச்சை விட்டு மீண்டும் கட்டிலில் வந்து விழுவதைத் தவிர அவளுக்கு வேறு ஒரு வழியும் தோன்றவில்லை. அந்த நேரத்தில் யாரும் அறியாமல் அவரைப் பின்பற்றிச் செல்வது என்பது முடியாத காரியம். அது வரையில் தெரிந்து கொண்டதையே தாங்கிக் கொள்ள அவளுக்கு வலிமையில்லை.

சாளுவநரசிம்மர் கோட்டை வாயில்களைக் கடந்து வடக்கே நெடுந்தூரம் சென்றார். சக்கரவர்த்தியும் பெரிய அதிகாரிகளும் அவ்வப்போது நகர சோதனைக்காகத் தனித் தனியே செல்வது அங்கு வழக்கமாதலால் காவலர்களும் வழக்கம் போல் இருந்துவிட்டார்கள். துங்கபத்திராவின் பரிசல்துறை வரையில் சென்று, அங்கிருந்த மண்டபத்தின் வாயிலில் குதிரையை நிறுத்திவிட்டு இறங்கினார். அவர் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுபோல் ஐந்தாறு பேர் மண்டபத்தின் இருளிலிருந்து வெளிப்பட்டார்கள்.



''அடடா! நின்றுகொண்டே எழுதுகிறீர்களே! கதிரையிலே உட்கார்ந்துகொண்டுதான் எழுதுங்களேன்!''

''காலையில் பஸ் க்யூவில் நின்றேன். அரிசி வாங்க நின்றேன். பிறகு மண்ணெண்ணெய்க்கும் நின்றேன். பஸ்-க்கு நின்றேன். நின்று நின்றே பழகிப்போய், காலை மடக்க முடியவில்லை ஸார்!''

ஒவ்வொருவரிடமும் தனித்துப் பேசி ஒவ்வோர் ஓலையாகக் கொடுத்தார் அமைச்சர். நதியில் வெள்ளம் அதிகமாக இல்லை. பரிசலில் அனைவரும் ஏறிக் கொண்டவுடன் அது வடக்குக் கரை நோக்கிப் புறப்பட்டது. சற்று நேரம் தெற்குக் கரையில் நின்று அதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, சாளுவநரசிம்மர் மீண்டும் குதிரையின் மீது ஏறிக் கொண்டார்.

தெற்கே அவர் குதிரை வந்த வழியே திரும்பிச் சென்றது. வடக்கே பரிசல் மறு கரையை அடைந்து விட்டது. இவ்வளவையும் ஒரு பாறையின் மறைவில் பதுங்கியிருந்த உருவம் பார்த்துக் கொண்டு பேசாதிருந்தது. பிறகு துங்கபத்திராவின் மறு கரைக்குச் சென்று அங்கேயே சிலைபோல் அமர்ந்து விட்டது.

நேரம் நடுநிசியான நேரம். இடமோ எத்தனை எத்தனையோ பயங்கரமான போர்க் களங்களைக் கண்ட இடம். சுற்றிலும் இரவு நேரத்தின் பல வகையான ஒலிகள் எழும்பிக் கொண்டிருந்தன. எதையுமே பொருட்படுத்தாதது போல் அந்த உருவம் அங்கேயே சிலையாக அமர்ந்து விட்டது.

பிறகு அது எழுந்து நடந்தது. அதன் நடையில் ஒரு மிடுக்கில்லை. தள்ளாடித் தடுமாறி நடப்பது போல் அது நடந்தது. நெடுந் தொலைவு நடந்து வந்த பிறகு மறைவிலிருந்த குதிரையின்மீது அது ஏறி அமர்ந்தது.

குதிரை ஏதோ ஓர் உயிரற்ற கட்டையைச் சுமப்பது போல் அந்த உருவத்தைச் சுமந்து கொண்டு நகரத்துக்குள் திரும்பியது.

குதிரையின்மீது ஊர்ந்து சென்றது ஓர் ஆண் மகனின் உருவம் என்ற வரையில்தான் அந்த இருள் அப்போதைக்கும் புலப்படுத்தியது.

(தொடரும்)



சேலைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன்
—அநுத்தமா

சுப்புலக்ஷ்மியும் மிஸ் லின்ச்சும் அந்தச் சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானித்த போது அதன் மாத வாடகை இருபத்தைந்து ரூபாய். சித்தி வந்து வீட்டைப் பார்த்துக் கொள்வது என்று முடிவாயிற்று. 1912ம் வருஷத்தியக் கோடை விடுமுறை கழிந்ததும் சித்தி, சுப்புலக்ஷ்மி, அரசமரத்து வீட்டில் வசித்து வந்த இளம் விதவைகள் எல்லாரும் அங்கு வந்து விடுவதாகவும், இன்னும் இரு பெண்களும் பிறகு வந்து அவர்களுடன் சேர்ந்து கொள்வதாகவும் ஏற்பாடாயிற்று.

சுப்புலக்ஷ்மியும் அவளுடைய இரண்டு தங்கைமாரும் கோடை விடுமுறையை அவர்கள் பெற்றோருடன் கோயமுத்தூரில் கழிப்பதாக இருந்தது. அதற்காக அப்போது சென்னையிலிருந்த விசாலாட்சி துணிமணிகளைப் பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. மிஸ் லின்ச் திடமாக நம்பியிருந்தது போல் சுப்புலக்ஷ்மி மட்டும் அப்போது அவ்வளவு புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளாமல் இருந்திருந்தால் அச் சம்பவம் இளம் விதவைகளின் புனர் வாழ்வுக்காக அவர்கள் போட்ட திட்டம் முழுவதையுமே கெடுத்து விட்டிருக்கும்.

தபால்காரர் பர்மியத் தபால் தலை ஒட்டிய ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து சுப்புலக்ஷ்மியிடம் தந்தார். பர்மாவில் யாரையும் அவளுக்குத் தெரியாது. கடிதத்தைப் பிரிப்பதற்குள் பல முறை அவள் தபால் முத்திரையைப் பார்ப்பதும் ஆச்சரியத்தோடு கூவுவதுமாக இருந்தாள். அவர்கள் கோவைக்குச் சென்றிருக்கையில் இங்கு சித்தியின் பராமரிப்பில் இருப்பதாகத் தீர்மானிக்கப் பட்டிருந்த

மூன்று விதவைப் பெண்களும் அந்த அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இப்போது நிமிர்ந்து பார்த்தார்கள். சுப்புலக்ஷ்மி தன் தாயாருக்குக் கடிதத்தை உரக்கப் படித்துக் காட்டிய போது அவர்கள் எல்லோருமே இயற்கையான ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சகோதரி நினைத்ததைப் போலவே அதை எழுதியவர் புதிய மனிதர் தான். கடிதத்தின் தொடக்கத்திலேயே அவர் தாம் ஒரு தென்னிந்திய பிராமணர் என்றும், ரங்கூனில் நிலைத்து மிகவும் வெற்றிகரமான வியாபாரம் நடத்துபவர் என்றும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் மனைவியை இழந்தவர். அவருக்குக் குழந்தைகள் கிடையாது. ஸிஸ்டர் சுப்புலக்ஷ்மியும் ஓர் ஆங்கிலப் பெண்மணியும் சேர்ந்து இளம் விதவைகளுக்காக ஓர் இல்லம் தொடங்குவதாகப் பத்திரிகைகளில் அவர் படித்தறிந்திருந்தார். சில ஆண்டுகளாகவே சமூகச் சீர்திருத்தக்காரர்கள், கன்னிப் பருவத்தில் விதவையாகி விட்ட பெண்கள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள். இந்தக் கொள்கை அவருக்குப் பிடித்திருந்தது. அதனால் தாம் மீண்டும் மணக்க விரும்பினார். சகோதரி சுப்புலட்சுமி தன் பராமரிப்பின் கீழ் உள்ள விதவைகளில் அவரை மணக்க இசையக் கூடிய பெண் ஒருத்தியைக் கண்டுபிடிக்க முடியுமா என்று அவர் வினவியிருந்தார், கடிதத்தில்.

"சரியாய்ப் போச்சு!" என்று வியப்புடன் கூவினள் சுப்புலக்ஷ்மி. என்ன விசித்திரமான, அபத்தமான கோரிக்கை இது! அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்வது பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. விவாதத்துக்குக் கூடத் தகுதியற்றது அது. ஊருக்குக் கொண்டு செல்ல வேண்டிய புத்தகங்களையெல்லாம் எடுத்து வைத்துக் கொள்ள அவள் கையில் கடிதத்துடன் மாடிக்கு ஓடி விட்டாள்.

அந்த இளம் விதவைகள் அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வயதில் தங்களை ஒத்தவளாக இருந்தாலும், படிப்பிலும், சாமர்த்தியத்திலும் வெகுதூரம் முன்னேறி விட்டிருந்த சகோதரியிடம் அவர்களுக்கு ஒரு வித அச்சமிருந்தது. அமைதியாகவும், கம்பீரமாகவும், எதிலும் ஒட்டாமலும், நடந்து கொண்டபடியால் அவளிடம் அன்றாட நிகழ்ச்சிகளான சில சில்லறை விஷயங்களைப் பற்றிப் பேசுவதுகூட முறையற்றதாகத் தோன்றியது. அவள் தாயாரும் சித்தியும் வயதில் மிகவும் முதியவர்களாக இருந்தும் கூட அவர்களிடம் பேசுவதோ அந்தரங்கமாக ஒன்று சொல்லிக் கொள்வதோ எளிதாக இருந்தது. வாய்விட்டுச் சொல்ல முடியாத எண்ணங்களையெல்லாம் கூடப் புரிந்து கொள்ளும் நுட்பம் வாய்ந்தவர்களாக அவ்விருவரும் விளங்கினர். யார் எதைச் சொன்னாலும்அதிர்ச்சியோ, வெறுப்போ அடையாமலும் இருந்தனர்.

பதினாறு வயதினளான சுப்பக்கா சின்னஞ் சிறுமியாக இருந்தபோதே கைம்பெண் ஆனவள். அவள் இப்போது நல்ல அழகியாக வளர்ந்து விட்டிருந்தாள். அரச மரத்து வீட்டுக்கு வந்த பிறகு படிப்பில் வெகுவாக முன்னேறி விட்டிருந்தாள். ஆனால் கடந்த சில வாரங்களாக அவளிடம் ஒருவித அமைதியின்மை காணப்பட்டது. பாடம் படித்துக் கொண்டிருக்கும்போது அவள் அடிக்கடி அதை மறந்து முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருப்பாள். இல்லையேல் பகற்கனவு கண்டு கொண்டிருப்பாள். அவளை மிகவும் கஷ்டமான சூழ்நிலையிலிருந்து மீட்டு வந்திருந்தபடியால், அவள் வீட்டை நினைத்துக் கொண்டு வருந்துகிறாளோ என்று ஐயுறவும் இடமில்லை. உடல்நிலை சரியாக இல்லையா என்று கேட்டாலும் அவள் அதெல்லாம் ஒன்றுமில்லை என்பதுபோல் தலையை அசைத்து விட்டுப் படிப்பில் மீண்டும் ஈடுபட முயல்வாள்.

சகோதரி அந்த அறையை விட்டு நீங்கிப் பத்து, பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு சுப்பக்கா தான் அமர்ந்திருந்த மூலையிலிருந்து எழுந்து அடுத்த அறைக்குள் சென்றாள். அங்கு ஒரு பெட்டியினருகே குனிந்து ஏதோ செய்து கொண்டிருந்த விசாலாட்சியை அணுகி, மெதுவான குரலில் கேட்டாள்: "உங்களோடுநான் சிறிதுபேசலாமா?"

"பேஷாக!" விசாலாட்சி அவளை வேறு ஓர் அறைக்கு அழைத்துச் சென்றாள். சுப்பக்கா ஒளிவு மறைவின்றி நேருக்கு நேராக ஏறிட்டுப் பார்த்து, "நான் அந்த மனிதரை மணக்க விரும்புகிறேன்" என்றாள்.

விசாலாட்சிக்குத் தூக்கிவாரிப்போட்டது. இதைப் பற்றிக் கேள்வியுற்றதும் சுப்புலக்ஷ்மியும் திகைப்புற்றாள். எனினும் தாயும் மகளும் கலந்தாலோசித்துப் பேசிய பிறகு சுப்பக்கா ஒருவரை மணந்து கொண்டு சாதாரணமாக எல்லாப்பெண்களையும் போல் இல்வாழ்க்கை நடத்த விரும்புவது இயற்கையே என்று




நாளுக்கு நாள்...
உங்கள் மேனியெழிலே
ஓங்கச் செய்வது
ரெக்ஸோனு
அழகுசாதனத் தைலங்கள் இணைந்த விசேஷக் கலவை யாகிய 'கேடில்' அடங்கியது ரெக்ஸோனு ஒன்றுதான். பூசிக்கும் இன்ப நறுமணம் நேரமெல்லாம் உங்கள்மீது நின்றுநிலவச் செய்வது ரெக்ஸோனு ஒன்றுதான். அன்றுடம் உபயோகியுங்கள் ரெக்ஸோனு.
Rexona
'கேடில்' அடங்கிய ரெக்ஸோனு
உங்கள் மேனியெழிலுக்கு உகந்தது
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

தெளிந்தார்கள். கடிதமெழுதிய அந்த மனிதரும் கண்ணியமானவர் என்றே தோன்றியது. தம்மைப் பற்றி அவர்கள் விசாரித்தறியத் தேவையான தகவல்களும் தந்திருந்தார்.

முக்கியமான இடையூறு என்னவென்றால், சம்பிரதாயப் பற்றுள்ள மனிதர்கள், கைம்பெண் ஒருத்தி — அவள் தன் கணவனிடம் பேசிக்கூட அறியாத கன்னிக் கைம்பெண்ணாக இருந்தாலும் கூட — மறுமணம் செய்துகொள்வதைப் பெரும் பாவமாகக் கருதினார்கள். திருமணம் என்பது தம்பதிகளில் ஒருவர் இறந்தவுடன் முடிவு பெற்றுவிடுவதில்லை; ஜன்ம ஜன்மாந்திரங்களாக இருந்து வந்ததும் இன்னும் பல ஜன்மங்களுக்கு நீடிக்கக் கூடியதுமான உறவுதான் அது என்பது அவர்கள் கொள்கை. எல்லோருமே இதை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தக் கடிதத்தை எழுதியவர் கூறியதுபோல் சமூகச் சீர்திருத்தவாதிகள் இளம் விதவைகள் மீண்டும் சந்தோஷத்துடன் வாழ வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று நம்பினார்கள், பகிரங்கமாக வாதாடினார்கள். ஆனால் இத்தகைய சீர்திருத்தவாதிகள் மிகக் குறைந்த அளவில்தான் இருந்தார்கள். இவர்களுடைய அபிப்பிராயத்தை ரொம்பவும் வருந்தத்தக்கது என்று சம்பிரதாயத்தில் ஊறியவர்கள் கண்டித்து வந்தார்கள்.

சுப்பக்கா சந்தோஷமாக வாழ வேண்டும், அந்த சந்தோஷத்தை அடையச் சிறந்த வழி என்று அவள் எதைக் கருதுகிறாளோ, அதையே அவள் பின்பற்ற வாய்ப்பளிக்க வேண்டும் என்றுதான் சுப்புலக்ஷ்மி எண்ணினாள். பழங்காலத்திய மனிதர்களுடைய கருத்துக்களுக்குத்தான் எவ்வளவுதான் மதிப்புக் கொடுத்தாலும் சரி, பிராமணப் பெற்றோர்கள் தங்கள் பெண்களை ஆதி காட்டேஜுக்கு அனுப்பி வைக்குமாறு வற்புறுத்துவது ரொம்பச் சிரமம். அதிலும் சுப்பக்காவின் மறுமணத்தை ஏற்பாடு செய்தது சுப்புலக்ஷ்மிதான் என்று தெரிந்து விட்டால் போதும், சண்டிப்பாக அனுப்பி வைக்க மாட்டார்கள். இதைச் சுப்புலக்ஷ்மி நன்கு அறிந்திருந்தாள்.

முக்கியமான ஒரு சமூகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவள் இருந்தாள். ஆயினும் அச்சீர்திருத்தவாதி தான்தான் என்று வெளியே தெரியக் கூடாது. அப்படித் தெரிந்துவிட்டால் தான் செய்ய முனைந்திருக்கும் நற்பணிகளெல்லாம் நிறைவேறாமல் போகக்கூடும். அவள் செய்யக் கூடியது ஒன்றுதான் இருந்தது. அவள்



"சீக்கிரம் ஜெயிச்சு போய் மேடையிலே வைச்சுட்டு இந்த நிறையைத் தூக்குடா சோவி! ஐயாக ரொம்ப நேரமா காத்துக்கிட்டிருக்காங்களே தெரியல்லே!!"

தகப்பனாரின் நண்பர் குழாத்தில் நம்பிக்கையான ஒருவரைக் கண்டுபிடித்து அவரைக் கொண்டு, சுப்புலக்ஷ்மிக்கும் அவள் பெற்றோருக்கும் இதில் சம்பந்தமே இல்லை யென்று தோன்றுமாறு கல்யாணத்தை நடத்திவிட வேண்டும்.

இந்தச் சிறு சூழ்ச்சி நாடகத்தைச் சுப்புலக்ஷ்மி மிகவும் ரசித்தாள். மாப்பிள்ளை சென்னைக்கு வந்தார். சுப்பக்காவை மணந்தார். சுப்புலக்ஷ்மி கல்யாணத்துக்குப் போகவேயில்லை. அவள்தான் அந்தத் திருமணத்துக்குக் காரணமாக இருந்தாள் என்று யாருக்குமே தெரியாது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு சகோதரி பர்மா சென்றிருந்தபோது சுப்பக்காவையும் அவள் கணவரையும் சந்திக்க நேர்ந்தது. அவ்வளவு சந்தோஷமான, பொருத்தமான தம்பதியை எங்குமே காண முடியாது என்று தோன்றியது அவருக்கு.

3

ஆதி காட்டேஜுக்குக் குடிபோவதை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களுடைய ஆவலுக்கும் மகிழ்ச்சிக்கும் அணைபோட்டது ஒரு துயர நிகழ்ச்சி. அரசமரத்து வீட்டிலிருந்த இளம்விதவைகளுள் மூத்தவள் இருபது வயதுப் பெண்

அந்த இல்லத்துக்கு வரும்போதே அவள் க்ஷயரோகத்தினால் வருந்திக் கொண்டிருந்தாள். சித்தி அவளை எவ்வளவோ ஜாக்கிரதையாகப் பராமரித்து வந்தாள் ஆயினும் அப்பெண் குணமடையவில்லை. அந்த வட்டாரத்தில்தான் வசித்துவந்த அவள் பெற்றோர்கள் அவள் இறக்கும் போது கூடவே இருந்தார்கள். புரோகிதர்களை அழைத்து வந்து ஈமச்சடங்குகளுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

புரோகிதர்களை உயிரிழந்த அந்தப் பெண் கிடத்தப்பட்டிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றனர். அவள் காலடியில் புஷ்பங்கள் கிடந்தன. அவள் கேசம் நடு வகிடு எடுத்து இரட்டைப் பின்னல்களுடன் விளங்கியது. ஓர் அழகிய படத்துக்குச் சட்டம் போட்டாற் போல அவள் முகத்தைச் சுற்றி வந்து முழங்கால்வரை நீண்டிருந்தன அந்தப் பின்னல்கள். அவள் கண்கள் மூடிக் கிடந்தன. அவள் அழகான முகம் அமைதியான உறக்கத்தில் தோய்ந்திருப்பதுபோல் காட்சியளித்தது.

புரோகிதர்கள் இதை ரொம்பவும் மட்டமெனக் கருதிப் பார்த்தார்கள். அந்தப் பெண்ணின் தகப்பனாரை நோக்கி, ''உங்கள் பெண் ஒரு விதவை என்பதாகச் சொன்னீர்களே?'' என்று கேட்டார் அவர்களில் ஒருவர்.

''ஆமாம், அப்படித்தான்'' என்று தந்தை ஒத்துக் கொண்டார்.

''அப்படியானால், இவளுக்குக் கேசத்தை மழித்தாக வேண்டும். வயது வந்த ஒரு விதவைக்கு மயிர் வாங்காத போது, அவளுக்கு நாங்கள் இறுதிச் சடங்குகள் செய்து வைக்க மாட்டோம்.''

அப்பெண்ணின் தாயார் கதறிக் கொண்டு, அடுத்த அறைக்குள் ஓடிச் சென்றாள். சகோதரியின் அருகே பதறித் துடித்து விழுந்தாள். புரோகிதர்கள் கூறியதையெல்லாம் விசும்பல்களுக்கிடையே அவளிடம் சொன்னாள்.

இதற்குள்ளாகப் பெண்ணின் தகப்பனார் அங்கு வந்து நாவிதரை அழைத்து வர ஓர் ஆளை அனுப்பி வைக்க வேண்டுமென்று சுப்புலக்ஷ்மியைக் கேட்டுக் கொண்டார்.

''என்ன அக்கிரமம்! முட்டாள் தனம்!'' என்று சுப்புலக்ஷ்மி அரற்றினாள்.

''அக்கிரமம்! கொடூரம்!'' என்று பெண்ணின் *தாயார் கதறினாள்.

சகோதரி சுப்புலக்ஷ்மி அப்பெண்ணின் தகப்பனாரைக் கேட்டாள்: ''நீங்கள் ஏன் அவர்களை எதிர்க்கக் கூடாது?''

'' அவ்வாறு எதிர்க்கவோ மறுக்கவோ முடியாது. நம் சாஸ்திரம் நாம் கீழ்ப்படிந்துதான் ஆகவேண்டும் என்று ஆணையிடுகிறது.''

''உண்மையாகவே நீங்கள் இதையெல்லாம் நம்புகிறீர்களா?'' என்று கண்களில் நீர் மல்கக் கேட்டாள் சகோதரி.

சகோதரி அப்பெண்ணின் தாயார், மற்றப் பெண்கள் யாவரும் நாவிதர் வந்து இறந்தவளின் கேசத்தைக் கத்திரித்து எடுப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நெஞ்சை உலுக்கி எடுத்துக் கண்ணீரைத் தருவித்த இந்தக் காட்சியை நாளடைவில் மறந்துவிடலாம் என்று அவர்கள் நம்பினார்கள் ; ஆனால் ஒருவராலும் முடியவில்லை.

பெண்கள் தங்கள் புது இல்லத்தில் குடிபுகுந்து சில நாட்கள் ஆயின. ஆதிகாட்டேஜுக்கு வாடகை தரவும், ஆசிரியப் பயிற்சியை எடுத்துக் கொள்ள இசையும் மூன்று விதவைப் பெண்களுக்கு உபகாரச் சம்பளம் தரவும் சர்க்கார் முன்வந்தது. மிஸ் லின்ச் தன் மேல் அதிகாரிகளின் அனுமதியின்றித் தானாகவே இவ்விஷயத்தில் அதிகப்பிரசங்கித்தனமாக நடந்து கொண்டதைச் சர்க்கார் அதிகாரபூர்வமாகக் குறிப்பாகக் கவனித்தார்கள் ! தன் காரியம் சித்தித்து விடவே, மிஸ் லின்ச் இதைப் பற்றிக் கவலைப்பட வில்லை. நாலரை வருஷப் பிரயத்தனத்தின் பிறகு அவள் சாதித்தது அதிகமில்லை என்பது உண்மைதான். ஆயின், சர்க்கார் இதை அங்கீகரித்ததுடன், குறைந்த அளவிலேதான் என்றாலும் பண உதவி தரவும் முன்வந்து விட்டார்கள். இந்தத் திட்டம் இனி மேற்கொண்டு நடக்கலாம் என்பதும் பிற்காலத்தில் விரிவு அடையலாம் என்பதும்தானே, இதற்கு அர்த்தம்? இதற்கிடையில் பார்வதியின் பெற்றோர்களைப் போலவே வேறு பலரும் தங்கள் விதவைப் பெண்களின் போஷணைக்காகவும் கல்விக்காகவும் பணம் தரக்கூடிய வசதியும் மனமும் பெற்றிருக்கலாம். சுப்புலக்ஷ்மி திரட்டியிருந்த நிதி ஏழைப் பெண்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். அதையே நாளடைவில்—சர்க்கார் இன்னும் அதிகமான உபகாரச் சம்பளங்கள் அளிக்க முன்வரும்போது பெண்களுக்கு சம்ஸ்கிருதம் போதிக்க உபயோகித்துக் கொள்ளலாம்.

ஆதிகாட்டேஜ் சந்தோஷம் நிரம்பியதோர் இடமானதாகத் திகழ வேண்டும் என்று சகோதரியும் சித்தியும் உறுதி பூண்டார்கள். (தொடரும்)

சிரஞ்சீவிக் கதைகள்...


8 — சிவ-பார்வதி



தந்தையின் யாககுண்டத்தில் விழுந்து உயிர் நீத்த தாக்ஷாயணி, சிவபெருமானது மனைவி, இமவானின் புத்திரி பார்வதிதேவியாக அவதரிக்கிறாள்.



வான் எட்ட வளர்ந்து நிற்கும் இமயமலைச் சாரலில் தவம் செய்ய வந்து சேருகிறார் சிவ பெருமான். பயபக்தியுடன் அவருக்குப் பணி விடை செய்கிறாள் பார்வதி.



சிவபெருமானையும், பார்வதி தேவியையும் மறுபடியும் சேர்த்துவைக்க எண்ணிய தேவர்கள் மன்மதனை ஏவுகிறார்கள். தனது துணைவியான ரதிதேவியுடன் சிவபெருமான் தவம் செய்யும் இடத்திற்கு மன்மதன் வருகிறான்.



பருவ எழில் ஒளி வீச பார்வதி பரமனுக்கு பாதபூஜை செய்கையில், தக்க தருணம் பார்த்து மன்மதன் தனது பாணத்தை பரமன் மீது எய்கிறான்.



க்ஷணநேரம் சிந்தை தடுமாறிய சிவபெருமான் மறுகணம் கோபம் கொள்கிறார். நெற்றிக்கண்ணைத் திறக்கிறார். அக்கண்ணிலிருந்து பாய்ந்த அனற்பொறிகள் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கின.



பின்பு பார்வதிதேவி தனது கடுந்தவத்தால் பரமனின் உள்ளம் கவர்கிறாள். அகிலத்தின் அன்னையாம் பார்வதிக்கும் சர்வலோக நாயகன் சிவபிரானுக்கும் திருமணம் நடைபெறுகிறது.

நோபல் பரிசு பெற்ற ருஷ்ய நாவலாசிரியர்



ஷோலோகாவ்

க. நா. சுப்பிரமணியம்

சோவியத் ருஷிய நாவலாசிரியராகிய மைகேல் ஷோலோகாவ் என்பவருக்கு 1965ம் வருஷத்திய நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது. டால்ஸ்டாய், கார்க்கி இருவருக்கும் அளிக்கப்படாத இந்தப் பரிசு அவர்களுடைய இலக்கிய வாரிசான ஷோலோகாவுக்கு அளிக்கப்பட்டிருப்பது, நோபல் பரிசுக் கமிட்டி இதுவரை செய்துவிட்ட தவறுக்குப் பிராயச்சித்தம் செய்வது போலாகும். அது பாராட்டத் தக்க விஷயம்.

ஷோலோகாவுக்கு முந்தி இரு வேறு ருஷிய இலக்கிய ஆசிரியர்களுக்கு நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது. 1931ல் ஐவன் ப்யூனின் என்பவருக்கும், 1958ல் போரிஸ் பாஸ்டர்நாக் என்பவருக்கும் பரிசு அளிக்கப்பட்டபோது, இலக்கிய அம்சத்தைவிட அது அரசியல் அம்சத்தைப் பாராட்டுவதாகவே அமைந்தது என்கிற குறைபாட்டுக்கு உள்ளாகியது. இருவரும் நாவலாசிரியர்களே. ஆனால் அவர்கள் இருவரும் முழுக்க முழுக்க ருஷிய நாவல் இலக்கிய மரபில் வந்தவர்கள் என்று சொல்ல முடியாது. டர்கெனிவ், கோகால், டாஸ்டாவ்ஸ்கி, டால்ஸ்டாய், கார்க்கி என்கிற பெரு மரபில் வந்துள்ள ருஷிய நாவலாசிரியர் ஷோலோகாவ். அவருடைய கலைப் புகழ் சோவியத் ருஷியாவில் மட்டுமல்ல; உலகெங்கும் பரவியுள்ள, ஏற்கப்பட்டுள்ள விஷயமாகும். ஒரு முப்பது ஆண்டுகளில் அவருடைய காவிய நாவல் ஐந்நூறுக்கும் அதிகமான பதிப்புகள் வெளிவந்துள்ளது—ஐம்பத்தைந்து மொழிகளில் வெளி வந்துள்ளது. — சற்றேறக்குறைய மூன்று கோடிப் பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன.

காவிய கதியில் எழுதப்பட்டுள்ளது ஷோலோகாவின் ''டான் நதி அமைதியாக ஓடுகிறது'' என்கிற 1600 பக்க, நாலு பாக நாவல். இந்த நாவலில் டான் நதிதான் அமைதியாக ஓடுகிறதே தவிர, அக் கரையில் வாழும் நிரம்பிக்க, இயற்கையுடன் இயைந்து வாழும் காஸக் மக்களின் வாழ்க்கை அமைதியாக ஓடவில்லை. பழைமைக்கும் புதுமைக்கும் இடையே அங்கு ஏற்பட்டு உரம் பெற்ற மோதல் எத்தன்மையானது என்பதை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். வெறும் சமுதாய 'ரியலிஸம்' மட்டும் ததும்பும் நாவல் அல்ல இது என்பதே இதன் தனிச் சிறப்பு. மனுஷ்யத்வம் நிறைந்த மனிதர்களாக அந்தக் காஸக் மக்களை மறக்க முடியாத ஓர் இனமாகக் காட்டியிருக்கிறார் ஆசிரியர். சரித்திர நாவல்தான். ஆனால் எதையும் மிகைப்படுத்தியோ, ஆஹா, ஓஹோ என்றோ, அதீதமான வார்த்தைகளைக் கொட்டியோ எழுதாத நாவல். சரித்திரத்தைப் பற்றிய தத்துவ விசாரணை எதிலும் டால்ஸ்டாய் போல் இறங்கி விடாமலும் டால்ஸ்டாய் போன்று ஒதுங்கி நின்று நடப்பதையெல்லாம் காட்டாமலும், கார்க்கியின் கதை சொல்லும் உத்திகளை அனுசரித்து நாவலை எழுதியுள்ளார் ஷோலோகாவ். 1912 முதல் 1922 வரை ஒரு பத்து ஆண்டுகளை அற்புதமாக விவரிக்கிறது நாவல். காஸக் மக்களின் வாழ்விலே, ருஷ்ய மக்களின் வாழ்விலே மிகவும் முக்கியமான காலப் பகுதி இது. பல காஸக் குடும்பங்களையும், அவற்றின் இயற்கை, சமுதாய, அரசியல், தத்துவப் பின்னணியையும், நூற்றுக்கணக்கான தனி மனிதர்களையும் நாம் அறிமுகம் செய்துகொள்கிறோம். கருணையும், லேசானதொரு ஹாஸ்யமும் ததும்ப ஆசிரியர் சம்பவங்களையும், பாத்திரங்களையும் போக்கையும் விவரிப்பது மிகவும் இன்பகரமாக இருக்கிறது. நாவலில் வருகிற சிவப்பர்கள் (கம்யூனிஸ்ட் கட்சியினர்) தான் ஆசிரியரால் அனுதாபத்துடனும், முழுமையாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதில்லை. கம்யூனிஸத்தைச் சேராதவர்களும், எதிர்ப்பவர்களும்கூட முழு மனிதர்களாக அனுதாபத்துடன் சித்திரிக்கப்பட்டிருப்பது இந்த நாவலின் சிறப்புகளில் ஒன்று — இந்த விஷயத்தில் இந்தச் சோவியத் நாவல் மற்ற சோவியத் நாவல்களுக்கு விலக்கு என்பதுடன் கலை அழகு அதிகமும், பட்சபாதமின்மையும் உள்ளது என்றும் சொல்ல வேண்டும். நாவலின் தலைவன் கிரகோர் என்பவன் வீரனாகவும், புரட்சியாளனாகவும், புரட்சி எதிர்ப்பாளனாகவும், எப்போதும் மனிதனாகவும் உருப்பெறுகிறான். மிகவும் உயர்ந்த சோக நாயகன் அவன். உபதலைவனாக நாவலில் வந்து அவன் சகோதரியை மணந்துகொள்கிற மிஷா கம்யூனிஸ்டு கட்சித் தலைவன்தான் எனினும் அப்படி

ஒன்றும் ஆசிரியரின் அநுதாபத்துக்கு அதனால் உரியவனாகிவிடவில்லை என்பது கவனிக்கத் தக்க விஷயம்.

1925 முதல் 1940 வரை ஒரு பதினைந்து ஆண்டுகள் இந்த நாவலை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தார் ஆசிரியர். முதல் பாகம் வெளிவந்தபோதே அதைப் பிரமாதம் என்று வாசகர்களும், கார்க்கி போன்ற இலக்கிய ஆசிரியர்களும் வரவேற்றனர். இரண்டாவது பாகம் 1929லும் மூன்றாவது பாகம் 1932லும் வெளியாயிற்று. இந்த மூன்றாவது பாகத்தில் சில பகுதிகளைத் திருத்தினாலொழிய வெளியிட இயலாது என்று அரசாங்க இலக்கிய அதிகாரிகள் வற்புறுத்தியதாகவும் கார்க்கி குறுக்கிட்டு ஆசிரியர் எழுதியபடியேதான் பிரசுரமாக வேண்டும் என்று பிரசுரத்துக்கு ஏற்பாடு செய்ததாகவும் தெரிகிறது. நாலாவது பாகம் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் வெளிவந்தது. சில பகுதிகளுக்கு ஆட்சேபம் இருந்தது என்றும், அவற்றை நீக்கிவிட்டே ஷோலோகாவ் வெளியிட்டார் என்றும் தெரிகிறது. 1941ல் இந்த நாவலுக்கு ஒரு முதல் ஸ்டாலின் பரிசு அளிக்கப்பட்டது.

'டான் நதி' நாவலுக்கு முன் இளம் ஷோலோகாவ் இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் மட்டுமே வெளியிட்டிருந்தார். 'கன்னி நிலம் பண்பட்டது' என்ற நாவலின் இரண்டு பாகங்கள் வெளிவந்துள்ளன. அந்த நாவல் இன்னும் முடிவுறவில்லை. ஐந்தாண்டுத் திட்டத்தையும் அரசாங்கக் கூட்டுப் பண்ணை முறையையும் போற்றுகிற பிரசார நாவலாகத்தான் எழுதப்பட்டது இது. எனினும், இதையும் ஒரு கலையழகுடன் செய்வதில் வெற்றி பெற்றுவிட்டார் ஆசிரியர். அரசாங்கத் தரப்பு வாதத்தை எடுத்துச் சொல்லுவது போலவே எதிர்த் தரப்பு வாதத்தையும் அழகாக உருவாக்கியுள்ளார் ஆசிரியர் என்பது அவர் தனிச் சிறப்பாகும்.

ஹிட்லர் யுத்த காலத்தில் சில சிறுகதைகளும், சில பிரசாரக் கட்டுரைகளும் எழுதிய ஷோலோகாவ் 1944ல் ''தங்கள் நாட்டுக்காகப் போராடியவர்கள்'' என்று தாற்காலிகமாகப் பெயரிடப்பட்ட ஒரு மூன்று பாக நாவலின் சில அத்தியாயங்களை வெளியிட்டார். அந்த நாவலின் பின் அதிகாரங்களைத்தான் இப்போது ஷோலோகாவ் எழுதிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஸ்டாலினின் அதிருப்திக்கு ஆளாகி ஓர் ஏழெட்டு ஆண்டுகள் ஷோலோகாவ் ஒதுங்கி வாழ்ந்ததாகவும் நினைக்க இடமிருக்கிறது. 1952ல் அவர் டான் நாவல் பிரசுரமானபோது பல பகுதிகள் திருத்தப்பட்டிருந்தன. ஆனால் ஸ்டாலின் இறந்த பிறகு 1955ல் வெளியான பகுதியில் மீண்டும் பழைய பாடமே பிரசுரமாயிற்று. ஸ்டாலின் இறந்த பிறகு ஷோலோகாவ் தமது சக எழுத்தாளர்களைப் பற்றியும் சோவியத் எழுத்தாளர் சங்கம் பற்றியும் சற்றுக் காரசாரமாகவே அபிப்பிராயம் கூறினார். ''இலக்கிய அரசியல்வாதிகளால் இலக்கியத்துக்கு அதிக லாபம் இராது'' என்றும், ''ஆயிரம் பேனாக்கள் செயலாற்றியும் ஒரு முப்பது ஆண்டுகளில் ஒரு பத்து நல்ல நூல்களே எழுதப்பட்டுள்ளன'' என்றும் அவர் பேசியதாகச் செய்தி ஒன்று 1956ல் வெளியாயிற்று.

அரசியல் அதிகார அமுல் இலக்கியத்தில் முற்றிக் கெட்டிப்படுமுன் எழுதத் தொடங்கிய மைகேல் ஷோலோகாவ், தம் சுதந்திரத்தையும், கலைப் போக்கையும் தனித் தன்மையையும் ஓரளவுக்குக் காப்பாற்றிக் கொண்டுவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். அவர் எழுத்துக்கள் அதற்குச் சான்று. அவர் அதிகமாக அரசியலில், கலை இலக்கிய அரசியலிலும் கூடச் சம்பந்தப்படாதிருக்க முயன்று வெற்றியும் பெற்றுவிட்டவர் என்று தோன்றுகிறது. கலை சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டுவிட்ட ஷோலோகாவ் அதற்காக சோவியத் லட்சியங்களைக் கைவிட்டுவிட்டார் என்பது அர்த்தமல்ல. — அவற்றை அவர் விட்டுக் கொடுத்து விடவில்லை. பாஸ்டர்நாக்குக்கு நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டபோது சற்று அதிகமாக, மிகவும் அழுத்தமாக அதைக் கண்டித்தவர் ஷோலோகாவ்தான் என்பது, 1965ல் அந்தப் பரிசை அவர் ஏற்றுக்கொள்ள முடிவு செய்ததற்கு* முற்றிலும் முரணானதல்ல.

— அடுத்த இதழில் —

வெறுப்பு

நோபல் பரிசு பெற்ற
ஆசிரியர் ஷோலோகாவ்



இந்நாளை அவள் எந்நாளும் நினைவுற்றிருக்க உஷா தையல் மிஷின்


அவள் கண்ட கனவெல்லாம் நினைவாகி, இன்பம் கரைபுரண்டோடும் புதியதொரு வாழ்க்கையை மேற்கொள்ளவிருக்கும் இந் நன்னாளில் நீங்கள் அவளுக்கு அளிக்கும் பரிசு அவளுக்கு மகிழ்ச்சி யளித்து, வாழ்நாள் முழுதும் பயன்படக் கூடியதாக இருக்கட்டும். உஷா தையல் மிஷினை அன்பளிப்பாக கொடுங்கள்—உகந்த பரிசளிப்பு அதுவே.



உஷா

தையல் மிஷின்

அவளுக்கேற்ற அன்பளிப்பு



ஒரு JAY தயாரிப்பு

ஜே எஞ்சினீரிங் ஒர்க்ஸ் லிட்., கல்கத்தா-31

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

60. தேவநாயகனுக்கொரு தெய்வயானை

இந்திரனின் இதயம் இறைவன்பால் நன்றியால் நிறைந்தது. சூரபன்மனைச் சங்கரித்து, தனக்குப் பொன்னுலக ஆட்சியைக் கொடுத்தருளிய குமாரக் கடவுளுக்குத் தனது நன்றியை எப்படித் தெரிவிப்பது? 'தன்னையே தந்து விடலாம்; அதனிடத்தில் தன் அங்கங்களில் சிறந்த கண்ணைத் தரலாம்; இன்றேல் கண்ணுக்குச் சமமான பெண்ணைத் தரலாமே' என்று எண்ணினான் தேவராஜன். 'பெண்ணைக் கொடுத்தாயோ, கண்ணைக் கொடுத்தாயோ' என்று பொதுவழக்கும் உண்டன்றோ? இந்திரன் மகளான தேவயானையோ உண்மையிலேயே பூர்வத்தில் திருமாலின் கண்ணினின்று தோன்றியவளாயிற்றே! எனவே, அவளைக் காட்டிலும் முருகையனுக்குச் சிறந்த பரிசு என்ன இருக்க முடியும்?

தன் மகள் தெய்வயானையை முருகப் பெருமானுக்குத் திருமணம் செய்து கொடுக்கக் கருதிய அமரேசன், மாலயனுந்தி வானவர்களிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அவர்கள் அதனை மனமார ஆமோதித்தனர். ''தெய்வயானையும் முருகக் கடவுளைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டே சரவணப் பொய்கையில் முன்னுளில் தவம் செய்தாள். அதன் பயன் இப்பொழுது கைகூடியது போலும்! இத்திருப்பரங்குன்றத்திலேயே திருமணம் செய்து கொடுக்க ஏற்பாடுகளை விரைந்து செய்வாயாக'' என்றனர்.



இந்தச் சமயத்தில் இந்திராணி கணவனுக்காகப் பிரார்த்தனை புரிந்தவாறு மேருமலையில் இருந்தாள். இந்திரன் ஒற்றன் ஒருவனை அழைத்து, "நீ மேரு மலைக்கு விரைந்து சென்று அங்கு உள்ள இந்திராணியையும் மகள் தெய்வயானையையும் அழைத்து வா" என்று ஆணையிட்டான்.

ஒற்றன் அவ்வாறே இந்திராணியை அடைந்து, ஐயன் சூரசம்ஹாரம் செய்ததையும், இந்திரன் மீண்டும் ஆட்சி பெற்றதையும் சயந்தன் தேவரோடு சிறையினின்றும் மீண்டதையும் தெரிவித்தான். ஆறுமுகக் கடவுள் சேனைகளுடன் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருப்பதைக் கூறி, தேவியையும் தெய்வயானையுடன் திருப்பரங்குன்றத்துக்கு வருமாறு இந்திரன் கட்டளையிட்டிருப்பதை உரைத்தான்.

இந்திராணி தன் தவம் பலித்ததே என்று மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள். தெய்வயானையுடன் ஐராவதத்தின்மீது புறப்பட்டு அரம்பையர் சூழ விண்வழியே திருப்பரங்குன்றம் வந்து சேர்ந்தாள். இந்திரனைப் பழைய தேவராஜனாகவே கண்டு களிகொண்டாள்.

சிறை மீண்ட அரம்பையர்கள் அயிராணியை வந்து வணங்கினார்கள். அயிராணி சயந்தனைத் தாயன்பு மிகத் தழுவிக் கொண்டாள்.

பின்னர் இந்திரன் வானவர்களுடன் வடிவேலிறையைக் கண்டு வணங்கித் துதித்தான்; அடிபணிந்தான். "எம் பெருமானே! தாங்கள் புரிந்த ஒப்புயர்வற்ற உதவிக்கு அடியேன் செய்யத்தக்க கைம்மாறு ஏதும் இல்லை. ஆயினும், தமியேனுடைய புதல்வி தெய்வயானையைத் தேவரீர் திருமணம் செய்தருளி அடியேங்கள் உய்ய அருள் புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். ஜீவர்களுக்கெல்லாம் நாயகனாகிய நித்ய மணாளக் கந்தக் கடவுள் இந்திரனை நோக்கி, "நின் மகளும் நம்மை மணந்து கொள்ளும் பொருட்டு முன்னே



மிருந்தாள். ஆதலின் நீ கருதியபடி நாளையே நாம் திருமணம் செய்வோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். இந்திரன் உள்ளம் உவந்து உடல் பூரித்து இருக்கை சேர்ந்தான்.

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மங்கல ஓலை அனுப்பினான் இந்திரன். மண்ணுலகில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த முசுகுந்தச் சக்கரவர்த்திக்கும் திருமண ஓலை அனுப்பப்பட்டது. தூதர்கள் யாவரும் அழைப்போலையுடன் விரைந்து சென்றார்கள்.

இந்திரன் ஏவியபடி தேவதச்சன் சிற்பநூல் விதிப்படி நவரத்தின மயமான திருமண மண்டபமும், மண்டபத்தின் மத்தியில் ஓர் அரியணையையும் அமைத்தான். அதன்பின், அரி அயன் முதலான வானவர்கள் இருப்பதற்கு ஏற்ற இடங்களையும், கோபுரங்கள் பலவற்றையும், எண்ணில்லாத மண்டபங்களையும் அமைத்தான். கடல் போல் திரண்டு வந்த மக்கள் அனைவரும் தங்குவதற்குரிய இடங்களையும் அமைத்தான். திருமணத்துக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் இந்திரன் சேகரித்தான்.

ஃ ஃ ஃ

முசு என்றால் குரங்கு. முசுகுந்தச் சக்கரவர்த்தி குரங்கின் முகச் சாயலுடன் இருந்தவர். முன்னொரு காலத்தில் திருக்கைலாய மலையில் சிவபெருமானும் உமாதேவியாரும் ஒரு சோலையில் வில்வ மரத்தடியில் வீற்றிருந்தார்கள். அப்போது வில்வ மரங்களிலே பல முசுக்கள் (குரங்குகள்) தங்கியிருந்தன. அவற்றுள் ஓர் ஆண் முசு அம்மையப்பர் மீது அளவற்ற வில்வத் தழைகளைப் பறித்துச் சொரிந்து கொண்டிருந்தது. அது கண்டு உமாதேவியார் சினம் கொண்டார். உமாதேவியாரின் சினத்தைக் கண்ட அந்திவண்ணத் தண்ணல், ''தேவி! வில்வ இலைகளைக் கொண்டு நம்மைப் பூசிக்கும் குரங்கிடம் கோபம் கொள்ளலாமா? உன் சினத்தைத் தணித்துக் கொள்...... வேடிக்கையாக இட்டாலும் இட்டது வில்வம் அல்லவா? விளையாட்டாக மிதித்தாலும் நெருப்பு சுடும். அது போல் தெரிந்தோ தெரியாமலோ செய்தாலும் வில்வத்தை எமக்கிடுவது சிவபுண்ணியப் பயன் தரும்'' என்றருளினார். உமாதேவியார் சினம் தணிந்து அக்குரங்குக்கு அருள் புரிந்தார். உடனே முசுவுக்கு மெய்ஞ்ஞானம் உண்டாகிப் பரமபிதா மாதாக்களாகிய அவ்விருவரையும் தொழுது, ''அடிமையின் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வேண்டி நின்றது. சிவபெருமான் அம்முசுவை நோக்கி, ''நீ எம்மை அருச்சனை செய்த புண்ணியத்தால் மறுபிறப்பிற் புவியில் பிறந்து உலகம் முழுவதையும் அரசாளும் பேற்றைப் பெறுவாய்'' என்று அருளிச் செய்தார். அத்திருவாக்கைக் கேட்ட முசு, பேரானந்தம் அடையாமல் மிகுந்த துன்பமே அடைந்தது. ''எந்தையே! அடியேன் நாள்தோறும் உங்களைச் சேவித்து அழியாத பேரானந்தப் பெருஞ்செல்வத்தோடு இருப்பதை விட்டு, மண்ணுலகில் போய் அழியும் செல்வ மயக்கில் ஈடுபட்டு அவமாயை கொண்டால் மீண்டும் உய்வது எங்ஙனம்? ஆகவே, பூவுலக ஆட்சி வேண்டாம்'' என்று சொல்லி விட்டது. மாதொரு பாகன் அதனைக் கேட்டு, ''முசுவே! உன் உள்ளக் கிடக்கை நன்று! நீ இப்போது பூவுலகிற் பிறந்து அரசு புரிந்தாலும் எம் நினைவை இழக்க மாட்டாய். பிறகு நம்பால் வருவாய்! இதற்காக வருந்த வேண்டாம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

''பெருமானே! அடியேன் மானுடனாயபின் செய்வன தவிர்வன இன்னவென்று அறியாது மயங்காவண்ணம் இப்போது நான் எடுத்துள்ள இந்தப் புண்ணியப் பிறவியின் நினைவு மறக்காதபடி முசு முகத்துடன் ஜனிக்க அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டது. சிவபெருமான் அவ்வாறே முசுவுக்கு வரம் அளித்தார்.

சிவபெருமானிடம் வரம் பெற்ற அம்முசு சத்திய சம்பன்னனாகிய அரிச்சந்திரன் மரபில் குரங்கு முகத்துடன் பிறந்தது. இவ்வாறாகப் புவியில்தோன்றிய முசுகுந்தன் சோழ நாட்டில் உள்ள கருவூரிலிருந்து ஆட்சி புரிந்து வாழ்ந்து சூரபன்மனுக்கு அடங்கியிருந்தான்.

முசுகுந்தச் சக்கரவர்த்தியிடம் இந்திரனின் தூதர்கள் போய், ''அரசே! நாங்கள் உமது நண்பராகிய இந்திரனின் தூதர்கள். முருகப் பெருமான் சூரபன்மனைக் கொன்று உங்களையெல்லாம் அசுர ஆட்சியிலிருந்து விடுவித்து விட்டார். தம் துணைவர்களுடனும் மற்றவர்களுடனும் திருப்பரங்குன்றம் வந்து வீற்றிருக்கிறார். அப்பெருமானுக்கு இந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை நாளைக்குத் திருமணம் செய்து கொடுக்கிறார். அச்செய்தியை உங்களிடம் சொல்லி அழைப்புக் கூறுமாறு எங்களைத் தேவராஜன் அனுப்பியிருக்கிறார்'' என்று கூறினார்கள்.

முசுகுந்தன் அளவற்ற மகிழ்ச்சியுற்றான்; செய்தி தெரிவித்த தூதர்

களைப் பலவாறாகப் புகழ்ந்து தழுவிக் கொண்டான். ''இந்த நல்ல செய்தியைக் கூறிய தங்களுக்கு நான் செய்யத் தகுந்த உபகாரம் ஒன்றுமில்லை. என்னிடத்துள்ள நிதிகள் எல்லாவற்றையும் தரவா? என் விருதுகளைக் கொடுக்கட்டுமா? அல்லது என் அரசாட்சியையே கொடுக்கட்டுமா? உங்களுக்கு வேண்டியது யாது?'' என்றான்.

''நீங்கள் விரைந்து திருப்பரங்குன்றமடைந்து திருமணத்தில் கலந்து கொள்வதே எங்களுக்குப் பரிசுகளில் சிறந்த பரிசில் போலாகும்'' என்று தூதர்கள் கூறி விடைபெற்றனர்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலிய அரசர்கள் திருப்பரங்குன்றம் சேர்ந்து திருமணச் சாலையை அடைந்தனர். எம்பெருமானின் திருமணத்தைக் காண தேவர், சித்தர், இயக்கர், வித்யாதரர் முதலிய யாவரும் வந்து குழுமினார்கள். தேவமாதர்களும், முனி பத்தினிகளும், நாக கன்னிகளும் வந்து குழுமினர். அவர்கள் அனைவரும் உலகநாயகனின் கைப்பிடித்து உலக நாயகியாக விருக்கும் தெய்வயானை அம்மையாரை அடைந்து தொழுதனர். 'எவ்வுலகுக்கும் நீயே இறைவி' என்று தெய்வயானையைப் புகழ்ந்தனர்.

தெய்வப் பெண்கள் தெய்வயானை அம்மையின் தலைக்கு நறுநெய் தடவி நீராட்டினார்கள்; பச்சைக் கற்பூரம் தடவிப் பன்னீர் தெளித்தார்கள்; கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டினார்கள்; தலைக் கோலங்களைச் சாத்தினார்கள்; மலர் வகைகளைச் செருகினார்கள்; மாலைகளைச் சூட்டினார்கள்; கருஞ் சாந்துப் பொட்டு இட்டார்கள்; காதிலே புலிமுகப் பணியும், கழுத்திலே முத்துமாலையும், கைகளில் வளையல்களையும் அணிவித்தார்கள்; தோள்களிலே தொடிகளைப் புனைந்தார்கள்; கால்களிலே பாடகம், சிலம்பு பாதசரம் முதலியவற்றை அணிவித்தார்கள். அழகுக்கு அழகு செய்தார்கள்.

இந்திரன் பிரம்மதேவரை நோக்கி, ''திருமண மண்டபம் அமைக்கப்பட்டு விட்டது. திருமணத்துக்கு வரவேண்

25 கல்கி
வெள்ளி விழா
பரிசுத்திட்டம்

'கல்கிப் பத்திரிகை தனது இலக்கிய சேவையில் இருபத்தைந்து ஆண்டுகளை இவ் வருஷத்துடன் பூர்த்தி செய்கிறது. எழுத்தாளர்களின் எழுத்துப் பணி சிறக்கச் செய்வதே இந்த வெள்ளி விழா ஆண்டை விமரிசையாகக் கொண்டாடுவதற்கான சிறந்த வழி என்ற அளவில் இருபத்தையாயிரம் ரூபாய் பரிசுத் திட்டம் வைத்துள்ளோம். சிறந்த நாவலுக்கு முதல் பரிசு ரூபாய் 10,000; இரண்டாவது பரிசு ரூபாய் 7,500; மூன்றாவது பரிசு ரூபாய் 5,000. சிறந்த சிறுகதைக்கு ரூபாய் 1,000; இரண்டாவது பரிசு ரூபாய் 500; மூன்றாவது பரிசு பத்துச் சிறுகதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 100 வீதம் ரூபாய் 1000.

விதிகள் :

- சிறுகதைகள் கல்கியில் ஆறு முதல் பத்துப் பக்கங்கள் வரை வருமாறு இருக்கலாம்.
- நாவல்கள் தொடர்ந்து ஆறு பக்கங்கள்வீதம் ஒரு வருஷம்வரை வருமாறு அமைந்திருக்கலாம்.
- நல்ல வெள்ளைக் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டுமே கதைகள், நாவல்கள் எழுதி அனுப்பப்பட வேண்டும்.
- கதைகள், நாவல்களைத் தபால் மூலம் அனுப்பலாம். ரிஜிஸ்தர் செய்வது நலம். முடிந்தால் காரியாலயத்தில் நேரிடையாகவும் கொண்டு வந்து தரலாம்.
- ஆசிரியர், கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.
- ஒருவரே இந்தப் போட்டிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை, நாவல்களை அனுப்பலாம்.
- இலக்கியத்துறை அறிஞர்கள் சிலர் பஞ்சாயத்தார்களாயிருந்து பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.
- பரிசு பெறாத கதைகளானாலும் பிரசுரத்துக்கு ஏற்றவை கல்கியில் இடம் பெறும். அவற்றுக்குரிய வழக்கமான சன்மானத் தொகை அளிக்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படாத கதைகள், நாவல்களைத் திரும்பப்பெறப் போதுமான தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும்.
- கதைகள், நாவல்கள் சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.
- இந்தப் போட்டியில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.
- நாவல், சிறுகதைப் போட்டிகளின் முடிவுத் தேதி 28-2-1966.

டிய தேவர்கள் அனைவரும் வந்து விட்டார்கள். திருமணத்துக்கு நல்ல நேரம் பார்த்துச் சொல்லுங்கள்'' என்று வேண்டிக் கொண்டான். 'காலாதீதராகிய கந்தக் கடவுளுக்கு எந்த நேரமும் நல்ல நேரம்தான். எனினும், இந்த நேரம் சிறந்த நேரம்'' என்று பிரம்மதேவர் கூறினார்.

உடனே இந்திரனும், நான்முகனும் திருமாலும் ஏனைய தேவர்களும் குமாரக் கடவுளுடைய திருக்கோயிற்சென்று அன்புடன் அப்பரமபதியின் பாதகமலங்களைப் பணிந்தனர். ''எம்பெருமானே! தேவரீர் தெய்வயானையைத் திருமணம் செய்து கொள்ளத் திருமண மண்டபத்துக்கு எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். அவ்விண்ணப்பத்தைக் கேட்ட முருகக் கடவுள், ''அவ்வாறேயாகுக'' என்று அருள் புரிந்து வீரவாகுதேவருடனும் மற்றைய பூதப் படைத் தலைவர்களுடனும் புறப்பட்டார். எம்பெருமான், சூரபன்மனாகிய மயில்வாகனத்தின் மீது அமர்ந்தார். பிரம்மாதி தேவர்கள் வணங்கித் துதித்துப் பூமாரி பொழிந்து மருங்கிலே சென்றார்கள். சந்திரனும் சூரியனும் வெண்கொற்றக் குடை பிடித்தனர். வாயு சாமரம் வீசினான். வருணன் ஆலவட்டம் அசைத்தான். இயமன் வாட்படை ஏந்தினான். அண்டங்கள் குலுங்கக் கோழிக் கொடி கிளர்ந்து ஆர்த்தது. வேதங்கள் ஆர்த்தன. அரம்பையர் ஆடினர்; வித்தியாதரர் பாடினர்; முனிவர்கள் துதி செய்தனர். பூதர்கள், பஞ்சபூதங்கள் பூவுலக அரசர் முதலியோர் ஆர்த்தார்கள். திண்டி, பேரிகை, தண்ணுமை, சல்லரி, திமிலை, குடமுழா, காளம், சங்கம் முதலிய இசைக் கருவிகளைப் பூதர்கள் அண்டங்கள் வெடிக்கும்படி முழக்கினர். இவ்வாறாக, முருகன் பொன்மயமாகிய வீதியின் வழியாய்த் திருமணச் சாலைமுன் வந்தருளினார்.

முனிவர்களும் அவர்களின் பத்தினிப் பெண்களும் மங்கலப் பொருள்களுடன் முருகப் பெருமானை எதிர்கொண்டு அழைத்தார்கள். தேவப் பெண்கள் ஆரத்தி எடுத்தனர். எம்பெருமான் மயில் வாகனத்திலிருந்து இறங்கினார். அரம்பையர் சூழ எதிரே வந்து வணங்கிய இந்திராணி நாணத்துடன் கந்தவேள் கழலிணையைக் காமதேனுவின் பாலினால் பூசித்து நறுமலரிட்டு வணங்கி ஆரத்தி எடுத்தாள்; மாலைகளையும் மலர்களையும் சூட்டினாள். பின் மற்ற தேவப் பெண்களுடன் தன் கோயிலை அடைந்தாள்.

தேவர்கள் புடைசூழ முருகப்பெருமான் திருமணச்சாலையை அடைந்து நடுவே அமைக்கப்பட்டிருந்த நவரத்தின சிங்காதனத்தில் வீற்றிருந்தருளினார். திருமால், பிரம்மா, முனிவர்கள், தேவர்கள், வீரவாகு முதலிய வீரர்கள் முதலியோர் அவரவர் இடங்களில் அமருமாறு குமாரவேள் அன்புக் கட்டளை இட்டார். அவ்வண்ணமே அவர்கள் தத்தம் இடங்களில் அமர்ந்து கொண்டார்கள்.

தெய்வங்களிற் பெரிய மகாதேவர், இப்போது 'சம்பந்தி' என்ற முறையில் விருந்தினரிடையும் தனி மதிப்புப் பெற்றவரன்றோ? ஆலமுண்ட அண்ணல் தமது மாற்றுருவான மகனின் மங்கல வெற்றியையும், மணவினையையும் எண்ணி மகிழ்ந்து உமாதேவியாரோடு ஆகாயத்தில் தோன்றியருளினார். அவரது பூதப் படைகளும் உடன் தோன்றின. முருகக் கடவுள் தாய் தந்தையரைக் கண்டு, உள்ளம் உவந்து ஓடி அவர்கள் மலரடியைத் தொழுதார். மாலயனாதி வானவரும் தொழுதார்கள். சிவபெருமானும் உமாதேவியாரும் குமாரக் கடவுளை அன்போடு எடுத்துத் தழுவி மகிழ்ந்தார்கள். குமாரக் கடவுள் சிவபெருமானையும் உமா தேவியாரையும் திருக் கல்யாண மண்டபத்துக்குள் அழைத்துச் சென்றார். அப்பொழுது திருவருளினால் ஆகாயத்திலிருந்து ஓர் அழகிய அரியணை வந்தது. அதன்மீது சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளியிருந்தார். முருகப் பெருமானைச் சிவபெருமான் தம் மடியில் இருத்தி அருள் புரிந்தார். பிரம்மா சிவபெருமானைப் பணிந்து நாத் தழுதழுக்கக் கூறுவார்: ''எம்பெருமானே! அவுணர்களை அழிக்க அன்று ஆறுமுகப் பெருமானைக் கொடுத்தருளினீர்கள். சுப்பிரமணியக் கடவுள் சூராதியவுணர்களை அழித்துத் தேவர்களைச் சிறையிலிருந்து மீட்டருளியதற்கு நன்றி தெரிவிக்குமுகமாகத் தேவராஜ குமாரியை அவருக்குத் திருமணம் செய்து கொடுக்க முன்வந்திருக்கிறோம். ஆனால் முருகனைத் தந்துதவிய தங்களுக்கு எம் நன்றியை எப்படித் தெரிவிப்பது?''

சிவபெருமான் முறுவலுடன் தேவர் யாவருக்கும் அருள் செய்து, ''இனி வேத விதிப்படி திருமணச் சடங்கு நிகழட்டும்'' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

கருணையே வடிவாகிய தெய்வயானையம்மையார் திருப்பரங்குன்றமாகிய கல்மலையின் மீது நடந்து வந்தார். அப்போது திருவடியில் விளங்கும் கிண்கிணிகளீர் கலீர் என ஒலித்தன. (தொடரும்)



கிறிஸ்துமஸ் துணுக்குகள்

● கிறிஸ்துவர்களின் முக்கியமான ஆலய பூசைக்கு 'மாஸ்' என்று பெயர். கிறிஸ்து 'மாஸ்' என்ற பதங்களைக் கொண்டதுதான் கிறிஸ்துமஸ் !

● கிறிஸ்து பிறந்த தினத்தன்று கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து சென்ற மூன்று மன்னர்கள் பாலகனை கிறிஸ்துவுக்கு வெள்ளைப் போளம், தூவவர்க்கம், பொன் என்ற மூன்று பரிசுப் பொருள்களைக் கொடுத்தார்கள். அதையொட்டியே இன்றும் அந்த நாளைக் கொண்டாடுகிறவர்கள் நட்பின் சின்னமாகப் பரிசுகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

● கிறிஸ்து பிறந்த அன்று விழித்து மந்தையைக் காவல் காத்துக் கொண்டிருந்த இடையர்கள் ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஜோதியைக் கண்டார்கள். அப்பொழுது அங்கு தோன்றிய தெய்வ தூதர்கள் கிறிஸ்து பிறந்திருக்கும் நற்செய்தியை அறிவித்ததுமில்லாமல் — 'உன்னதத்திலிருக்கும் தெய்வத்துக்கு மகிமையும், பூமியிலே நல்ல மனமுள்ள மனிதர்களுக்கு அமைதியும் உண்டாவதாக!' என்ற கீதத்தைப் பாடினார்கள். ஐரோப்பாவில் கிறிஸ்து மதம் உதயமாகு முன்பே பண்டிகைகளைக் கொண்டாடும்போது, எல்லாருமாகக் கூடிப் பாட்டுப் பாடி ஆனந்திப்பது வழக்கமாக இருந்தது. ஆகையால் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடியவர்கள், தெய்வ தூதர்கள் கொண்டாடிய முறையைப் பின்பற்றியதில் ஆச்சரியமில்லை. பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகத் தொகுத்து இசைகள் எழுதப்பட்டன. இவைகளைத்தான் எல்லா நாடுகளும் கிறிஸ்துமஸ் 'கேரல்'கள் என்ற பெயரால் உபயோகிக்கின்றன.

● செயின்ட் நிக்கோலாஸ் என்ற பெயர் கொண்ட பிஷப் ஒருவர் எப்பொழுதும் குழந்தைகளுக்கு மிட்டாய்களும், விளையாட்டுச் சாமான்களும் கொடுத்து வந்தார். அவர் பெயர்தான் காலப் போக்கில் மாறி சாண்டா கிளாஸ் — 'கிறிஸ்துமஸ் தாத்தா' என்ற பெயராகி விட்டது. செந்நிற உடையும், அவ்வுடையில் வெள்ளைப் பஞ்சு அலங்கரிப்பும், வெள்ளை மீசையும், தாடியுமாகச் சிவப்புக் குல்லாய் அணிந்த வயோதிக மனிதர் பூட்டப்பட்டிருக்கும் வீட்டினுள் நுழைந்து உறங்கிக் கொண்டிருக்கும் சிறுவர் சிறுமியர்களுக்குக் கிறிஸ்துமஸ் பரிசு கொடுத்துப் போவார் என்பது சிறுவர்களின் நம்பிக்கை.

● அவர்கள் இயேசுவை நோக்கி ''நீங்கள் ஆயர்களோடும் பாவிகளோடும் போஜபானம் பண்ணுகிறதென்ன?'' என்றார்கள். இயேசு அவர்களிடம், 'பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனம் திரும்புவதற்கு அழைக்க வந்தேன்' என்றார்.


பிரிட்டானியா
கோல்டன் ப:ப்
GOLDEN B.B.Co PUFF
பிரிட்டானியாவினால் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கோல்டன் ப:ப் பிஸ்கட்டுகள், புத்தம் புதியவை, முறுகலானவை, புஷ்டிச் சத்தும் உள்ளவை. டீ அல்லது காபி அருந்தும்போது, ஜாம், வெண்ணை, அல்லது பாற் கட்டியுடனே தின்பதற்கு மிகச்சிறந்தவை. அவற்றை பரிட்சை செய்து பாருங்கள்—வாயில் போட்டதும் கரைந்து போகின்றன. இன்றே கொஞ்சம் வாங்கி, பிரிட்டானியா கோல்டன் ப:ப் பிஸ்கட்டுகளின் புத்தம் புதிய சுவையின்பத்தை அனுபவியுங்கள்.
GOLDEN PUFF
BRITA
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள்
வெளிநாடுகளிலும் புகழ் பெற்றவை



ஆசை முகம்

இரட்டைப் பிறவிகள் உருவ ஒற்றுமையை வைத்துக் கொண்டு ஆள் மாறாட்டம் செய்து தமிழில் எத்தனையோ திரைக் கதைகள் உருவாகிவிட்டன. ஆனால் 'ப்ளாஸ்டிக் ஸர்ஜரி'யின் மூலம் ஒருவன் உருவத்தை மாற்றி அதை வைத்துக் கொண்டு மோசம் செய்யும் விதம் புதுமையானதுதானே? மகனைப் போலவே உருமாறி வந்திருப்பவனைத் தாய் தந்தையர்களும் கண்டு ஏமாந்து விடுவது திரையுலகில் புதுமையில்லை! பெற்றவர்களுக்கே யார் தங்கள் மகன், யார் போலி என்று தெரிந்துகொள்ள முடியவில்லையென்றால், காதலிக்கு எங்கே தெரியப் போகிறது! (காதலுக்குத்தான் கண்ணில்லையே!)

எம். ஜி. ஆர். "ஆசை முக"த்தில் மூன்று முகங்களாக வருகிறார். ஒன்று, கதாநாயகன் மனோகர்; இன்னொன்று, ரௌடி வஜ்ரவேலு; மூன்றாவது, சிங்கப்பூர் சித்தப்பா — ஆக மூன்று முகங்கள். மூன்று வேடங்களிலும் எம். ஜி. ஆர். கண்ணீர் விட்டு, மல் யுத்தம் புரிந்து, மாறு வேடத்துடன் பல சாகஸங்களைப் புரிகிறார்.

சரோஜா தேவி கொஞ்சலும், கெஞ்சலும் மிஞ்சலுமாகக் காதல் காட்சிகளில் மிகவும் தாராளமாக விட்டுக் கொடுத்து நடித்திருக்கிறார். கண் கலங்கித் தவிக்கவும் செய்கிறார்.

கீதாஞ்சலி சிறிது நேரமே வந்தாலும் மனத்தில் பதியும் வண்ணம் நடித்திருக்கிறார்.

எம். என். நம்பியாருக்கு வழக்கமான பழகிப்போன வில்லன் நடிப்பு.

"நீயா, இல்லே — நானா?" "யாருக்கு யாரென்று தெரியாதா?" என்ற வாலியின் பாட்டுக்கள் இனிமையாக ஒலிக்கின்றன.

நாகேஷ் இல்லாத படம் ஏது? "ஆசை முக"த்திலும் நாகேஷ் வருகிறார். ஹாஸ்ய வெடிகளை அநாயாசமாக உதிர்த்துக் கதாநாயகனுக்குத் துணைவனாயிருந்து உதவுகிறார்.

நீலவானம்

அவன் காதலித்தது ஒருத்தியை; ஆனால் கைப்பிடித்தது வேறொருத்தியை. காதலி தான் அவனிடம் கொண்ட காதலைக் கடைசிவரையில் மறக்கவில்லை; அவனுக்குப் பலவிதத்திலும் நினைவூட்டிக் கொண்டிருக்கிறாள்; அதற்காகவே அவன் கம்பெனியில் டைப்பிஸ்டாக வேலைக்கு அமருகிறாள். கட்டிய மனைவி புற்று நோயால் அவதிப்படுகிறாள். அந்தக் கொடிய நோய் அவளைப் பற்றியிருப்பது தெரியாமலிருக்க அவன் அவதிப்படுகிறான். குழந்தை உள்ளம் கொண்ட அந்தப் பேதைப் பெண் கணவன் சொல்லுவதை யெல்லாம் நம்புகிறாள். கடைசியில் உண்மை தெரிகிறது; அவள் உயிர் பிரிகிறது; படம் முடிகிறது.

சினிமாத் தியேட்டரில் வேலை பார்க்கும் பாபு வழியோடு போகும் கார்களில் 'லிப்டு' கேட்டு வேலைக்குப் போகும் காட்சியோடு படம் விறுவிறுப்பாக ஆரம்பமாகிறது. அப்புறம் சோர்ந்து விடுகிறது. ஏழை பாபுவாக வரும் சிவாஜி கணேசன் விமலாவோடு கொஞ்சிப் பேசிச் சிரித்து, ஆடிப் பாடி, நீந்தி விளையாடுகிறார்! இத்தனைக்குமாகச் சேர்த்துக் கடைசியில் கண்ணீர் வடிக்கிறார்.

பேதைப் பெண் கௌரியின் பாகம் தேவிகாவுக்கு ரொம்பப் பொருத்தம்.

காதலிக்க நேரம் இருக்கும் ராஜஸ்ரீக்குக் கண்ணீர் வடிக்கவும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால் பாபு—விமலா அடிக்கும் கூத்துகள் அளவுக்கு மீறிப் போய்விடுகின்றனவே! இதெல்லாம் அவசியந்தானா!

பாடல்கள் பாடாய்ப் படுத்துகின்றன, "சொல்லடா வாய் திறந்து" என்ற பாட்டைத் தவிர! இப்படத்துக்கு நன்றாகத் திரைக் கதை, வசனம் எழுதியிருப்பவர் கே. பாலசந்தர்.

"நீர்க் குமிழி"யில் வரும் புற்று நோய் "நீல வானத்தி"லும் வருகிறதே என்று கேட்பதில் பொருளில்லை. புற்றுநோய் இங்குதான் வரும் என்று ஏதாவது நியதி இருக்கிறதா என்ன?



கரையேறியவள்

ராஜம் கிருஷ்ணன்



வரலாற்று ஆராய்ச்சிக்குரிய தலமாக விளங்கும் பழைய கோவாவின் சிதிலமடைந்த மாதா கோயிலொன்றின் பகுதியில் படுத்தது தெரியாமல் அயர்ந்து விட்ட வேலுவை, காலையில் 'புரொபஸர் ஐயா'தான் எழுப்ப வேண்டியிருக்கிறது.

''பரவாயில்லையே, பையா! அத்தனை கரப்பான் பூச்சிகளுக்கும் டிமிக்கி கொடுத்து விட்டுத் தூங்கி விட்டாயே?..... குட்!'' என்று சிரித்துப் பாராட்டிக் கொண்டே அவர் அவனை எழுப்புகிறார்.

வேறு எங்கோ நடுக் கடலில் கண் விழிப்பவன்போல் கண்களைக் கசக்கிக்கொண்டு சுற்று முற்றும் பார்க்கிறான். துலங்காமையின் பனி அகல, கண் பார்வையும் மனத் தெளிவும் புலனாகின்றன. பகலிலும் இருள் உறவாடும் கூடம். பெரிய பெரிய காரைக் கட்டித் தூண்களில் வளைந்து கவிந்திருக்கும் கூரைக் கட்டுமானம். பழைய காகிதங்களும், தேசப் படங்களும் அடுக்கடுக்காய்க் காட்சி அளிக்கும் மர அலமாரிகள். காரை பெயர்ந்த சுவர்களில் குண்டோதரர்களாய் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போர்த்துகிசியத் துரைகளின் படங்கள், பழைய துப்பாக்கிகள், வாட்கள், உடைசலும் கூளமுமாக மரச் சாமான்கள், அக்கிரமக்காரர்களின் அட்டூழியங்களுக்காளாகி, வரலாற்றின் விளக்கச் சாட்சியங்களாக நிற்கும் பின்னமுற்ற கோயில் சிலைகள் எல்லாமே அவனுக்கு முதல் நாள் மாலையில் அவன் வாழ்க்கையின் அத்தியாயத்தில் ஏற்பட்டதோர் எதிர்பாராத் திருப்பத்தை அறிவுறுத்துகின்றன.

அந்த இடிபாட்டுத் தலத்தில் ஆராய்ச்சிப் பணி புரிய வந்திருப்பவர், இருளுக்கும் தனிமைக்கும் அஞ்சாமல் தவசி போல் வாழ்வதையும், அவரைச் சம்சாரி யாக்குபவன் போல் தானும் வந்து ஒட்டியிருப்பதையும் நினைவு படுத்திக்கொள்பவன் போல் சிரித்துக் கொண்டே எழுந்து நிற்கிறான். ''ஸார்....?''

''இதோ, கயிறும் வாளியும் இருக்கின்றன. நேற்று காட்டினேனல்லவா, கிணறு? அங்கு போய் முகத்தைக் கழுவிக் கொண்டு ஒரு வாளித்தண்ணீரும் எடுத்துக் கொண்டு வா, பார்க்கலாம்.''

வாளியையும் கயிற்றையும் எடுத்துக் கொண்டு இருள் நிலவும் அந்தக் கூடத்தைக் கடந்து, புறாக்கள் சிறகடித்துப் பறக்கும் தாழ்வரைகளைக் கடந்து, வெளியே கிணற்றுக்கு வருகிறான். புல்—பூண்டு பாசிகளெல்லாம் அகற்றப்பட்டுச் சுத்தமாக விளங்கும் கிணற்றில் ராட்டினமில்லை. மொட்டைக் கிணறு. வாளியைக் கயிற்றில் கட்டி உள்ளேவிடப் போகையில் —

''ஐயோ.......!'' என்ற ஒலி அவன் கண்டத்திலிருந்து எழும்புகின்றது. ஓட்டமாக ஓடுகிறான்.

''ஏலேய், எந்தூருடா உனக்கு?''

கடல் போலத் தெரியும் மாண்டவி ஆற்றை வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கும் பையன் தூக்கிவாரிப் போட்டாற் போலத் திரும்புகிறான். தாயின் மடியைத் தவிர வேறு உறவை அறிந்திராத குழந்தையை மிட்டாயைக் காட்டி வெகு தொலைவு அழைத்துச் சென்றபின் காதுத் திருகாணியைக் கழற்றிக் கொண்டு அங்கேயே விட்டுச்

செல்லும் நயவஞ்சகத்துக்கொப்பானதொரு வஞ்சகத்துக்கு ஆளாகி நின்ற அவனுக்கு அவளுடைய தாய்மொழியின் அந்தக் குரல் தேனாக இருக்கிறது; சூடாக இருக்கிறது.

''என்னடா, முழிக்கிறே? உருப்படாமப் போக, எங்கேயிருந்துடா வந்திருக்கிறே?''

கேள்வி கேட்டவளை வேலு இன்னமும் வியப்பும் திகைப்பும் கூடியவனாகவே நோக்குகிறானே ஒழிய, பேசத் தெரியவில்லை. மேலே துணி போடும் பண்பைத் துறந்த கவுன்காரிகளையும், முழங்காலுக்கு மேல் தூக்கிக் கட்டிய கச்சமும், ஒட்ட முடிந்த முன்றானைச் சேலையுமாக எந்நேரமும் குளிக்க இறங்குபவர்களைப் போலவோ, கோதாவில் இறங்குபவர்களைப் போலவோ காணப்படும் சேலைக்காரிகளையுமே இந்த மூன்று நாட்களாகக் கண்டிருக்கும் கண்களுக்கு, கால்கள் மறையப் பாங்குடன் அணிந்திருக்கும் அவளுடைய கந்தல் சேலையும், சீர்குலைந்த தோற்றமும்கூட அழகாக இருக்கின்றன. பன்னிரண்டு பிராய வேலுவுக்கு, அவனுடைய அம்மாளை நினைவூட்டுகிறாள் அவள்.

''என்னடா நீ? கேக்கிறேன், பேசாம நிக்கிறே? ஆயிப்பனை ஏமாத்திட்டு எந்தக் கழுதை பேச்சையாவது கேட்டுகிட்டு இங்கே ரோட்டோரம் உருள வந்தியா? ஊரு நாட்டிலே பட்டினி கிடந்தோ, சாவாம செத்தோ இருந்து ஒழியக் கூடாது? ஏன்டா? எந்துருடா உனக்கு?'' வேலுவுக்கு மூன்று நாளைய ஆற்றாமை அழுகைப் பிரளயமாக வந்து விடும் போலிருக்கிறது.

அவளுக்கும் மனசு இளகினாற்போல் குரலில் சூடு குறைந்து இதமாகிறது.

''சூதுவாதறியாத பச்சைப் பிள்ளையாக இருக்கிறாயே? ஏன்டா லேய் பள்ளிக்கூடத்திலே படிச்சிட்டிருந்தயா? மூனு நாலு நாளா கடை கண்ணிப் பக்கம் பஸ் ஸ்டாப்பு, படகுத் துறை எல்லாம் கூலிக்குக் கெஞ்சுறாப் போல பாஷை புரியாத பாவியா நின்னிட்டிருக்கியே? இந்த ஊரிலே பிழைக்கலாம்னு எந்தப் பருதையடா உன்னை இங்கே இட்டுட்டுவந்தான்?''


''நடராசுன்னு ஒரு பையன். அங்கே முன்னே கரூர் டவுனிலே ரொட்டிக் கடையிலே வேலை செஞ்சான். அவன் ஊருக்கு இப்ப வந்தப்ப, இங்கே வேலை கிடைக்கும், கூலி கிடைக்கும்னு இட்டாந்தான்......''

''யார்ரா அது, நடராசு? இந்த ஊரிலியா, வாஸ்கோவியா இருக்கிறான்?''

''இங்கேதான் இருப்பதாகச் சொன்னான். செவப்பா, கொஞ்சம் ஒல்லியா, ஒட்டு மீசை வைச்சுக்கிட்டு, டெரிலின் சட்டை போட்டுட்டிருந்தான். இங்கே வந்ததும், 'பஸ் ஸ்டாப்பிலே கொஞ்சம் உக்காந்திரு. நான் போய் எங்க ஓட்டல் மானேஜரிடம் சொல்லிட்டு, உன்னை இங்கே வந்து கூட்டிப் போறேன்'னான்...... மறுக்க...... அவன்.... வரவேயில்லே.''

வேலு துயரத்தை விழுங்கிக் கொள்ளச் சக்தியற்றவனாகிறான்; பசியும் வேறு சேர்ந்து கொள்கிறது.

''அட...... பாவிப் பயலே! ஓட்டல் கிச்சிலே மேசை கழுவுறான். ஊருக்குப் போக



உடுப்பு, தச்சுப் பட்டறை ஜோகிட்ட வாங்கிட்டுப் போனான் ரெண்டு ரூபா கொடுத்து. அவன் இன்னமும் இட்டிட்டிருக்கிறான். கேடு கெட்ட பயல், போட்டிருக்கிற சட்டைவைக்கூடக் கழட்டிக் கொடுத்துட்டுக் குடிச்சிடுவானே? உங்க ஊரா, அந்தக் கழுதை? எந்த ஊரு?"

"கருருக்கசந்தால......."

"ஆயியப்பன் இருக்காங்களா?"

"அம்மா இருக்குது. ஒரு தம்பி, ரெண்டு தங்கச்சி."

"சொல்லிட்டு வந்தியா, சொல்லாம வந்தியா?"

"இம்மாந் தொலைன்னு அது ஒத்துக்காது. பட்டணம் போறதாச் சொல்லிட்டு வந்தேன். நடராக பட்டணம்னுதான் சொன்னான்."

"காசு கீசு இருக்குதா?"

"அம்மா இருபது ரூபா கொடுத்துச்சு. அதை அவன் ரயில் சார்ச்சுக்குன்னுதான் முதல்லே வாங்கிட்டான். ஆனா, சார்ச்சு, டிக்கெட் இல்லாம வந்தோம்....."

"அவனைப் பாம்பு புடுங்க, தம்பி, நான் உனக்கு நல்லது சொல்லுறேன். உன்னோட அக்கானுன்னோ, அம்மா, சின்னம்மானுன்னோ என்னை நினைச்சுக்க. நானக்கே வந்தது தெரியாமல் திரும்பிப் போயிரு. இங்கே ஒரு நிமிசம் நிக்காதே." பையனுக்கு ஏமாற்றமாகத்தான் இருக்கிறது.

"இங்கே வேலையே கிடைக்காதா, அக்கா? நான் ஆறுவதுகூடப் படிச்சிருக்கிறேன்....."

"வேணும் வேணும், தம்பி. உங்க ஆயின்னு ஒருத்தி இருக்கிறான்னு சொல்லுறே. தாய்க்குப் புள்ளையா மனசு குளிரப் போய்ச் சேர்ந்திரு. இந்த ஊரு நல்லாத்தானிருக்குது. எங்கே பார்த்தாலும், தண்ணியும் பச்சையுமாக் குளுகுளுன்னுதான் இருக்குது. ஆனா, பச்சையை நம்பி நாம பிழைச்சிடுவோம்னு நினைச்சிடாதே. வாழைக் குருத்துப் போல வளர்ந்து பச்சை புடிக்கிற வயசுடா, தம்பி, ஊருக்குப் போயிரு...."

பீறி வரும் கண்ணீரை அடக்கிக் கொள்ள அண்ணாந்து பார்க்கிறான் பையன். எதிரே, சாலைச் சந்தியில் விளம்பரத் தகடு கண்ணில் முட்டுகிறது. அந்தப் பெரிய விளம்பரத்தில் சினிமா நடிக நடிகையர் இல்லை. அத்தனைக் கத்தனை உயரமாக ஒரு குப்பி. கிழே கோப்பைகள். இன்னும் கிழே ஆணும் பெண்ணும், ஆணும் பெண்ணுமாய்ப் பார்க்கும் தலைகள்.

வேலு கடந்த மூன்று நாட்களாக அந்த நகரத்தின் கடைகளில் எல்லாம் 'காணும்' காட்சிதான். அந்தி மயங்குமுன்பே மதுசார தேடி விசும் இடங்களை அச்சம் விளைந்த நெஞ்சுடனேயே கடந்து அலைந்திருக்கிறான்.

"ஊம், தாயை ஏமாத்திட்டு வந்தேயில்லே? அந்தப் பாவம் எதுனாலும் சாப்பிட்டியா இல்லைக்கு? ரெண்டடிச்சுப் போச்சே?....." என்று அவள் கேட்கவும் மீண்டும் சுயநினைவுக்கு வருகிறான் பையன்.

"மூட்டை தூக்கினேன். எட்டணா கூலி கிடைச்சுச்சு. அங்கே பாலத்துக்கப்பால் சோத்துக் கடையிலே ஆறணாவுக்கு வெறும் சோறு கிடைக்குன்னாங்க. ரெண்டு நாளா... சோறே இல்லே. வெறும் டீ..... ஒருக்க ரெண்டு சின்ன ரொட்டி......."

"கூட்டிட்டு வந்த பாவி கொள்ளையிலே போக" என்று அவள் நா நடராசவுக்கு வசைச் சொற்களைப் பொழிய, அவனைப் பின்னே வரச் சொல்லிவிட்டு வேகமாக நடக்கிறாள். சாலையின் ஒருபுறம் ஆற்றின் அலைப் பரப்பில் சூரிய ஒளி செய்யும் வித்தைகளும், அப்பால் குப்பல் குப்பலாகத் தெரியும் குன்றுச் சரிவுகளும் பசி எரிச்சலையும் ஏமாற்ற எரிச்சலையும் வெல்ல முயலுகின்றன. விரிந்து பரந்த ஆற்றின் கரையில் படித்துறைகளில்லை. பெண்களின் சிரிப்பொலி இல்லை, பிள்ளைகளின் கோலாகல நீர் விளையாட்டுக்கள், நீந்தும் ஆரவாரங்கள் இல்லை. துணி துவைக்கும் ஓசைகள் இல்லை. அரச மரங்கள், ஆலமரங்கள் கண்ட இடங்களிலெல்லாம் துணையாய்ப் புன்னகை புரியும் விநாயகப் பெருமான் இல்லை. ஆனால், எண்ணம் குறுகுறுத்து, வறண்ட நெஞ்சுகள் பக்தியுணர்வு பொங்கி வரும்படி அவரை நினைவூட்ட, ஆற்றின் கரையில் — மரத்தடி மேடைகளில், சிலுவைகள் காட்சி தருகின்றன. நடந்து நடந்து ஒரு கிராமத்துக்குள் நுழைந்திருக்கின்றனர்.

"நீ இங்கே மரத்தடியில் நில்லு. எட்டணாவைக் கொடு. சோறு வாங்கியாறேன்."

வேலு திகைத்து விழித்து எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொள்கிறான். சட்டைப் பையில் பொன்னே போல் பதுங்கியிருக்கிறது. அந்தக் காசு. சொந்த மொழிக்கு ஏங்கும் தருணத்தில் அதைப் பேசிப் பரிவுகாட்டுபவளிடம், அதைத் தாரை வார்க்கலாமா? ஒரு தரம் மோசம் போய்ச் சந்தியில் நிற்கிறானே?

"நீங்க..... கடையைக் காட்டுங்கக்கா, உங்களுக்கென்ன சிரமம்? நான் சோறு தின்னுக்கிடறேன்."

"எலேய், நீ சோறு தின்னுப்பியா? ஏன்டா லேய்? இது சோத்துக் கடை மட்டுமா? இந்த மண்ணிலே சோத்துக் கடை மட்டுமா இருக்குது? குடிச்சிருக்கிறதை சகஜமா நினைச்சுக் கூச்சப்படுகிற ஊரு நாட்டுலேருந்து வந்திருக்கிறியே? அது நல்ல மண்ணுடா தம்பி! இங்கே, மானம் கண் தொறந்து பார்த்து, பச்சையும் நீலமும் பொங்கிப் பொழிஞ்சாலும், சனங்க இனிப்பைப் புளிக்க வைச்சுக் குடிச்சு, அறிவைத் தின்னு துப்புற மண்ணு. இங்கே இரு. நான் சோறு வாங்கியாறேன்!"

மறுமொழி கூறத் துணிவின்றி வேலு அவளிடம் காசை எடுத்துக் கொடுக்கிறான். பசும்புற் சரிவில் பாசி பிடித்த சுவர்களுடன் ஒரு மாதா கோவில் தெரிகிறது. புற்சரிவில் ஸ்வேச்சையாகப் பன்றிகள் உலவுகின்றன; கள்ளிப் பலகை, தகரங்களாலான குடிசைகளையும், ஓட்டு வில்லைக்கூரையும் பூச்சிட்டு அலங்காரமாய்த் தெரியும் சிறு வீடுகளையும் கடந்து அவள் செல்கிறாள். அவள் சோறு கொண்டு வராத போனால்? சோறு...... சோறு..... அம்மா... சோறு...!

பத்து நிமிட நேரம் தவியாத் தவித்தபின் ஒரு பீங்கான் தட்டில் சிறிதளவு விறைத்த சோறும் துண்டு மீனும் வைத்து மூடிக் கொண்டு அவள் வருகிறாள். காற்று புளித்த வாடையை அவனுக்கு எதிரே பைகட்டிக் கொண்டு வந்து அவிழ்த்து விசிறி விட்டாற் போன்று. அவள் வரும்போதே வாடை அருவருப்பாக இருக்கிறது. ஆனால் தட்டுச் சோற்றைப் பார்க்கையில் ஒன்றுமே தெரிய வில்லை. அதில் சுவர்க்கமே புகுந்திருக்கிறது!

அவள் ஒரு குடுவையில் தண்ணீரும் கொண்டு வந்து வைத்துவிட்டு, தட்டை வாங்கிப் போக நிற்கிறாள்.

எரிந்த வயிற்றில் சோறு இறங்கியபோது உண்டான உணர்வை எப்படி வெளியிடு வான்? அன்னையையே அணைந்து கொண்ட நிறைவு. அந்தக் கந்தல் புடவை 'அக்காளை' முன்பின் தெரியாமல் தெய்வம் போல் வந்த அக்காளை நெஞ்செல்லாம் குளிர வாழ்த்தி விட்டு, அடுத்த பிரச்னையைக் கண்களில் கேள்வியாக்கிக் கொண்டு நிற்கிறான்.

"அக்கா, இப்போது நானுண்ட சோற் றின் மீதாணையாய் உங்களை மோசம் செய்ய மாட்டேன். இந்த ஊரிலே.... நீங்களா குடுத்தாலும் சரி, யாரிட்டன்னாலும் வாங்கிக் கொடுத்தாலும் சரி, ஒரு பதினஞ்சு ரூபான்னாலும் வாங்கித்தந்திடுங்க. நான் எப்படின்னாலும் ஊருக்குப் போய் உடனே உங்க பணத்தை அனுப்பிச்சுட றேன். உங்களிடம் எழுதின்னாலும் சத்தியம் வச்சிட்டுப் போறேனக்கா!"

"ஏண்டா லேய்! நீ வெள்ளாடுறியா? இல்லே, வெள்ளாடுறியாங்கிறேன்?"

"இல்லேக்கா, நிசமாயில்லேக்கா!"

"உன் எழுத்தைக் கொண்டு போய் என்னடா செய்யச் சொல்றே? சோறு உள்ளே போனதும் திமிரு ஏறுது. கையிலே நாலு காசு கிடைச்சா, திமிரு ஏறிச்சின்னு, நல்ல பயலா ஊருக்குப் போவியோ? ரோட் டோரம்தான் நீயும் புரளப் போறே, சீச்சீ! மூஞ்சையைப் பாரு?"

"நீங்கள் எனக்குத் தெய்வம் மாதிரி வந்து உதவி செய்தீர்கள் அக்கா! இந்த ஊரிலே நம் மாதிரித் தெரியறவங்களே, நிறையப் பேரைப் பார்த்தேன். ஆள் இனம் கண்டாலே காசு கேப்பானென்று ஒதுங் கிட்டு 'நாய் நாய்'னு சொன்னவங்க பல பேர். நீங்க என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேனக்கா, இந்த உதவியைச் செய் தால் நான் உயிருள்ளவரையில் மறக்க மாட்டேனக்கா.........!"

"சரிதாண்டா, கிடக்குது. என் பின்னால் வா, சொல்றேன்!"

நம்பிக்கையுடன் அவன் முகத்தைத் துடைத்துக் கொள்கிறான். டிக்கெட் வாங் காமல் பிரயாணம் செய்யும் துணிவுகூட அவனுக்குப் பழக்கமில்லை. வரும் போது, கிராமத்தை விட்டு வரும் புதிய அநுபவம்—நீளநெடுகக் கனவிலே நினைத்திராத வகை யில் செய்த பிரயாணம். வெவ்வேறு முகங்கள், வெவ்வேறு மொழிகள் எல்லாம் நடராஜ என்ற துணையின் ஆதாரத்தில், சவடாலான அவனுடைய பேச்சும் தந்திர சாமர்த்தியங் களும் ஊட்டிவிட்ட ஆசைக் கனவுகளின் கற்பனையில் ஓர் இன்ப மயக்கமாகக் கழிந் திருக்கின்றன. இப்போது தன்னந்தனியாக நிற்கும் அவனுக்கு, அதே பிரயாணத்தைச் செய்ய, அதே குறுக்கு வழி சாமர்த்தியத் தின் துணிவு கிடையாது.

'அக்கா' அவன்முன் ஓர் அரசிக்குரிய கம்பீரத்துடன் நடக்கிறாள். சுற்றுப்புறத்தின் அழகிய காட்சிகளுக்கும், அந்த எழிலார்ந்த சாலைக்கும் பொருந்தாத ஏழைமையைக் காட்டும் சேலையில், அவள் தலைநிமிர்ந்த துணிவோடு நடக்கிறாளே? அவள் யாரோ? ஒருகால் ஊரிலிருந்து பிழைக்க வந்து பிச் சைக்காரியானவளோ? ஏன் பிச்சைக்காரி யானாள்?...

தழைத்து துளிராய்க் குலுங்கும் முந்திரி மரங்களின் மீது காட்டுக் கொடிகள் வளைத்து ஒரு ராட்சத வேகத்துடன் பற்றிப் படர்ந் திருக்கின்றன. இடை இடையே நெடிது வளர்ந்த தென்னை மரங்கள்; துளிர் விடும் மாமரங்கள். பட்டினியின் முழு எரிச்சலையும் அநுபவித்தபின், உண்ட சோறு மேலிருந்து அழுக்க, மேடும் பள்ளமும் ஏறி இறங்கி



முக்கியமான மாட்சில் ஆட வேண்டும் — ராஜுவுக்கோ முதுகுவலி
இன்று மாலை ஹாக்கி மாட்ச், ஆனால், என்னால் ஆட முடியாது: முதுகு வலி கொல்லுகிறது!
ஸாரிடான் சாப்பிடு! வலி நீங்கும்!
ராஜு ஸாரிடான் சாப்பிடுகிறான்
பிறகு ...
முதுகுவலி போயே விட்டதே! ஸாரிடானுக்கு இவ்வளவு சக்தியா!
ஒரே ஒரு
ஸாரிடான்
'ரோஷ்'
வலியைப் போக்குகிறது ஆசுவாசப் படுத்துகிறது புத்துணர்ச்சி யூட்டுகிறது
உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் விரைவில், அபாயமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடல்வலி, சாதாரண உடற் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.
ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 பைசா
'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வோல்டாஸ் லிமிடெட்

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில் ஈறுகளைப் பலப்படுத்துகிறது என்று



வேறு எந்த டூத் பேஸ்ட்டிலும் இதை விட அதிக வீரிய குளோரோபில் இல்லை. குழந்தைகள் அதன் இனிய பெப்பர்மின்ட் வாசனையை விரும்புகின்றனர்.



பணத்தை மிச்சப்படுத்துங்கள்— பெரிய சைஸ் அளவை வாங்குங்கள்!

CTPA. G. 11 TAM

அவன் வேகத்துக்கு நடக்க அவனுக்கே கஷ்ட மாக இருக்கிறது.

சாயும் பொழுதோடு ஒரு சந்திக்கு வரு கின்றனர்.

ஆற்றின் கரையிலே அழகிய சோலைகளின் இடையே வானுயர ஓங்கி நிற்கும் தூபி களின் உச்சிகளில் வெள்ளைநிறச் சிலுவைகள் தெரிகின்றன. தேவாலயங்களின் ஊராகத் திகழும் இடம். அந்த ஆலயங்களின் உயரத் தின் பின்னணியில் மக்கள் மிகவும் சிறியவர்க ளாகத் தெரிகின்றனர்.

அவன் புல் சதுக்கத்தைக் குறுக்கே கடந்து ஒரு கட்டடத்தின் பின்வாயிலுக்குள் விடு விடென்று செல்கிறான்.

நிச்சலமான அமைதியில் எங்கோ ஒரு மாமரத்தில் கூவும் 'அக்கா' பறவையின் குரல் சோக மயமாக ஒலிக்கிறது. பழைய கால அரண்மனை போன்ற முற்றங்கள், தாழ்வாரைகள், சிதிலமடைந்த வாயிற் கவர்கள். வேலுவுக்கு ஒருகணம் ஒன்றும் புரியவில்லை. அவன் கதைகளில் வரும் மந்திரவாதியோ? சூனியக்காரியோ?

"அக்கா... உங்க வூடு.... இங்கேயா ? எங்கே கூட்டி வர்றீங்க அக்கா......?" என்று நடுநடுங்கிக் குறுகிய வாயிலுக்குள் நுழையா மல் நிற்கிறான்.

"பயப்படாதே : தம்பி, இங்கே ஒரு ஐயா இருக்கிறார். அவரிடம் சொல்லி உனக்கு ஊருக்குப் போக வழி காட்டுகிறேன்........"

அவள் சொல்லும் போதே மரத்தளத்தில் செருப்பொலிக்கும் ஓசை கேட்கிறது.

"சா......மி......!"

மூக்குக் கண்ணாடியும், வெள்ளை நிஜார்ச் சட்டையுமாக அவர் இன்னும் யாரோ இருவருடன் பேசிக் கொண்டே, பழைய தேவாலயத்தின் வளைவு வாயிலின் வழியாக வெளிச்செல்கிறார்:

அவள் காத்து நிற்கிறாள். ஆனால் அவர் அவளைப் பாராமலே செல்கிறார். திரும்பி, "சாமி...... தவ்வு...... ஊரிலேந்து ஒரு பய....எடு குத்தியாத பச்சைப் பிள்ளையைக் கூட்டி வந்து இங்கே சந்தியிலே நிறுத்திட் டான். இந்த மண்ணின் பச்சையிலே பால் விளையுதுன்னு தம்பி, மோசம் போக நிக்கிறான். ஒரு பதினஞ்சு ரூபா......"

அவர் புயல் போல் சீறுகிறார்.

"போ... போ... பதினஞ்சு, இருபது! உன் பேச்சை நான் இனி நம்ப மாட்டேன். பிறந்த மண்ணின் மொழியைச் சொல்லிப் பிச்சை கேட்ட போது, மனசிளகி உனக்கு உதவி புரிய வந்ததே தப்பு. போ.... போ !"

"சாமி, நீங்களே இப்பிடிச் சொல்லிட்டா எப்பிடி? நீங்க உதவி பண்ணினீங்க, நானும் ஊருக்குப் போகணும்னுதான் நினைச்சேன். சாமி, இப்ப பொய்யில்லே, இந்தப் பயலேப் பாருங்க......"

"உன் கள்ளக் கதையெல்லாம் வேண் டாம். எங்கேனும் மரத்தில் தொங்கிச் சாவதுதானே? ஊர் விட்டு ஊர் வந்து, ஏன் பிறந்த இடத்தின் பேரைக் கெடுக்கிறாய்? என் னிடம் பட்டினி, பசி என்று பொய்க் கதை அளந்து, ஊருக்குப் போக ரயில் சார்ஜ் என்று பொய்ச் சத்தியம் செய்து, கள்ளுக் கடையில் கொண்டு கொடுத்து விட்டுச் சீரழி யும் உங்களுக்கெல்லாம் இரங்குவது ரொம்பத் தப்பு........ போ..... போ!"

வேலுவுக்கு யாரோ நெஞ்சில் கைவைத் துப் பிடித்தாற்போல் இருக்கிறது.

"சாமி, இந்த ஒரு தபா என் பேச்சைக் கேட்டுக்குங்க, நான் காலில் விழுந்து கும்பிடறேன். இந்தப் பிள்ளை மூகம் பாருங்க. நீங்க கருணை செய்யாமல் போனால், இவனும் கெட்டுப் போவான். ஆகாசத்து நிலத்தைப் பார்க்கத் தெரிஞ்சவங்களே முந்திரிப் பழத் தின் சாறுக்குத் தப்புறதில்லையே?"

அவர் வேலுவை அப்போது பார்த்துக் கேட்கிறார்.

"என்னடா, இதெல்லாம்?"

"நிசந்தான் ஸார், சத்தியமா, நானே ஊருக்குப் போனதும் மூட்டை தூக்கினாலும் உங்க கடனே அடைச்சுடுவேன். இல்லேயானா.. நீங்களே இங்கேயே வேலே கொடுத்தாலும்.."

"இங்கே வந்து எத்தனை நாளாச்சு ? அதற்குள் குடிக்கக் கத்துக்கிட்டிருப்பாயே ? பாழாய்ப் போன அந்த ஆசைக்குத்தானே இங்கு எல்லாரும் வந்து விழுகிறார்கள்?"

"இல்லே...... இல்லே ஸார்........"

"சரி, உள்ளே வா......"

இயற்கையின் குளிர்ந்த சூழலில், வானும் பூமியும் கடலும் மலையும் குலவி மகிழும் நகரிலே அவனுடைய நெஞ்சில் ஓடி நின்ற பீதி, இடிந்து சிதிலமான இருட்பகுதிக்குள், உடைந்த சிலைகளுக்கும் பூதம் பூதமான படங் களுக்கும் இடையே மறைந்து போகிறது.

"நான் இங்கே தனியாக இருக்கிறேன். ஒரு சோறு, டீ வைக்கக் குடிப் பழக்கம் இல் லாத ஆளில்லாததால் — கஷ்டமாக இருக் கிறது. இருக்கிறாயா, இங்கே, பயமில்லாமல்?"

அவருடைய வெள்ளைச் சட்டையைப் பார்த்துக் கொண்டே, "சரி, ஸார்!" என்று மறுமொழி தந்தபின்னரே, அவளைப் பார்த்து நன்றி தெரிவிக்க வெளியே ஓடி வருகிறான்.

அவளைக் காணவில்லை. 'அக்கா'விடம் கடைசியாக அவன் நன்றி தெரிவிக்கும் வகையில், உணர்ச்சியைக் காட்டி இரண்டு சொல்கூடச் சொல்ல வில்லை.

கீ கீ கீ

"ஸார்...... ஸார்...... அங்கே....."

வேலுவுக்குச் சொல்ல வந்ததைச் சொல்ல முடியவில்லை. அழுகை மோதிக் கொண்டு வருகிறது.


"என்னடா? என்ன ஆயிற்று? கிணற்றுக் குள் வாளியைப் போட்டு விட்டாயா.....?"

"இல்லே, சார்..... கிணற்றுக்குள்....அது அவங்க......" பையனால் வார்த்தையை முடிக்க முடியவில்லை.

அவர் விரைந்து வந்து பார்க்கிறார்.

அதே பழுப்புச் சேலை. அலங்கோலமாகத் தலை முடி தெரிகிறது. "ஆண்டவனே !" என்று கூவியவண்ணம் சில கணங்கள் வானைப் பார்த்து நிற்கிறார். ஆலயத்தின் உச்சி மாடத்திலிருந்து புறாக்கள் விர்ரென்று பறந்து செல்கின்றன.

நான்கு சகடைகளும் ஒரு பெட்டியும் கொண்டதல்ல



இக்காலத்திய நவீன மோட்டார் வாகனம் மிகவும் சிக்கலானதும் நுட்பமான பல உறுப்புகளாலான ஓர் யந்திர சாதனம். சாதாரண ஓர் மோட்டார் 4000 அல்லது 5000 உறுப்புக்களைக் கொண்டது. இயந்திரம் பல நுட்பம் மிகுந்தவை. மிகவும் நுண்ணிய பொறிஇயல் திறமையுடன் நிர்ணய அளவுகளுக்கும் இம்மியும் மாறுபடாது செய்யப்பட்டவை. கேவலம் நான்கு சகடைகளும் ஒரு பெட்டியை மட்டும் கொண்டதல்ல.

ஹிந்துஸ்தான் மோட்டார் கம்பெனி இந்தியாவில் மோட்டார் உற்பத்தியில் வழிகாட்டியாக இருப்பவர்கள். கடந்த பத்தாண்டுகளில் மட்டும், லாண்ட்மாஸ்டர் ஹிந்துஸ்தான் அம்பாஸடர் மார்க் II ஆகிய மூன்று ரக மோட்டார்களைத் தயாரித்தளித்திருப்பதுடன் இரண்டு ரக என்ஜின்களையும் உருவாக்கியிருக்கிறோம். இவை சக்தி மிகுந்த உழைப்புக்கும், எரிபொருள் உபயோகத்தில் சிக்கனத்துக்கும் புகழ் பெற்றவை. சென்ற ஆண்டில் மட்டும் நாட்டில் மொத்த உற்பத்தியான 24,000 மோட்டார்களில் 16,000 மோட்டார்கள் எங்கள் தொழிற்சாலையில் செய்யப்பட்டவை. இந்த சாதனை சாமானியமா என்பதை எண்ணிப்பாருங்கள்.

நமது நாட்டைச் சக்கரங்களின் மீது பொருத்திச் செலுத்தவே நாங்கள் விரும்புகிறோம். எங்களால் ஆனதையும் செய்கிறோம். இது ஒரு பெரும் பணி. முதிர்ச்சி மிகுந்த பொறிஇயல் திறமையும் தொழில் ஆட்பலமும் இதற்கு பெருமளவில் தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்ய முழு நோக்குடன் பாடுபடுகிறோம்.

HM ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், கல்கத்தா

இந்தியா முழுவதும் விற்பனையாளர்கள் உள்ளனர்

பட்டணத்துப் பேச்சு

“கலை நுகர்ச்சி என்பது ஒரு நாட்டியத்தையோ சங்கீதக் கச்சேரியையோ பார்ப்பதுடனும் கேட்பதுடனும் முடிந்துவிடுகிற காரியம் இல்லை. கலை ரசனை என்பது இதற்கு மேற்பட்டது. நமது நடை உடை பாவனைகள் எல்லாமே கலை உணர்வுடன் திகழ வேண்டும். வாழ்க்கையையே கலையாக மதிப்பவன்தான் உண்மையான கலைஞன்.” இந்த அழகான கருத்தை வெளியிட்டவர் ஜஸ்டிஸ் அனந்த நாராயணன் அவர்கள். கலா க்ஷேத்திரத்தின் பட்டமளிப்பு விழாவின்போது தலைமை தாங்கி அவர் இவ்விதம் பேசியது ரொம்பப் பொருத்தமாயிருந்தது. “பல்வேறு கலைகளில் இன்று பட்டம் பெற்றவர்களெல்லாம் அந்தக் கலைகளைப் பயிலும்போது மட்டுமின்றித் தங்களுடைய இனிமையான சுபாவம், அன்பான உள்ளம், சுத்தமான தோற்றம், அழகான இல்லம் போன்ற பலவிதங்களிலும் தங்களது கலை உணர்வை விகசிக்கச் செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

திருவான்மியூரிலுள்ள கலாக்ஷேத்திரத்தின் எளிமையானதும் இனிமையானதுமான புதிய அரங்கில் பட்டமளிப்பு விழாவும் அதைத் தொடர்ந்து திரு எம். டி. ராமநாதனின் கச்சேரியும் நடந்தன.

முதல் நாள் இதே அரங்கத்தில் மைசூர் வாசுதேவாச்சார்யாவின் நூறுவது பிறந்த தின விழாவைச் சென்னை கவர்னர் ஜயசாமராஜ உடையாருவின் தலைமையில் கலாக்ஷேத்திரத்தினர் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர்.

கீ கீ கீ

சென்னையில் ஒருவர் மழை பெய்யாதபோது குடையைப் பிடித்துக் கொண்டு போனாராம். “என்ன ஸார்! மழை பெய்யவில்லை. வெறுமனே நீங்கள் குடையைப் பிடித்துக் கொண்டு போகிறீர்களே!” என்று வியப்புடன் கேட்டார் மற்றவர். அதற்கு அந்த மனிதர் பதற்றப்படாமல், “மாஸ்கோவில் மழை பெய்கிறதே!” என்று பதிலளித்து விட்டுச் சென்றாராம். மாஸ்கோவில் மழை பெய்ததற்குச் சென்னையில் கம்யூனிஸ சித்தாந்தி ஒருவர்தான் குடையைப் பிடித்தார். ஆனால் சென்னையில் மாஸ்கோவிலிருந்து வந்த கால்பந்தாட்டக் கலைஞர்கள் ஆடியபோது, மழை கொட்டுக் கொட்டென்று கொட்டியது. பல்லாயிரக் கணக்கான கால் பந்தாட்ட ரசிகர்கள் குடை பிடித்துக் கொண்டு ஆட்டத்தை ரசித்தார்கள். சிலர் துண்டைத் தலையில் போட்டுக் கொண்டு பார்த்தார்கள்; மற்றும் சிலர் நாற்காலிகளைத் தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டு நோக்கினார்கள். சென்னை ரசிகர்களின் கலாரசனையைக் கண்டு மகிழ்ந்தோ என்னவோ அன்று ருஷ்யக் கால் பந்தாட்டக்காரர்களும், இந்தியக் கால் பந்தாட்டக் குழுவினரும் அடாத மழையிலும் விழுந்து புரண்டு எழுந்து ஆட்டத்தைக் கடைசி வரையில் நிறுத்தாமல் ஆடினர். . ரசிகர்கள், சென்னை கால்பந்தாட்டக் கழகத்தினர் ஆகியோரின் மனத்தைக் குளிர்வித்தனர்.

சென்னை நகரசபை ஸ்டேடியத்தில் நிகழ்ந்த மூன்றாவது கால்பந்தாட்ட டெஸ்டில் ருஷ்ய கால்பந்தாட்டக் குழுவினர் நல்ல திடகாத்திரமும், விளையாட்டுத் திறமையும் கொண்டு இந்திய கோஷ்டியினரைத் திணற அடித்தனர். முதல் இரண்டு டெஸ்ட்களிலும் இந்திய கோஷ்டியை அவர்கள் தோல்வியுறச் செய்திருந்தனர். சென்னையில் நடந்த ஆட்டத்தில் இந்திய கோஷ்டியினர் தங்கள் பக்கம் அதிக கோல்கள் விழாமல் பாதுகாத்தனர். இந்திய காப்டன் ஜார்லோக் சிங் உயிரைக் கொடுத்து ஆடினார். அப்படியிருந்தும் ருஷ்ய ஆட்டக்காரர்கள் மூன்று ‘கோல்’களைப் போட்டுவிட்டனர். முதல் கோலை இந்தியக் கோஷ்டியின் மீது போட்டுப் பெருமை பெற்றவர் ஆகமோவ். மற்றும் இரண்டு கோல்கள் புகாவால் போடப்பட்டன. இந்திய கோஷ்டியில் பானர்ஜி ஒரு கோல் போட்டது ரசிகர்களுக்குத் திருப்தியளித்தது. ருஷ்யக் கால்பந்தாட்டம் 1897ல் தொடங்கியதிலிருந்து அவர்கள் இவ்வாட்டத்தில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறார்கள்; 1956 மெல்போர்ன் ஒலிம்பிக்கில் ருஷ்யர்கள் கால் பந்தாட்டத்தில் வெற்றிக் கொடி நாட்டியவர்களல்லவா! — குண்டுமணி





குமரவேள் கும்பாபிஷேகம்

முருகு என்ற சொல்லுக்கு இனிமை என்று ஒரு பொருள் உண்டு. இனிமையே உருவான முருகப் பெருமான், தன் பெயரின் தொடக்கத்திலேயே 'தேன்' என்ற பகுதியைக் கொண்டுள்ள தேனும்பேட்டையில் எழுந்தருளியிருப்பது மிகவும் பொருத்தம்தானே? இப்பொருத்தத்தை மேலும் எடுப்பாக்கிக் காட்டுவதே போல் 'இனிமை' எனப் பொருள்படும் 'மதுரம்' என்ற பெயர் கொண்ட ஸ்ரீமதி கோபாலகிருஷ்ண அவர்கள் தேனும்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஸ்வாமி ஆலயத்தைப் புதுப்பித்து, விஸ்தரித்து, கும்பாபிஷேகம் செய்யும் பெரும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்கள். தேனாகத் தித்திக்கும் சென்னைத் தொகுதி யொன்றில் இனிப்பின் வடிவான இளவலுக்கு மதுரம் கோபாலகிருஷ்ண அவர்களின் முயற்சியில் நடைபெற்ற இக் கும்பாபிஷேகத்துக்கு அமிருத ஸ்வரூபமான ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரிய ஸ்வாமிகள் எழுந்தருளியது உச்சக் கிரகங்களெல்லாம் ஒரே வீட்டில் சேர்வதற்கொப்பாகும் அல்லவா? எனவே இனி சென்னை தேனும்பேட்டையின் ஜாதகத்திலேயே ஒரு தெய்வீகமான திருப்பம் நிகழும் என எதிர்பார்க்கலாம்.

பண்டையக் குறிப்பிலிருந்து தேனும்பேட்டை ராமலிங்க ஸ்வாமியின் ஆலயம் புராதனப் பிரசித்தி வாய்ந்ததென்று அநுமானிக்க இடம் இருக்கிறது. எனினும் காலக்கிரமத்தில் இவ்வாலயத்தின் புகழ் மங்கிப்போயிற்று. அதன் பின்பு மீண்டும் இத் திருக்கோயிலின் கீர்த்தி ஒருவாறு வளரலாயிற்று. ஆனால் இப்போது ராமலிங்க ஸ்வாமியின் ஆலயமாக இன்றி, அதன் சுற்றுக் கோயிலில் வதியும் முருகப் பெருமானாலேயே புதுப் புகழ் ஏற்பட்டது. மகனது பெருமையினால் தங்களுக்கே மகிழ்ச்சியும் மதிப்பும் தேடிக் கொள்வது பெற்றோரின் இயல்பல்லவா? இதற்கேற்ப ராமலிங்க சுவாமியும் பார்வதவர்த்தினி அம்பிகையும், தங்களது திருக்குமாரனுக்குப் பெருமைக்குரிய இடம் தந்து, இவ்வாலயத்தை முருகப் பதிகளுள் ஒன்றாக்கி அருள்புரிந்தனர். தேனும்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஸ்வாமி ஆலயம் என்றே கோயிலும் பெயர் பெற்றது. 'இது தேனும்பேட்டையல்ல, தேவநாயகனாகிய முருகனுக்குரிய தேவநாயகன் பேட்டையே' என்று ஸ்ரீ காஞ்சி ஆசாரியர்களும் கூறுமளவுக்கு முருகவேளின் முக்கிய ஸ்தலமாயிற்று.

இத் திருக்கோயிலிலுள்ள முருகன், சிவபிரான், அம்பிகை, விநாயகர், நடராஜர், நவக்கிரகம் ஆகிய எல்லா மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தனம் செய்து, விமானங்கள் புதுக்கி, இவற்றுக்குச் சிகரம் போல் ராஜ கோபுரமும் எடுத்துக் கும்பாபிஷேகம் செய்யும் நன் முயற்சியில் சென்ற சில ஆண்டுகளாக அன்பர்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்களுக்கு ஸ்ரீமதி மதுரம் கோபால கிருஷ்ண தலைமை தாங்கியது குறிப்பிட வேண்டிய விஷயம். பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளபோதே பெண்மைக்குரிய அடக்கமும் பணிவும் இம்மியும் குன்றாத இச் சீமாட்டி முருகவேள் ஆலயத்துக்காகப் படிப்படியாக ஏறி நிதியும் சேகரித்தது மறக்கவொண்ணாத அதிசயமாகும். முருகன் பளார் மனத்தில் புகுந்து தூண்டிவிட்டுத் தனது கும்பாபிஷேகத்துக்கு வித்திட்டுவிட்டான்.

திருப்பணிகள் தொடங்குவதற்கு முன்பாகவே இவ்வாலயத்தில் பிரம்மஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள், பல தொடர் பிரவசனங்கள் புரிந்து வந்தார். திருப்பணிக்காக பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், திருமுருக கிருபானந்தவாரியார், ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி ஆகியோர் உபந்நியாசங்கள் நிகழ்த்தினர், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் இரண்டு உதவிக் கச்சேரிகள் நிகழ்த்தினார். இவற்றின் மூலமும் மற்ற நன்கொடைகள் வழியாகவும் நிதியம் சேகரிக்கப்பட்டது. துண்டு விழுவதையெல்லாம் இட்டு நிரப்ப ஸ்ரீமதி மதுரம் கோபாலகிருஷ்ண கணிசமான அளவுக்குத் தயங்காது பொருள் வழங்கினார்கள். முயற்சியும் பலித்தது. இம்மாதம் பன்னிரண்டாம் தேதி ஞாயிற்றுக்கிழமை




காலில் தேனாம்பேட்டை ஆலய கும்பாபிஷேகம் ஒரு மகோன்னதமான உற்சவமாக நிறைவு பெற்றது.

எட்டாந்தேதியிலிருந்தே சாஸ்திரோக்தமான வேள்விகள் தொடங்கின. பன்னிரண்டாம் தேதி காலை அவை இனிதுமுடிவுற்றன. பூர்ணாஹூதி நடந்தேறியது. சரியாக ஏழரை மணிக்கு ராஜகோபுரத்துக்கும், மற்ற விமானங்களுக்கும் கும்பாபிஷேகமும் அதன்பின் சந்நிதிகளில் வழிபாடும் மகாபிஷேகமும் அமோகமான முறையில் நிறைவேறின.

ஆலயம் உள்ள எல்டாம்ஸ் சாலை அதிகாலையிலிருந்தே ஆயிரமாயிரம் அடியார்களின் நெரிசலில் நிரம்பி வழிந்தது. கோவிலினுள் பிரமுகர்கள் குழுமியிருந்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரிய சுவாமிகளும், புதுப் பெரியவர்களும் எழுந்தருளி விழாவின் புனிதத் தன்மையை மேலும் அதிகமாக்கி யருளினார்கள். சுவாமிகளை எப்படியும் கும்பாபிஷேகத்துக்கு வரவழைத்து விடவேண்டும் என்று திருப்பணிக் குழுவினர் கொண்டிருந்த பேரார்வமே அவரைத் திருப்பதியிலிருந்து சென்னைக்கு இழுத்து வந்தது என்று கூடச் சொல்லலாம்!

ஒரே சமயத்தில் ராஜகோபுரம் மற்ற விமானங்கள் ஆகியவற்றுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகம், தெய்வ மூர்த்தங்களுக்கு நடைபெற்ற வழிபாடு, பிரவசனகர்த்தர்களின் பக்திமயமான சொற்பொழிவுகள் யாவுமாகச் சேர்ந்து பக்த கோடிகளைத் நிறை வைத்தது என்றால் மிகையாகாது. ஆசாரியர்களும், புதுப் பெரியவர்களும் பொலிந்த திவ்யப் பாங்கு மக்களின் கண்களை உண்மையிலேயே மல்க வைத்து விட்டது. ஆலயத்தினர் அளித்த நீலச் சால்வையைப் போர்த்துக் கொண்டு அன்று ஜகத்குரு திருவீதியில் தரிசனம் தந்தது. ஜகந்நாதனே வானத்தையும் கடலையும் போர்த்திக்கொண்டு எழிலார்ந்த கோலம் காட்டுவது போன்றிருந்தது.

இத்தகைய இனிமையிலும் இனிமையான நினைவுகளில் மக்களின்மனம் பெற்ற கும்பாபிஷேகமே பால சுப்பிரமணிய ஸ்வாமி தேவஸ்தானத்தாருடைய திருத்தொண்டுக்குப் பாராட்டுதலாகும்.







புதிதாக எழும்பியுள்ள ராஜ கோபுரத்தையும், அதனை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தரிசிப்பதையும், ஸ்வாமிகளுடன் ஸ்ரீமதி மதுரம் கோபால கிருஷ்ணனையும், அடியார் திருக்கூட்டத்தையும் இந்தப் பக்கத்தில் காண்கிறோம்.



பாரத தர்மமும், கலையும் செழிப்பதற்கு அரும்பணி புரிந்துவரும் ஸ்ரீ முன்ஷி அவர்களின் எழுபத்தொன்பதாவது பிறந்த தினத்தையொட்டி வெளியாகும் இவ்விதழ் அட்டையில் அப்பெரியாரின் படத்தை வெளியிட்டு அவரை வாழ்த்தி வணங்குகிறோம்.

—ஆசிரியர்

முன்ஷியின் சிறந்த சேவை

கே. பாலசுப்பிரமணிய அய்யர் எம். எல். ஸி.

வருகிற டிசம்பர் 30ந் தேதி ஸ்ரீ முன்ஷி அவர்களுக்கு எழுபத்தெட்டாவது ஆண்டு நிறைவு பெறுகிறது. நம்முடைய பாரத தேசத்து மக்கள் அனைவருமே ஸ்ரீ முன்ஷியின் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடுவார்கள் என்பது நிச்சயம்.

ஸ்ரீ முன்ஷியின் வாழ்வு முயற்சிக்கு ஓர் இலக்கணமாகும். குஜராத் பிராந்தியத்தில் பிறந்த ஸ்ரீ முன்ஷி வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் வறுமையினால் மிகவும் நொந்து அல்லல் பட்ட போதிலும் அதைப் பொருட்படுத்தவில்லை. சிறந்த படிப்பாளியாகச் சிறு பிராயத்தைக் கழித்து, அதன் பிறகு பம்பாயில் வழக்கறிஞராகத் தம் வாழ்க்கையை ஆரம்பித்தார். வெகு சீக்கிரமே அவர் வழக்கறிஞர் தொழிலில் பெரும் புகழும் பெற்று அதிகமாகப் பொருள் சம்பாதிக்கவும் தொடங்கினார். ஆனால் பொருள் சம்பாதிப்பதை மட்டுமே அவர் தமது குறிக்கோளாகக் கொள்ளவில்லை. தேச விடுதலைக்கான பணிகளிலும் அவர் ஈடுபட்டவரானார். அப்பொழுது தேச விடுதலைப் போரிலும் தேச சேவையிலும் ஈடுபட்டிருந்த படேல் முதலானவர்களோடு கூட இவரும் சேர்ந்து ஒத்துழைக்க ஆரம்பித்தார். வெகு சீக்கிரத்திலேயே ஸ்ரீ முன்ஷி பெரும் தேசத் தொண்டர்களிடையே இடம் பெற்று விளங்கினார். விடுதலைக்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தி அவர்களின் முக்கிய சீடராகவும் மதிக்கப் பெற்றார். விடுதலைப் போராட்டத்தின்போது அவர் பலமுறை சிறைச்சாலையில் அடைபட்டு அல்லலுறும்படியும் நேர்ந்தது. அவரது தியாகசீலம் இந்தத் துன்பத்தை யெல்லாம் பொருட்படுத்துவதாயில்லை.

1938ம் வருஷம் காங்கிரஸ் கட்சியானது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் ஆட்சி புரிய ஆரம்பித்தபோது பம்பாயில் அவர் சட்ட மந்திரியாகத் திறம்படப் பணியாற்றினார். பாரத நாடு விடுதலையடைந்த பிறகு பாரத தேசத்தின் அரசியல் சாஸன அமைப்புக் குழுவிலும் சிறந்தபங்கெடுத்துக்கொண்டார். இப்பொழுது இருக்கும் 'பாரதத்தின் அரசியல் சாஸன அமைப்புக்குத் தந்தைகள்' என்று சொல்லிப் பாராட்டும் படியான சிலரில், முன்ஷி அவர்கள் முக்கிய அங்கம் வகிக்கிறார்.



மகம்மதியர்களுடைய படையெடுப்புக் காலங்களில் பன்முறை இடிக்கப்பட்டு வந்தது 'சோமநாத்' சிவாலயம். துவாதச (பன்னிரண்டு) லிங்கங்களில் ஒன்றான பிரசித்தி பெற்ற சோமநாத லிங்க பூஜைக்காக அமைந்த இக் கோயிலைப் புதுப்பிக்கப் படேல் அவர்களின் ஆதரவுடன் முன்ஷி அவர்கள் மிகவும் பிரயாசை எடுத்துக்கொண்டார். 1951ம் வருஷத்தில் அந்தத் திருப்பணி பூர்த்தி செய்யப்பட்டுக் கும்பாபிஷேகமும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தச் சேவைக்கு அடிப்படையாக நின்று உதவி புரிந்த முன்ஷி அவர்கள் அந்த வருஷத்திலேயே 'சம்ஸ்கிருத வித்வத் பரிஷத்' தொடங்கி சம்ஸ்கிருத இலக்கியத்துக்குப் புத்துயிர் ஊட்டினார். முன்ஷி அவர்களுக்கு சம்ஸ்கிருத இலக்கியத்திலும் மொழியிலும் ஈடுபாடும் பக்தியும் அதிகம். நம் தேசத்தின் புராதன பாஷையான சம்ஸ்கிருதத்தை நன்கு பிராபல்யப்படுத்திப் பரப்ப வேண்டும் என்பது அவருடைய முக்கியமான கருத்தாகும். பாரத தேசத்தில் சம்ஸ்கிருதம் தெரிந்த அறிஞர்களையும், வெளிநாட்டு அறிஞர்களையும் ஒன்று கூட்டி, இந்த சம்ஸ்கிருத வித்வத் பரிஷத்தை ராஜேந்திர பிரசாத் அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக நிறைவேற்றினார். இந்த பரிஷத் அதன் பிறகு பல வருஷங்களாகப் பல இடங்களில் நடந்து வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

பின்னர் மத்திய அரசாங்கத்தில் மந்திரிப் பொறுப்பை ஏற்றார் ஸ்ரீ முன்ஷி அவர்கள். உணவு மந்திரியாக இருந்து வன மஹோத்சவத்தைத் தொடங்கி வைத்தார். பின்னர் உத்தரப் பிரதேசத்தில் கவர்னராகப் பணியாற்றினார். அரசாங்கத்தின் உயர் பதவிகளை

ஹோட்டல் மானேஜர்: ஐயா, சமையற்காரரே! உமக்கு இங்கே இனி ஒரு வாரம் தான் வேலை. உம் சமையலுக்கும் நமக்கும் ஒத்து வராது.

சமையற்காரர்: என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? வாடிக்கைக்காரர்களெல்லோரும் என் சமையலை ஏகமாய்ப் புகழ்கிறார்களே!

ஹோட்டல்காரர்: அதனால்தான் ஐயா சொல்லுகிறேன். நீர் உமது கடையைக் கட்டும். நான் வேறு ஆளைப் பார்த்துக் கொள்ளுகிறேன். எனக்குக் கட்டுப்படி ஆகவேண்டாமா?

யெல்லாம் நிறம்பட நிர்வகித்து நம் நாட்டுக்குச் சிறந்த சேவைகள் செய்தார்.

இவையெல்லாவற்றையும் விட அவர் நம் பாரத தேசத்தின் தர்மத்துக்கும் பண்பாட்டுக்கும் செய்துள்ள சேவைதான் மிக உன்னதமானது. பாரத மக்கள் என்றென்றும் அவரை மனத்திலிருத்திப் போற்றக்கூடியது. நம் பாரதப் பண்பாடுதான் உலகத்திலேயே தலைசிறந்தது என்பதை நன்கு உணர்ந்து, நம் தர்மமும், பண்பாடும்தான் நம்முடைய நாட்டுக்கு அடிப்படைத் தேவை, இவை இல்லாவிட்டால் பாரத தேசமே பொலிவிழந்து போய் 'பாரத தேசம்' என்ற பெயருக்கு உரிய பெருமையை இழந்துவிடும் என்ற பூரண நம்பிக்கையுடன் 1938ம் வருஷத்தில் பாரதீய வித்யா பவன் என்ற தலை சிறந்த ஸ்தாபனத்தை மற்றப் பிரமுகர்களுடன் கூடி ஸ்ரீ முன்ஷி அவர்கள் பம்பாயில் ஆரம்பித்து வைத்தார். அந்த ஸ்தாபனமானது தனது 27 வருஷ காலத்தில் அளப்பரிய சேவைகளைச் செய்து விருத்தியடைந்து இன்று அகில பாரத ஸ்தாபனமாக விளங்குகிறது. டில்லியிலும், பரோடாவிலும், சென்னையிலும், கோயமுத்தூரிலும், ஹைதராபாத் பெங்களூர் ஆகிய இடங்களிலும் பாரதீய வித்யாபவனத்தின் கிளை ஸ்தாபனங்கள் அவரது முயற்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாரத தர்மமும் பண்பாடும் தழைக்கப் பாடுபடும் இந்த ஸ்தாபனத்துக்குப் பல லட்சங்கள் நிதி சேர்த்து, பம்பாயில் இதற்கு நேர்த்தியான, பிரும்மாண்டக் கட்டடமும் எழுப்பினார். அதன் மூலம் நம் கலைகளையும், சம்ஸ்கிருத பாஷையையும் தேச மொழிகளையும், பகவத் கீதை போன்ற பொக்கிஷங்களையும் இந்தியா முழுதும் பரப்புவதற்காகத் திட்டங்களை வகுத்தார். திட்டங்களைத் தீட்டுவதோடு நின்றுவிடாமல் அவை நன்கு அமுலுக்கு வரும்படியாகவும் ஊக்கத்துடன் இயக்கி வைத்தார். பாபு ராஜேந்திர பிரசாத், ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன், நம் மதிப்புக்குரிய காலஞ்சென்ற ஜவாஹர்லால்ஜி, டாக்டர் சி. பி., ராஜாஜி முதலிய பிரமுகர்களெல்லாம் இந்தப் பவனத்துக்குப் பெரும் ஆதரவு அளித்து வந்ததோடு, அப்போதைக்கப்போது சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கின்றனர். பவனம் கல்வித் துறையில் சேவை புரியப் பல கல்லூரிகளையும் தொடக்கியிருக்கிறது. இவற்றில் முக்கியமாக இன்ஜினியரிங் தொழில் துறையைப் போதிப்பதற்கு அந்தேரியில் தொடங்கியுள்ள பொறியியல் கல்லூரியை நேருஜி ஆரம்பித்து வைத்தார்கள்.

டாக்டர் முன்ஷி அவர்கள் குஜராத்தி மொழியிலும், ஆங்கில பாஷையிலும் பெரும் எழுத்தாளராக விளங்குகிறார். குஜராத்தி மொழியில் பல சிறுகதைகள், பெருங் கதைகள் எழுதி, அம்மொழியை வளப்படுத்தியிருக்கிறார். அக்கதைகள் குஜராத்தியில் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் 'நாவல்கள்' என்று சொல்லும்படியான நெடுங் கதைகளை நிறைய எழுதி, அம்மொழிக்கே புத்துயிர் ஊட்டியுள்ளார். 'பிருத்வி வல்லப்' என்ற அவரது பிரசித்தமான குஜராத்தி நாவல் இப்பொழுது தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வந்துள்ளது. இந்நூலை இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சென்னையில் ராஜாஜி அவர்கள் வெளியிட்டது நினைவிருக்கும். பவனத்தின் பதிப்பும் அகில இந்தியாவிலும் மதிப்புப் பெற்றதுமான 'பவன்ஸ் ஜர்னலி'ல் அவர் எழுதும் 'குலபதியின் கடிதங்கள்' அவரது ஆங்கில எழுத்து வன்மைக்குச் சான்று.

பாரதீய வித்யா பவனம் மற்றொரு துறையில் விசேஷமான சேவையை நம் தேசத்துக்குச் செய்து வருகிறது. நம் இந்திய தேச சரித்திரத்தைப் பற்றியும், தர்மத்தைப் பற்றியும், பண்பாட்டைப் பற்றியும் பல அரிய புத்தகங்களைப் பாரதீய வித்யா பவனம் அச்சிட்டு வெளியிட்டு வருகிறது. நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன. பாரதீய வித்யா பவனம் 'பவன்ஸ் ஜேர்னல்' என்று ஆங்கிலத்திலும், குஜராத்தி மொழியிலும், ஹிந்தி மொழியிலும் மாதத்துக்கு இரண்டு மூன்றுமாகப் பத்திரிகைகளை வெளியிட்டு வருகிறது. இந்தப் பத்திரிகைக்கு நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம் என்று சந்தாதாரர்கள் இருக்கிறார்கள் என்றால் இதற்குள்ள செல்வாக்கு எத்தகையது என்பது தெரியவரும். இந்தப் பத்திரிகையில் உயர்ந்த கட்டுரைகள், மகான்களின் அருள்வாக்கு, மகாத்மா காந்தி, அரவிந்த கோஷ் முதலியவர்களின் உபதேசங்கள் இடம்பெற்றுள்ளன.

இம்மாதிரியாகப் பல சிறந்த தொண்டுகளை யாதொரு வேற்றுமையும் இல்லாமல் எல்லா மக்களுடைய நன்மைக்காகவும் புரிந்து, நம் பண்பாட்டைப் பரப்புவதில் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் பணி புரிந்து வருகிற பெரியார் நூறாண்டுக்கு மேலிருந்து சேவை செய்ய வேண்டும் என்று மக்கள் எல்லோரும் மனமாரப் பிரார்த்தனை புரிய வேண்டியது கடமையாகும். இந்தப் பிறந்த நாள் வைபவத்தன்று ஸ்ரீ முன்ஷி அவர்களுக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் நல்க இறைவனை இறைஞ்சுகின்றோம். முன்ஷி அவர்களின் எல்லாத் தொண்டுகளுக்கும் கூட இருந்து துணைபுரிந்து செயலாற்றி வருபவரும் தாமும் கல்வி யறிவு நிரம்பப் பெற்றவருமான ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி அவர்களுக்கும், நம் மகிழ்ச்சியைத் தெரிவிப்பது சாலப் பொருத்தமாகும்.

அத்தியாயம் 12

வாக்குவாதம்



நடந்ததை யெல்லாம், சுருக்கமாகத்தா னென்றாலும் அத்தானிடம் நாலு வார்த்தைகளில் கூறி முடிப்பதற்குள் பேதை செல்லம் பட்டபாடு கொஞ்சநஞ்ச மல்ல. இலேசாகத் தலையைத் திருப்பிக் கடைக் கண்களால் மிருணாளினி மாடி ஏறிச் சென்று விட்டாளா என்று பார்த்தாள் அவள். மிருணாளினியின் உருவம் கண்களுக்கு மறைந்திருந்த போதிலும் சேலைக் கரை மட்டிலும் கொஞ்சம் தென்பட்டு அவள் படிகளின் திருப்பத்தில் ஒளிந்து நிற்பதைக் காட்டிக் கொடுத்து விட்டது. அல்லது வேண்டுமென்றே 'நான் இங்கு தான் இருக்கிறேன்' என்று செல்லத்துக்கு அறிவுறுத்துவதற்காகவே அவள் அங்கு அப்படி மறைந்தும் மறையாமலும் நின்றிருக்கலாம். 'அடிப்பாவி! நீ சொல்லிக் கொடுத்ததையெல்லாம் சரியாக ஒப்பிக்கிறேனா இல்லையா என்று வேவு பார்த்துக் கொண்டு நிற்கிறாயா இன்னும்?' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் செல்லம். 'இதை உன் அத்தானிடம் நீயே சொல்லி விடு. நான் கூறப்போனால் நன்றாயிராது!' என்ற அவள் வார்த்தைகள் செல்லத்துக்கு நினைவு வந்தன. அதற்கு என்ன அர்த்தம்? 'மரியாதையாக நீயே உன் அத்தானிடம் உண்மையைச் சொல்லி விடு; அதற்கு ஒரு சந்தர்ப்பத்தை உனக்குத் தருகிறேன். இல்லாது போனால் நானே சொல்லும்படியாகி விடும்' என்ற பயமுறுத்தலைத்தானே அத்தனை அழகாக அவள் தேன்போன்ற குரலில் வெளியிட்டாள்?

'வேண்டாம்!' அந்த வேஷதாரி ஒன்றுக்குப் பத்தாக அத்தானிடம் எதையாவது கூறி வைப்பதைவிட நானே சொல்லிவிடுவது நல்லது.' தைரியத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு நடந்ததைக் கூறிய செல்லத்தின் மேனி அடுத்தகணமே பயத்தில் நடுங்கியது.

தான் கேட்டது உண்மைதானா என்று சந்தேகிப்பவன் போல், நம்பவே முடியாமல் தவிப்பவன் போல் குறுக்கேயும் நெடுக்கேயும் கைகளைப் பிசைந்து கொண்டு நடந்தான் தங்கப்பன். வினாடிக்கு வினாடி அந்த நீண்ட கூடத்தில் அவனுடைய நடையின் வேகம் அதிகமாயிற்று; உள்ளத்தில் கோபத்தின் அளவும் மிகுந்தது.

தான் எதிர்பார்த்தது போல் தன் அத்தான் எடுத்த எடுப்பிலேயே தன் மீது எரிந்து விழுவது போல் இரையாமல் சிந்தனையில் ஆழ்ந்து நடப்பதைக் கண்ட செல்லத்துக்குக் கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.

"அத்தான்! சீனப் படையெடுப்பு, ஊடுருவல், சதித் திட்டம் என்றெல்லாம் ஏதேதோ என் காதிலே விழுந்தன. பயங்கரமான விபரீதம் நிகழப் போகிறது என்று நிர்மானித்து இப்படிச் செய்து விட்டேன். மிருணாளினி ஒரு தீவிர கம்யூனிஸ்டுதானே? நம் நாட்டுக்கு அவளால் தீங்குதானே நேரும்? அதனால் நான் செய்ததில் தப்பு ஏதும் இல்லையல்லவா?"

"தப்பா? தவறு செய்து விட்டேனா என்று கேட்கிறாய்? கேளு, நிதானமாய்க் கேளு!" என்று விரக்தியுடன் சிரித்த தங்கப்பன் திடுமென்று அவள்முன்நின்று அவள் தோள்களைப் பற்றி உலுக்கி எடுத்தான். "செல்லம்! கம்யூனிஸ்டுகளைப் பற்றியெல்லாம் நீ போலீஸில் புகார் செய்வதாயிருந்தால் என்னைப் பற்றித்தான் முதலில் நீ போலீஸாரிடம் குற்றப்பத்திரிகை படித்திருக்க வேண்டும். நானும் ஒரு தீவிர கம்யூனிஸ்டுதான்! ஏன், மிருணாளினியைவிட ஒரு படி மேலாக அதிதீவிர கம்யூனிஸ்டு என்று வேணுமானாலும் வைத்துக் கொள்ளலாம்! அப்படிப்பட்ட என்னை விட்டு விட்டு நம் வீட்டுக்கு, நம் விருந்தினளாக, நம்மை நம்பி வந்தவளைக் காட்டிக் கொடுக்கலாமா? நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா?" தங்கப்பனின் குரல் இதைச் சொல்லும்போது தழுதழுத்தது. கண்களில் நீர் முட்டி வழிந்தது.

அத்தானுடைய கோபத்தைச் சமாளிக்கத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள் செல்லம். ஆனால் கண்ணீரைக் காணவும் பொறுக்க முடியாமல் நிலைகுலைந்து போனாள். அவன் காலடியில் விழுந்து பாதங்களைப் பற்றிக் கொண்டு புலம்பினாள்: "அத்தான்! என்னை மன்னிச்சுடுங்க; உங்களுக்குத் தான்தெரியுமே, நான் வெறும் அசடு என்று."

"செல்லம்! எழுந்திரு! இப்போது எனக்கு முழு உண்மையும் தெரிந்தாக வேண்டும்! அவனைப் பற்றிப் புகார் செய்தது அவன் ஒரு கம்யூனிஸ்டு என்பதற்காகமட்டும்தானா?"

"அத்தான்! அவனை நம்பாதீங்க! அவன் என்னிடம்கூட இனிக்க இனிக்கப் பேசுகிறான். ஆனால் அத்தானையும் கூட நாடகம்!"

'கேட்கட்டும் நன்றாக இதையும் அவன் கேட்கட்டும்' என்று செல்லத்தின் மனம் எண்ணியது. "அவனால் நம் குடும்பத்துக்கு மட்டுமில்லே, நம் தேசத்துக்கே பேராபத்துத் தான் நிகழப் போகுது!"

"சீ! வாயை மூடு!" என்று அதட்டினான் தங்கப்பன். கூடவே, "நாங்க பேசிக்கிட்டிருந்ததை நன்றாகப் புரிஞ்சுக்கிட்டுத்தான் அவன் ஒரு தேசத் துரோகி என்ற முடிவுக்கு வந்தாயா? இல்லே, அவன் என்னுடன் நெருங்கிப் பழகுகிறான் என்பதினால் பொறாமைப்பட்டு இதை ஒரு சாக்காக ஏற்படுத்திக் கொண்டு போலீஸாரிடம் போனாயா? வாயைத் திறந்து பதில் சொல்லு!" என்றும் மிரட்டினான்.

செல்லம் பதில் பேசாது தயங்கினாள்.

"சொல்லு, செல்லம்! நிஜத்தைச் சொல்லு" என்று கண்களை உருட்டி விழித்துச் சீறினான் தங்கப்பன்.

"எனக்கு என்ன சொல்லுகிறது என்றே தெரியவில்லையே, அத்தான்!" என்று புலம்பினாள் அவள்.

"பொய், பொய்!" என்று பழி சுமத்தினான் தங்கப்பன். "கம்யூனிஸம் என்பதற்கு அர்த்தம் தெரியுமா உனக்கு? புகார் கொடுத்தாளாம், போலீஸாரிடம்! தேசத்துக்கு மகத்தான சேவை புரிந்து விட்டதாக நினைப்போ! செல்லம்! உன் மனத்தில் உன் அத்தானைப் பற்றிச் சந்தேகம் விழுந்துவிட்டது. உனக்கு என் மீது உண்மையான காதல் இருந்திருக்குமேயானால் என் நடத்தையில் நீ தவறு கண்டிருக்க மாட்டாய். நீ என்னிடம் வைத்திருக்கிற அன்பு நித்தியமானது, சத்தியமானது என்றால் மற்றப் பெண்களிடம் நான் பழகுகிற விதத்தைப் பற்றி உனக்கு அணுவளவுகூடச் சந்தேகம் ஏற்பட்டிருக்காது. எப்போது உன் உள்ளத்தில் அப்படி ஒரு சந்தேகம் விழுந்ததோ, அதிலிருந்தே நீ என்னை உண்மையாகவோ முழுமையாகவோ மனப்பூர்வமாகவோ காதலிக்கவில்லை என்றாகிறது. இது நிச்சயம்!"

"ஐயோ அத்தான்! என்னைக் கொல்லாதீங்க அத்தான்" என்று அலறினாள் செல்லம். வெறுப்புடன் முகம் திரும்பி நின்ற அவன் தோள்களைப் பற்றிக்கொண்டு அந்தப் பரந்த முதுகிலே ஈரம் படிந்த தன் கன்னங்களை ஒற்றி நின்றபடி உடல் குலுங்க அழுதாள். "எனக்குக் கடுமையான தண்டனை கொடுங்க; சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உங்கள்மீது எனக்குக் காதல் இல்லை என்று சொல்லிக் கொடுமைப்படுத்தாதீர்கள்!"

"செல்லம்! உன் பேச்சை நான் நம்பவில்லை. நீ இங்கிருந்து போய்விடு!"

"எங்கே போகச் சொல்லுகிறீர்கள் அத்தான்?" என்று கதறினாள் அவள். தன்னை ஒதுக்கித் தள்ளும் கடலிலிருந்து புறப்படும் அலை மீண்டும் அந்தக் கடலிலேயே தஞ்சமடைவது போன்ற நிலை அவளுடையது.

"சென்னைக்கு நாளைக்கு ரயிலேறிவிடு. உன் அப்பா அம்மாவுடனேயே இன்னும் சில மாதங்கள் இருந்து பார். அப்புறமும் உன் மனம் என்னை விரும்பி ஏற்றால் சொல்லு!"

அத்தானை ஸ்பரிசித்து நிற்கிற பாக்கியம் மீண்டும் தன் வாழ்நாளில் தனக்குக் கிட்டவே கிட்டாதோ என்று அஞ்சுபவள் போல் மனமின்றி அங்குலம் அங்குலமாக அவள் தன் கரங்களை அவன் தோள்களிலிருந்து பிரித்து எடுத்தாள்.

"மெய்யாகத்தான் சொல்கிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"சந்தேகமே வேண்டாம், செல்லம்! காதலைப் பரீட்சித்துப் பார்க்கப் பிரிவு ஒன்றுதான் அளவுகோல்."

"வருஷக் கணக்கில் பிரிந்து இருந்து பார்த்துவிட்டோமே அத்தான்? போதாதா? வேறு இடங்களில் அப்பா தமக்கு மாப்பிள்ளை தேடினார் என்கிறது உங்களுக்குத் தெரியாதா? நான்தானே பிடிவாதமாக அவர் இஷ்டத்துக்குக் கட்டுப்படாமல் உங்களுக்காகவே காத்துக்கிடக்கிறேன்?"

"இப்போது ஒரு புதிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது செல்லம். உன் மனம் விஷமாகியிருக்கிறது. பொறாமைப் பேய் அதை ஆட்கொண்டிருக்கிறது!"

திடீரென்று செல்லத்துக்குச் சொல்லி முடியாத கோபம் வந்து விட்டது. "நான் போகிறேன், அத்தான்! உங்கள் விருப்பப்படியே நான் போய் விடுகிறேன். ஆனால் நீங்களும் இரண்டொரு விஷயங்களை மறக்காமலிருக்கணுமென்று அவற்றைச் சொல்லிவிட்டுப் போகிறேன்!

"பொறாமைப் பேய் பிடித்து அலைபவளாகிவிட்டேன் நானென்றால் அதற்குக் காரணம் யார்? நீங்கதான் அத்தான்! நீங்க நடந்துகொள்கிற விதம்தான். என் மனம் விஷமாகி விருக்கிறதென்றால் பால்போன்ற வெண்மையான மனசிலே அந்த நஞ்சை ஊட்டியதும் உங்களிடம் நான் அடைந்த ஏமாற்றம்தான்.

"இனிமேலும் நான் உங்களை என் மனத்தில் வைத்துப் பூஜிக்கத்தான் செய்வேன். ஆனால் உங்களுக்காக நான் இனிமேல் ஏங்கப் போவதில்லை அத்தான்! கண்டிப்பாக உங்களை அடைய வேண்டுமே என்று நான் ஏங்கவே மாட்டேன். உங்களைக் கல்யாணம் செய்து கொள்ள நான் ஆசைப்பட்டேன் என்பது வாஸ்தவம்தான்; ஆனால் அந்த எண்ணம் ஈடேறவில்லை என்பதற்காக நான் தற்கொலை செய்துகொண்டு விடப் போவதில்லை. என்னை நானே காப்பாற்றிக்கொள்ள எனக்குப் புதிதாகத் தைரியம் பிறந்திருக்கிறது; அந்தத் தைரியத்தை உங்கள் மிருணாளினி எனக்கு ஊட்டியிருக்கிறாள்.

"அப்புறம், கடைசியாக இன்னொன்றையும் நான் சொல்லி விடுகிறேன்! உங்களை நீங்களே மிகவும் உயர்வாக எண்ணிக் கொண்டு என்னைப் பரிசோதிப்பது போல்



'அப்பா அம்மாவோடு போய் இருந்துவிட்டு வா' என்கிறீங்க; என் காதலை இழிவுபடுத்துறீங்க. ஆனால் அப்படி என்னை அனுப்பி வைப்பதற்கான உண்மைக் காரணம் உங்கள் மனம் உஷாவை நினைத்துக் கொண்டிருப்பது தான் என்பது எனக்குப் புரிந்து விட்டது. என்னைக் கல்யாணம் செய்து கொண்டுதானாக வேண்டும் என்று உங்களை வற்புறுத்திக் கேட்க எனக்குஉரிமை இல்லைதான், அத்தான்! ஆனால் நாள் கணக்கில், மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் என்னைத் தட்டிக் கழித்து ஏமாற்றிக்கொண்டேயிருக்க உங்களுக்கும் உரிமை கிடையாது!, இதையெல்லாம் மறக்காமல் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்க. நான் போய் வரேன்!''

தங்கப்பனைத் திகைத்து நிற்க வைத்து விட்டுச் செல்லம் மளமளவென்று அங்கிருந்து அப்பால் சென்றாள். உக்கிரான அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள். தரையில் விழுந்து விம்மி விம்மி அழுது கொண்டேயிருந்தாள். அவர்களிடையே நடந்த சம்பாஷணையை யெல்லாம் வார்த்தை விடாமல் கேட்டுக்கொண்டு மாடிப் படிக் கட்டின் மையத்தில் மறைந்து நின்றுகொண்டிருந்த மிருணாளினியின் முகத்தில் புன்னகை அரும்பி அழகு கூட்டியது. நிம்மதிப் பெருமூச்சுடன் அவள் மீதமிருந்த படிகளிலும் ஏறி உயரே சென்றாள். தங்கப்பனின் அறையை அடைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு அமைதியாக உறங்கினாள்.

அத்தியாயம் 13

தப்பிப் பறந்தவள்

''ஆக்கி வைத்த சோறெல்லாம் அப்படியே கிடந்து அவலாப் போவுது. நீ இப்படிப் படுத்திருக்கியே? செல்லம் எங்கே? உனக்குச் சாப்பாடு கூடப் போடாமல் என்ன செய்துக்கிட்டிருக்கிறாள் அவள்?'' என்றாள் தாமரை.

''எனக்குச் சாப்பாடு வேண்டாம்மா; பசியில்லை. உடம்பும் சரியில்லை. என்னைத் தொந்தரவு பண்ணாதே, போ!'' என்று மறு பேச்சுக்கே வழியில்லாமல் விஷயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு வேறுபுறம் திரும்பிப் படுத்தான் தங்கப்பன்.

''நீ சாப்பிடாட்டா வேணும்; அந்தப் பொண்ணு எங்கே? அவளைப் பற்றித்தான் எனக்குக் கவலை.''

''தலையை வலிக்குதுன்னு உக்கிரான அறைக்குப் போய்ப் படுத்துக்கிட்டா'' என்றான் தங்கப்பன், 'வேண்டுமென்றே அசுவாரசியமான தொனியில்.

செல்லம் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே படுத்திருப்பதைக் கண்டாள், தாமரை. இலேசான விசும்பல் ஒலியும் கேட்டது. இருவருக்குமிடையில் ஏதோ மனஸ்தாபம் என்பதைப் புரிந்துகொள்ள அவளுக்கு அதிக நேரமாகவில்லை. இப்போது கதவைத் தட்டிச் செல்லத்தை எழுந்து வரச் செய்து என்ன விஷயமென்று கேட்டு அவளுக்கு மேலும் தொல்லை கொடுக்கத் தாமரைக்குப் பிடிக்கவில்லை. அப்படியே கேட்டாலும் செல்லம் இப்போது இருக்கும் மனநிலையில் எதையும் விவரமாகச் சொல்லப் போவதில்லை. அவளைத் தேற்றுவதற்குப் பதிலாகத் துன்பத்தைக் கிளறி விட்டதாகத் தான் முடியும். 'நன்றாக அழு செல்லம்! அழுது அழுதுதான் ஆறுதல் பெற வேண்டும் நீ!' என்று மெல்லக் கூறிய தாமரைக்குத் தன் மகன் வழக்கம்போல் மாடியில் அவனுடைய அறையில் படுக்காமல் கீழே ஊஞ்சலில் படுத்திருப்பது வியப்பை அளித்தது. அவள் சத்தப் படுத்தாமல் மாடி ஏறிப் போய்ப் பார்த்தாள். தங்கப்பனின் அறை — மாடியிலிருந்த ஒரே அறை — உள்பக்கம் தாளிடப்பட்டிருப்பது தெரிந்தது. உள்ளே மிருணாளினியாகத் தானிருக்க வேண்டும்!

'இதெல்லாம் என்ன கூத்து! ஏதோ இங்கே வந்து போய்க் கொண்டிருக்கிறாள் என்று நினைத்தோம். இங்கேயே குடியேறியும் விட்டாளா?'—விரசமாகப் பட்டது, பழமையான பழக்க வழக்கங்களில் ஊறியிருந்த தாமரைக்கு. ''கடவுளே! என் குடும்பத்தில் யாருக்கும் புதுப் புதுக் கஷ்டங்களைக் கொடுக்காதே! செல்லமும் தங்கப்பனும் சந்தோஷமாக வாழ வகை செய்!'' என்று பிரார்த்தித்துக்கொண்டே ஒரு மூலையில் முடங்கினாள் அவள். அன்றிரவு முழுதும் தாமரை தூங்கவில்லை.

செல்லத்துக்கும் அன்றிரவு உறக்கம் இல்லைதான். தன் அத்தானிடம் இத்தனை தூரம் பேசத் தனக்கு எப்படி எங்கிருந்து துணிச்சல் வந்தது என்று ஒரு பக்கம் வியந்து போனாள். மறுபுறம் 'ஐயோ இப்படி, அத்தானின் உள்ளம் நோகுமாறு பேசிவிட்டோமே' என்று வருந்திக் குமைந்தாள். மிருணாளினி சொன்னதற்கு நேர்எதிரான விளைவுகள் உண்டானதை அவள் எண்ணிப் பார்த்தாள். 'பொறாமை கொண்டு போலீஸில் புகார் செய்துவிடும் அளவுக்கு நீ உன் அத்தானிடம் அன்பு செலுத்துகிறாய் என்று அவருக்குத் தெரியவேண்டும்' என்றாளல்லவா? அவள் விரும்பியபடி உண்மையை வெளியிட்டதன் பலன் அத்தான் தன் காதலையே சந்தேகித்து அதற்கு மாக கற்பிக்கும் நிலை உண்டாகிவிட்டது! 'மிருணாளினி அக்கா! சீ! அக்கா என்ன வேண்டிக் கிடக்கிறது?.... இப்போது உனக்கு சந்தோஷம்தானே? மிருணாளினி! அத்தானுக்குக் குடும்பம், பந்தம், பாசம், குழந்தைகள், மனைவி என்றெல்லாம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதானே உன் அந்தரங்க நோக்கம்? அப்படிப் பந்தபாசங்கள் ஏற்பட்டுவிட்டால் பிறகு நீ இழுத்த இழுப்புக்கு அவர் வளைந்து கொடுக்க மாட்டார். விதியோ சதியோ, நல்லதோ கெட்டதோ உன்



''மிகவும் களைப்பாக இருக்கிறீர்களே? ஆபீசில் வேலை அதிகமோ? காபி போட்டுத் தரட்டுமா?''

''வீண் உபசாரம் வேண்டாம். இன்று ஆபீசில் சம்பளம் தரல்லே.''

னுடைய அந்தத் திட்டங்களில் ஈடுபட முடியாமல் அவரைக் குடும்பப் பாசம் தடுத்து நிறுத்தலாம். ஆனால் இனிமேல் உனக்கு அந்தக் கவலைகளெல்லாம் இல்லை. அத்தானைத் தாராளமாக உன் காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஏன், என் பொருட்டு உனக்கு அவரிடம் உள்ள காதலை ஒரு கருமியைப் போல் உன் உள்ளத்துக்குள்ளேயே வைத்துப் பூட்டி விடுவதாகச் சத்தியம் செய்தாயே, அதைக் கூடக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு அவரையே அடையவும் நீ முயலலாம். நான் இப்போது அவரை விட்டு விலகிவிட்டதால் உன் வேலை மிகச் சுலபமாக முடியும்!' இப்படிப் பலவாறாகவும் எண்ணி நிமிஷத்துக்கு நிமிஷம் தன் மன வேதனையை அதிகரித்துக் கொண்டே போனாள் செல்லம். அத்தானிடம் ஏதோ வீம்பாகப் பேசி விட்டு வந்துவிட்டாளே ஒழிய உண்மையில் அவளால் ஒருவிநாடிப் போதுகூட அவரை நினைத்து ஏங்காதிருக்க முடியுமா என்ன?

தங்கப்பனை, 'செல்லத்தை ரொம்பவும் கடிந்து கொண்டுவிட்டோமோ?' என்ற துயரம் வாட்டி வருத்தியது. அதோடு 'நானும் ஓர் அதிதீவிரக் கம்யூனிஸ்டுதான்' என்று செல்லத்திடம் தான் கூறியதை நினைத்துப் பார்த்தபோது அவனுக்கு மலைப்பாக இருந்தது. எத்தனையோ நாட்களாக மிருணாளினி இதே வார்த்தையைத்தான் அவன் வாயிலிருந்து வரவழைக்க முயன்றிருக்கிறாள்; முடியவில்லை. ஆனால் இன்று உணர்ச்சி மிகுந்த அந்த ஒரு விநாடிப் பொழுதில் அவன் அந்த உண்மையைச் செல்லத்திடம் மட்டுமின்றித் தனக்குத் தானேயும் ஒப்புக்கொண்டுவிட்டான்! தன் மனத்தை மிருணாளினி மாற்றிவிடவில்லை, அவளால் அது முடியாத காரியம் என்று மனம் மாறி வரும் போதே தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டும் வந்ததற்கு இன்றோடு மங்களம் பாடி விடலாம். பெரியதொரு வெற்றிதான் இது, மிருணாளினிக்கு! தங்கப்பனின் மேனி சிலிர்த்தது. தான் ஓர் அதி தீவிர கம்யூனிஸ்டு என்ற புத்தம் புதிதான ஓர் உணர்வு காரணமாக.

இவற்றுக்கு மேலாக இன்று செல்லம் தன்னைத் துணிந்து எதிர்த்ததும் உஷாவைக் குறித்தும் விண்டு கூறிச் சென்றதும் அவனிடம் விநோதமான இன்பமும் துன்பமும் கலந்த ஒரு வெலவெலப்பை உண்டுபண்ணின. உள்ளுக்குள்ளேயே புரையோடிப் போய்ச் சகிக்க முடியாத வலியைக்கொடுத்த கட்டியை ரண சிகிச்சை செய்து அப்புறப் படுத்திவிட்ட நிம்மதி; ஆனால் ரண சிகிச்சையினால் ஏற்பட்ட புண் இன்னும் ஆறுததால் ஒரு வேதனை.

தாமரையும் செல்லமும் தங்கப்பனும் இப்படித் தூக்கமின்றிக் கஷ்டப்பட, அந்த வீட்டிலிருந்த நான்காவது நபரான மிருணாளினி மட்டும் அமைதியாக உறங்கினாள்.

* * *

விழித்தெழுந்தபோது தங்கப்பன்விடிந்து வெகு நேரமாகிவிட்டிருப்பதை உணர்ந்தான். அதிகாலை நேரத்தில்தான் அவன் தன்னையும் மீறிய அசதியுடன் கண்ணுறங்கியிருக்க வேண்டும். அப்படியானால் மிருணாளினி? நாலே எட்டில் மாடிப் படிகளில் ஏறிச்சென்று பார்த்தான் தங்கப்பன். அவள் அறை திறந்து கிடந்தது. உள்ளே மிருணாளினியைக் காணோம். இதை அவன் படியேறி வருகையிலேயே எதிர்பார்க்கத்தான் செய்தான். 'ஆனாலும் இரவெல்லாம் விழித்திருந்துவிட்டு அவள் கிளம்பிச் செல்லுகிற அதிகாலை நேரத்தில் நான் கும்பகர்ணன் போல் தூங்கி இருக்க வேண்டாம். 'போய் வாருங்கள், பத்திரமாகச் சென்று வாருங்கள்' என்று சொல்லக்கூட ஒரு வாய்ப்பில்லாமல் போய் விட்டதே!' மேஜை மீது அவனுக்கென்று அவள் விட்டுச் சென்றிருந்த புத்தகங்கள் கிடந்தன. அப்போது அவற்றைக் கையிலெடுத்துப் படிக்க அவனுக்கு மனமோ, அவகாசமோ இல்லை. குளித்து மாற்றுடை அணிந்து தொழிலகத்துக்குக் கிளம்பும் சமயம் அது. இருந்தாலும் அந்த நூல்களை ஒரு முறை உடனே தொட்டுப் பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அவள் தன் நினைவைப் பதித்துச் சென்றிருந்த அந்த நூல்களின் பக்கங்களைப் புரட்டும்போது எத்தனையோ சுவையான விவாதங்களை இந்த அறையில் அவனுடன் நடத்தியதும்; காலம், நேரம், உணவு, உறக்கம் போன்ற நினைவுகளே இன்றிப் பேசிக்கொண்டே இருந்ததும் ஞாபகத்துக்கு வந்தன. 'மீண்டும் அவளை எங்கு எப்போது காணப் போகிறேன்?' தங்கப்பன் விசனத்துடன் பெருமூச்செறிந்தான். புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டுகையில் அந்த வேகத்தில் அவற்றினிடையிலிருந்து காற்றினால் உந்தித் தள்ளப்பட்டு வெளியே வந்து தரையில் வந்து விழுந்தது ஒரு தாள். அதில் மிருணாளினியின் கையெழுத்தில் ஏதோ எழுதப்பட்டிருக்கவே பரபரப்புடன் அதைப் பொறுக்கி எடுத்துப் பார்த்தான் தங்கப்பன்.

(தொடரும்)

அத்தியாயம் ஐம்பத்திரண்டு

ஏது இந்தப் படம்?

வேதாவுக்கு இப்போது பயமோ சஞ்சலமோ எதுவுமில்லை. அமைதி சூழ்ந்த அந்தச் சாலையில், எந்த ஒரு மனிதக் கண்களாலும் தீண்டப் பெறாமல், சபேசனின் நிழலோடு தன் நிழலைச் சேர்த்து நடப்பதிலே அவள் இதயம் எல்லையற்ற பேரானந்தத்தைக் கண்டது.

ஆனால் அதை அதிக நேரம் அநுபவிக்க விட்டு விட இயற்கைக்குச் சம்மதம் இல்லை போலும். அவர்கள் அந்தச் சாலையின் முனையை நெருங்கிய போது மீண்டும் தூறல்போட்டு மெல்ல மெல்ல மழை வலுக்க ஆரம்பித்தது. ரயில் நிலையத்துக்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று பர்லாங் தூரமேதான் இருக்கும். ஆயினும் அங்கு போய்ச் சேர்வதற்குள் அவ்விருவரும் .மறுபடியும் தெப்பமாக நனைந்து விடுவார்கள். அது பங்களாக்கள் நிறைந்த வட்டாரமாயிருந்ததால் எங்கும் ஒதுங்கி நிற்கக்கூட இடம் இல்லை. நடுதெருவில் ஓர் ஆணும் பெண்ணும் மரத்தடிகளில் ஒண்டி நிற்பதும் அநுசிதமான காரியம். எனவே, பரிதவித்த சபேசன், அங்கு வடக்கு நோக்கிச் சென்ற ஒரு நெடுஞ்சாலையில் திரும்பி ஓட்டமும் நடையுமாக விரைந்தான். ஆனால் வேதாவோ அவனுடைய வேகத்துக்கு ஒத்துப் போகிறவளாகத்]தோன்றவில்லை. இப்போதுதான் இதுவரையில் இல்லாத ஒய்யார நடை போட்டு நடக்கலானாள்.



பின்னால் திரும்பிப் பார்த்த சபேசன் பரபரப்புடன் ஓடி வந்து அவளுடைய கையைப் பிடித்துத் தரதர வென இழுத்துக் கொண்டு மீண்டும் முன்னோக்கி விரைந்தான். அவள் உடுத்திக் கொண்டிருக்கும் புதுப் புடவையும் நனைந்து விட்டால் பிறகு குளிரில் நடுங்குவாளே என்ற கவலை அவனுக்கு! மழை கொட்டுக் கொட்டெனக் கொட்டத் தொடங்



யெது. இனியும் மழையில் நனைந்து செல்ல முடியா தென்று தீர்மானித்த அவன் ஒரு தெருவில் திரும்பி மொட்டை மாடி வீடு ஒன்றின் முகப்புப் படி மீது ஏறி நின்று கொண்டான். வேதாவும் அவனருகில் வந்து ஒதுங்கி நின்றான்.

மைசூர் ராஜ்ய வீட்டு வசதி போர்டாரால் புதிதாக விரிவாக்கப் பெற்ற வசந்தநகர் என்னும் பகுதி அது. அழகழகான புதிய வீடுகளுக்கிடையே பல பழைய வீடுகளும் அங்கு காணப்பட்டன.

மணி இரண்டிருக்கும். அந்தத் தெருவிலிருந்த எல்லா வீடுகளும் இருளில் புதைந்து கிடக்க, அவ்விருவரும் மழைக்கு ஒதுங்கி நின்ற வீட்டின் ஓர் அறையில் மட்டும் பிரகாசமான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வலைக் கம்பிகளால் அடைப்புப் போடப் பட்டிருந்த வராந்தாவுக்கு இடது புறம் அந்த அறை அமைந்திருந்தது.

தலைக் கேசத்திலிருந்து நெற்றியில் வழிந்து கொட்டிய நீரைத் துடைத்துக் கொண்டு நின்ற சபேசனின் பார்வை அவ்வறையை நோக்கிச் சென்றது. புத்தக அலமாரியொன்றின் பக்கத்தில் போடப்பட்டிருந்த மேசைக்கு எதிரே உட்கார்ந்து ஏதோ ஒரு நூலை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தாள்



பெண்மணி ஒருத்தி. அவளுக்கு வயசு சுமார் முப்பத்தெட்டு இருக்கும். மாநிறம். மூக்குக் கண்ணாடி அணிந்த நல்ல களையான முகம். இலேசாக நரையோடிய கேசம். நெற்றியில் பொட்டு இல்லை. நகைகளும் அணிந்திருக்கவில்லை. கறுப்புக் கரையிட்ட வெள்ளைப் புடவை. இப்படி விளங்கிய அவள், தூக்கமின்மை நோயால் அவதிப்படுகிறவர்களும் சற்றுக் கண்ணயரும் நேரமான அந்தப் பின் இரவில் கண் விழித்துப் படித்துக் கொண்டிருந்ததைக் காணச் சபேசனுக்கு உள்ளூற வியப்பு ஏற்பட்டது.

மழைச் சாரல் முகத்தில் வீசவே, கீழ்ப்படியில் நின்ற வேதா, மேல்படியில் ஏறிக் கம்பிக் கதவின் மீது மெல்லச் சாய்ந்தான். அதனால் கதவு இலேசாக ஆட்டம் கொடுத்துக் கிரீச்சிட்டது.

புத்தக வாசிப்பில் லயித்திருந்த பெண்மணி இந்த ஒலியால் கவனம் திருப்பப்பட்டு மெல்லத் தலையைத் தூக்கிச் சன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். பிறகு, ''யாரது?'' என்று இதமான குரலில் கேட்டுக் கொண்டே எழுந்து வராந்தா விளக்கைப் போட்டுவிட்டு வெளியில் வந்தாள்.

தன் வீட்டுத் தாழ்வாரத்தில் நிற்க வேண்டாமென விரட்டி விடுவாளோ என்று அஞ்சிய சபேசன், அவளைத் திருதிருவென்று பார்த்து விழித்தான்.

அவனையும் வேதாவையும் அமைதியாக ஏறிட்டு நோக்கிய அந்தப் பெண்மணி, ''யார் நீங்கள்?'' என்று கேட்டாள் புருவங்களை உயர்த்தி.

''மழைக்கு ஒதுங்கி நிற்கிறோம், அம்மா! மழை விட்டதும் போய் விடுவோம்'' என்று பணிவுடன் பதிலிறுத்தான் சபேசன்.

''இந்தத் தெருவில் குடியிருப்பவர்களா?''

''இல்லை.........''

''வேறெங்கே?''

உடனே பதில் சொல்லத் தோன்றாமல் திணறிய சபேசன், ''அடுத்த தெருவுக்கு அடுத்த தெரு.......'' என்று குழறினான்.

சற்று நிதானித்து அவ்விருவரையும் கூர்ந்து கவனித்த அந்த மாது, ''அங்கே சாரல் அடிக்குமே! உள்ளே வந்து நிற்கலாம்'' என்றவாறு கம்பிக் கதவைத் திறந்து விட்டாள்.

''நன்றி, அம்மா!'' என்று முனகிய சபேசன் தயக்கத்துடன் போய் வராந்தாவில் ஒதுங்கி நின்றான். வேதாவும் அவனுக்குப் பின்னால் வந்து ஒண்டிக் கொண்டான்.

அவளையே சற்று நேரம் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்ற அந்தப் பெண்மணி, ''நன்றாக

நனைந்து விட்டிருக்கிறாயே! நீ மட்டும் இப்படி இந்த அறைக்கு வா!" என்று சொல்லிக் கொண்டே வீட்டினுள் சென்றான்.

தங்களைப் பற்றி அவள் ஏதாவது விவரம் விசாரிப்பாளோ என்று பயந்த வேதா இவனுடன் கூடத்து அறையில் போய் நின்றான். அதற்குள் ஒரு துவாலையுடன் வந்த அந்த மாது, "இந்தா, தலையைத் துவட்டிக் கொள்!" என்று கொடுத்துவிட்டு அமைதியாகத் திரும்பிச் சென்று மீண்டும் படிக்க உட்கார்ந்து விட்டாள். அவளைத் தவிர அந்த வீட்டில் வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

மேசை விளக்கின் ஒளியில் துல்லியமாகத் தெரிந்த அந்த அம்மையாரின் முகத்தையே பார்த்தவாறு தன் ஈரக் கூந்தலைப் பிரித்து உதறித் துவாலையால் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த வேதா, ஏதோ மின்சக்திக் கம்பியை மிதித்து விட்டவள் போல் அதிர்ச்சியடைந்து பின்னால் பாய்ந்து, அதே வேகத்தில் கண்களை நிமிண்டிக் கொண்டு மீண்டும் தன் பார்வையை மேலுயர்த்தினான்.

அங்கே, அந்த அறைச் சுவரில், அழகிய சட்டம் போடப்பட்ட புகைப்படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. சந்தேகமில்லை; அது பயில்வான் தம்பையாவின் படம்தான்!

'இந்தப் படம் இங்கு ஏன் இருக்கிறது?'— வேதாவுக்கு ஏற்பட்ட வியப்பும் திகைப்பும் பன்மடங்கு ஆயின. அது பயில்வான் தம்பையாவின் புகைப்படம்தானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்து பார்த்தான்.


அடுத்த கணம் அவனுடைய பார்வை அந்தப் பெண்மணியை நோக்கித் திரும்பியது. மேசை மேல் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு புத்தக வாசிப்பில் இன்னமும் ஆழ்ந்தே இருந்தாள் அவள். முன்பின் அறிமுகமில்லாத ஓர் ஆணையும் பெண்ணையும் இரவு நேரத்தில் வீட்டுக்குள்ளே அனுமதித்திருக்கிறோம் என்ற எண்ணமோ, கதவு திறந்திருக்கிறது என்ற நினைப்போ அவளிடம் சிறிதும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வளவு பெரிய வீட்டில் தன்னந் தனியாக இருக்கும் ஒரு பெண்ணுக்கு இத்தனை தைரியமா? இதைத் தைரியம் என்பதா? அல்லது அசட்டுத்தனம் — இல்லை, அசட்டைத்தனம் — என்பதா? அல்லது மனிதர்களின் மனச்சான்று மேல் வைத்திருக்கும் அபார நம்பிக்கை என்பதா? அப்படியெல்லாம் இருக்காது. கதவைத் திறந்து அவர்களை உள்ளே வரும்படி சொல்லிவிட்டு ஒரு விநாடி நின்று நிதானித்துக் கூர்ந்து பார்த்தாளே, அந்தப் பார்வையிலேயே அவர்களின் குணம், நடத்தை, நிலைமை எல்லாவற்றையும் துல்லியமாகத் துருவித் தெரிந்து கொண்டு விட்டாள் போலும். அவ்வாறாயின் அவள்தான் எத்தகைய சிறந்த கல்வியறிவும் பரந்த உலக ஞானமும் பெற்றவளாயிருக்க வேண்டும்!

வியப்பு மேலும் வளரத் தன் கவனத்தை அவசரமாக வேறு இலக்குகளில் திருப்பினான் வேதா. கூடத்து அறையில் இன்னும் சில புகைப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன. எல்லாம் குரூப் போட்டோ படங்கள். ஏதோ ஒரு பள்ளியின் மாணவிகளும் ஆசிரியைகளும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படங்களாகவே அவை காணப்பட்டன. ஒவ்வொரு படத்திலும் வெவ்வேறு ஆசிரியைகள் மாணவிகளுக்கிடையே இந்தப் பெண்மணி மட்டும் நடுநாயகமாக அமர்ந்திருப்பது தெரிந்தது. அப்படியானால் இவள் ஏதேனும் ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியையாக இருப்பாளோ?

வேதாவின் கண்கள் மீண்டும் தம்பையா படத்தின் மீதே வந்து நிலைத்தன. 'அந்தப் பயில்வானுக்கு இந்தப் பெண்மணி எந்த வகையிலேனும் உறவுக்காரியாக இருப்பாளோ?' — தம்பையாவின் குடும்ப விவரங்கள் பற்றி வேதா கொஞ்சம் அதிகமாகவே அறிவான். அவனுக்கென்று இப்போது இருப்பவர்கள் அவனைப் பெற்ற தாயும், உடன் பிறந்த இரண்டு சகோதரர்களும்தான். தமக்கையோ, தங்கையோ யாரும் அவனோடு பிறக்கவில்லை. தாய் வழி உறவினர்கள், தந்தை வழி பந்துக்கள் என்று நிறைய பேர்கள் இருக்கலாம்; ஆனால் அவர்களை அவனுடைய உறவினர்கள் எனச் சொல்வதைவிட விரோதிகள் என்று கூறுவதே பொருந்தும். அவன் தந்தையின் காலத்திலேயே அவர்கள் உறவெல்லாம் அறுந்தும் மறந்தும் போய் விட்டன. சகோதரர்களின் மனைவிமார்கள் வழியாக ஏற்பட்ட புதிய உறவினர்கள் பலர் இருப்பார்கள் என்றாலும் அவர்களுக்கு அவனை யாரென்றே தெரிந்திருக்க நியாயமில்லை. தங்களுக்கு ஒரு தம்பி இருக்கிறான் என்று அவனது அண்ணன்மார்கள் அவர்களிடம் சொல்லியிருக்கவும் மாட்டார்கள் என்பது நிச்சயம். அவ்வளவு தூரத்துக்கு அவன் அவர்களிடமிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டிருந்தான். இந்நிலையில், அந்த முரட்டு மனிதனின் புகைப்படம், அவன் இருக்கும் ஊரைவிட்டு இருநூற்றிருபது மைல்களுக்கு அப்பாலுள்ள இந்த நகரில், சமூக அந்தஸ்தும், கல்வியறிவும், பண்பும் கொண்டவளாகத் தோன்றும் ஒரு பெண்மணியின் இல்லத்தில், இத்தனை அன்பின் பக்தியோடும், கரிசனத்துடனும் சட்டம் போட்டு முன்னிடம் தந்து மாட்டப்பட்டிருக்கிறதென்றால் அவனுக்கு இவள் எந்த வகையில் அறிந்தவளாய், தெரிந்தவளாய், உற்றமாய், சுற்றமாய் இருப்பாள்........?

மழை ஓய்ந்தது. இவ்வளவுநேரம் வராந்தா மூலையில் கூனிக் குறுகிக் குளிர் பிடித்துக் கொண்டு நின்றிருந்த சபேசன் சுறுசுறுப்புடன் நிமிர்ந்து வெளியே கைநீட்டிப் பார்த்துவிட்டுச் சன்னல் அருகில் நெருங்கி, "மழை நின்று போச்சு; நாங்கள் போயிட்டு வரோம்மா!" என்றான் நன்றி குழைந்த குரலில்.

புத்தகத்தை அப்போதுதான் மூடிய அந்தப் பெண்மணி, "புறப்பட்டு விட்டீர்களா?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து கூடத்து அறைக்கு வந்தாள்.



“என்னங்க, இந்த வயசிலேயே குளிருக்கு இப்படி நடுங்கறீங்களே!”
“நீ இப்படி ‘ஜில்’னு இருக்கியே!”

அவனைப் பார்த்ததும் வேதாவின் மனத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. தம்பையாவின் அந்தப் படத்தைச் சுட்டிக்காட்டி, 'இவர் எனக்குத் தெரிந்தவர்; சென்னையில் எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலேதான் குடியிருக்கிறார் என்று அவனிடம் சொல்லி விடலாமா?' என ஒருகணம் நினைத்தாள். அப்படி நினைத்ததற்குக் காரணம், 'அவ்வாறு சொன்னால் அவரைப் பற்றி — அவருடைய படத்தைத் தன் வீட்டில் வைத்திருப்பது பற்றி — அவன் ஏதாவது தகவல் சொல்லலாம்' என்ற ஆசைத் துடிப்புதான். ஆனால் மறுகணமே மற்றோர் எண்ணம் தோன்றி, அப்படி அவனிடம் கேட்டு விடாமல் வாயை இறுக்கியது. 'ஆமாம்; தம்பையாவைப் பற்றிச் சொன்னால் உடனே இவன் என்னைப் பற்றியும் கேட்டு விட்டால் என்ன செய்வது? அந்தக் கேவலமான விஷயத்தை நானே எவ்வாறு விவரித்துக் கூறுவது? மேலும் சபேசன் இவனிடம், நாங்கள் இந்த ஊரில் பக்கத்துத் தெருவில் தான் இருக்கிறோம் என்று வேறு சொல்லி விட்டிருக்கிறாரே!' — பீதி கலந்த குழப்பத்துடன் அவனை மெல்லத் தலை நிமிர்ந்து நோக்கினாள் வேதா.

“என்ன பெண்ணே! ஈரத் தலையைக் காய வைத்துக் கொண்டாயா?” என்று பரிவுடன் கேட்டவாறு வந்த அந்த அம்மையார், வேதாவின் அழகிய பளபளப்பான கருங் கூந்தலைத் தொட்டுத் தடவிப் பார்த்துவிட்டு, “சரி; மறுபடியும் மழை பிடிப்பதற்குள் வீடு போய்ச் சேர்!” என்றாள் ஒருவித கண்டிப்பான குரலில்.

வேதா தன் கையிலிருந்த ஈரத் துவாலையை உதறிப் பிரித்து நாற்காலியொன்றின் தலைப்புச் சட்டத்தில் போட்டு விட்டுத் தயங்கிப் பின்னும் நகர்ந்தாள்.

“உன்னிடம் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்; அதைக் கேட்டு வருத்தப் படமாட்டாயே?”

சட்டென்று நிமிர்ந்து அவளைத் திருதிருவென விழித்துப் பார்த்தாள் வேதா.

சில விநாடிகள் நேரம் ஏதோ யோசித்த அந்தப் பெண்மணி, “சரி, வேண்டாம்! போய் வா!” என்றாள் கனிவு நிறைந்த இள நகையுடன்.

அவள் என்ன சொல்ல நினைத்தாள்? பிறகு ஏன் அதைச் சொல்லாமல் நிறுத்தி விட்டாள்? — 'ஓர் இளம் பெண் ஒரு வாலிபனுடன் இம்மாதிரி இரவு நேரங்களில் தனியே ஊர் சுற்றக் கிளம்பக் கூடாது' என்று கண்டித்துச் சொல்லக் கருதியிருப்பாளோ? இல்லை; இதற்கு மேலும் அவள் என்னமோ கூற நினைத்திருக்கிறாள் என்றே வேதாவுக்குப் பட்டது. அதனால் அவளையறியாமலே ஒருவித அச்சமும் வெட்கமும் சூழ்ந்து மனத்தைக் குழப்பிப் புரட்ட, குனிந்த தலை நிமிராமல் வெளியே வந்துவிட்டாள் அவள்.

“போகலாமா?” என்றவாறு முன்னால் நடக்க ஆரம்பித்த சபேசன் ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் அவசரமாகத் திரும்பி ஓடி வந்தான். அந்த வீட்டின் வாசற்படிகளுக்கு இருபுறமும் வரிசையாக வைக்கப்பட்டிருந்த பூத்தொட்டிகளில் சில, காற்றுடன் சேர்ந்து அடித்த மழையினால் கீழே சாய்ந்து விட்டிருந்தன. அவற்றைத் தூக்கிச் சரியாக நிமிர்த்தி வைத்து விட்டுத் திரும்பினான். ரயில் நிலையத்தை நோக்கி விரைந்து நடந்தான். சித்தம் கலங்கிய நிலையில் அவனைப் பின்தொடர்ந்தாள் வேதா.

அவர்கள் இருவரும் தொலைதூரம் சென்று மறையும் வரையில் வாசற்கதவருகிலேயே நின்று கொண்டிருந்தாள் அந்தப் பெண்மணி.

கீ கீ கீ

“இன்னும்மே, கன்னிம்மா! எப்படி யிருக்கிறே?”

காலையில் வாடிக்கை வீடுகளுக்குப் பால் கறந்துவிட்டு மாடுகளை ஓட்டிக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த கன்னியம்மாள் இந்தக் குரல் கேட்டுத் திடுக்குற்றவள் போல் நின்றாள். உடல் நலம் தேறிய நிலையில் உற்சாகமாகத் திண்ணையின்மேல் உட்கார்ந்திருந்தான் பயில்வான் தம்பையா.

அவனைப் பார்த்ததும் அவளுக்கு மகிழ்ச்சிதான் என்றாலும் கூடவே ஒரு திகிலும் ஏற்பட்டது. 'இந்தப் பாவி மனுசன் எப்போ வந்தான்?' என்று மெல்ல முனகிக் கொண்ட அவள், நின்ற இடத்திலேயே நின்று, “இன்னா அண்ணாத்தே! சௌக்கியமா யிருக்கிறயா?” என்றாள் போலிச் சிரிப்புடன்.

“இதோ, இருக்கிறேனே, தெரியலே?” என்று அமர்க்களமாக நகைத்த தம்பையா, “அது சரி; உன் பொண்ணு வேதகுமாரி எப்படி இருக்குது? நம்ப சிஷ்யப் பையன் நச்சி ஊட்டுக்கு வாரானா?” என்று கேட்டுவிட்டு, “இன்னும்மே, அங்கேயே நிக்கிறே? இப்படி வாயேன்!” என்றான் அதட்டலாக.

கன்னியம்மாளின் முகம் பேயறைபட்டது போல் கறுத்தது.

(தொடரும்)


'மேனியழகுக்காக
நான்
விரும்புவது
லக்ஸ்'
என்கிறார் ஜமுனா
LUX
LUX
TOILET SOAP
மேனியழகு..! ஜமுனாவுக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் உங்களுக்கும்... எனவே அதே கவனிப்புக்குரியது.
'மாதரின் வனப்புக்கு மாசற்ற மேனியைவிட மேலான சிறப்பு எது?' என்கிறார் வடிவழகி ஜமுனா. 'எனதழகைப் பேண நான் என்றும் உபயோகிப்பது லக்ஸ்: செழிப்பான மென்மை நுரையுடன் சிந்தை கவரும் நறுமண சோப். எனக்கு அதுவேவிருப்பம். உங்களுக்கும் அப்படித்தானே?' உமதெழிலும் பொலிவடைய உறுதுணை லக்ஸ்.
வெண்மையிலும், வானவில்லின் 4 வண்ணங்களிலும் வரும் சோப்.
லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் தூய, மெல்லினம் அழகுசாதன சோப்
லின்டாஸ்-LTS.300-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



கிறிஸ்துமஸ் பரிசு

ஏ. ஏ. தாஸ்

வழக்கம் போல் அந்த ஆண்டும் ஆகமன காலத்தின் முதல் ஞாயிறு அன்று, கிறிஸ்துமஸ் 'கரோல்' பஜனையை ஆரம்பித்து விட்டார் ஜோசப் ஆசாரி. விடியற்காலம் நான்கு மணிக்கே ஹார்மோனிய நாதம் இழைய அவர் நண்பர்களோடு எழுப்பிய இனிய கானம் சீதளக் காற்றிலே எங்கும் பரவி மணத்தது.

ஒரு மொழிகொண்டு யாவையும் படைத்தோன்
திருவுளம் வாழ்ந்த சோதியே வாழி!
இக்கால் மரியிடம் எழுந்த பேரொளியே
சோதியே! இஸ்ராயேல் மகிமையே வாழி!

தோட்டக் குடிசைக்கு வெளியே நின்ற மேரி, அந்த பஜனை கோஷ்டியின் கானத்தில் லயித்தபடி அவர்கள் போவதையே பார்த்தாள். அவள் உதடுகள் அவளையறியாமலேயே 'இஸ்ராயேல் மகிமையே வாழி!' என்ற பாடல் வரியை முணுமுணுத்தன. அப்பொழுது வீசிய பனிக் காற்றிலே மெய் சிலிர்த்தவளாய் நீண்ட பெருமூச்சு விட்டாள்.

இந்த பஜனை கோஷ்டியுடன் இதே பாடலை பரவசமாகப் பாடிச் செல்லும் தன் அத்தான் வில்லியம் இன்று இல்லாததை நினைக்கும்போது, அவள் நெஞ்சையே கசக்கிப் பிழிவதுபோல் இருந்தது. 'அவன் போய் மூன்று ஆண்டுகளும் ஓடி மறைந்து விட்டன.' இது நாளும் அவன் பிரிவால் அவள், எப்படித்தான் தன் நெஞ்சைக் கல்லாக்கித் தனக்குத்தானே தெம்பூட்டி வந்தாளோ? சரியாக ஆறாத ரணத்தை மேலும் கீறிவிட்டு வேதனை எழுப்புவது போலாகி விட்டது அவளுக்கு. அந்தக் கீத கானத்தைக் கேட்டதும்! அவள் இமை மூடித் திறந்தாள். பொல பொல வென்று நீர்த்துளிகள் அவள் கன்னச் சரிவுகளில் பட்டுத் தெறித்தன.

அவர் போய் இரண்டு கிறிஸ்துமஸ்கள் வந்து போய் விட்டன. இந்தக் கிறிஸ்துமஸுக்காவது அவர் வந்து என் நெஞ்சிலே உவகை ஊட்டுவாரா? அந்த நினைப்பின் அசைப்பிலே அவனே வந்து முன் நின்று சிரிப்பது போன்ற அசட்டுப் பிரமையால் தனக்குள் வெட்கமாகக்கூட அவள் சிரித்துக் கொண்டாள்.

தூரத்தில் பஜனை கானம் கம்பீரமாக ஒலித்துக் கொண்டுதானிருந்தது!

அவளோடு சிறு வயது முதல் ஆண்டுதோறும் பண்டிகையன்று தன் வீட்டுக் கூடத்தில் குடில் அமைத்து மத்தியில் சேசுபாலன், மேரி, சூசை, இடையர்கள் சொரூபங்களை வைத்து ஜோடித்துத் தீப அலங்காரமிட்ட அந்தப் பழைய ரம்மிய நினைவுகள், இப்பொழுது அவள் மனத்திலே தொடர் சித்திரம் போலத்தான் தோன்றின.

'இந்த ஆண்டாவது ஒன்றாகக் கொண்டாட அவர் வருவாரா? அவர் கட்டாயம் வரத்தான் செய்வார். சேசுபாலனிடம் நான் பிரார்த்தித்த பிரார்த்தனை ஒரு நாளும் வீண் போகாது. அழகாகக் குடில் அமைத்து அவர் பார்த்துப் பிரமிக்கும் வகையில் புதுவிதமாக அலங்கரிக்கத்தான் போகிறேன்!' என்று கூறியபடி ஒரு முடிவுடன் மேரி உள்ளே போனாள்.

அன்று பகல் உணவை முடித்துக் கொண்டு ஜோசப் ஆசாரி வெளியே வந்தபோது, வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாமரத்தடியில் கூடும் அவர் நண்பர்களின் கூட்டம் அவருக்காகக் காத்திருந்தது.

அவர் நண்பர் அப்துல்லாதான் முதலில் பேச்சை ஆரம்பித்தார்.

''இந்த வருஷப் பண்டிகைக்காவது, வில்லியம் பிள்ளையாண்டான் வருவாங்களா?''

''வரணும். ஆனால் நிச்சயமா வருவேன்னு கடிதம் வரலே......'' என்று பேச்சை நிறுத்திய ஜோசப் ஆசாரிக்கு, நெஞ்சை ஏதோ அடைப்பது போலத் தோன்றியது. உடனே நண்பர்கள் அறியாதவாறு தம்மை அவர் சமாளித்துக் கொண்டார்.

''இந்தக் கஷ்ட நிலையிலும் நீங்க பண்டிகை சம்பிரதாயச் செலவுகளை யெல்லாம் கைவிடாமல் செய்கிறீர்களே?'' அப்துல்லா மன வேதனையுடன் கேட்டார். அவர் ஜோசப் ஆசாரியின் ஆத்ம நண்பர். ஆசாரியின் செல்வம் கொழித்த குடும்பம் 'இப்படி' இன்று நொடித்து விட்டதே என்றுதான் அவரைப் பார்க்கும் போதெல்லாம் அவர் கண் கலங்குவார்.

''என் தாத்தா காலத்திலிருந்தே நாங்க சிறப்பா செய்யும் பழக்கத்தைக் கைவிடாமல் இருக்கிறோம். எல்லாம் அவன் செயல்! வாழ்ந்து கெட்டாலும் உள்ளத்தைச் சுருக்கிக் கொள்ள முடியுமா? எப்படியோ என் காலமும் ஓடி விட்டது. என் ஒரே மகள் மேரி; தாயில்லாப் பெண். அவள் எதிர்காலத்தில் கண்கலங்காமல் இருக்கணும்....''

''அந்தக் கவலைதாங்களே எங்களுக்கும்.'' பாவாடையும் பரிவுடன் வருத்தப்பட்டார்.

''சேசுபாலன் என் கண்ணீரைத் துடைப்பார் என்ற நம்

பிக்கை எனக்கு இருக்கிறது'' ஜோசப் ஆசாரி தமக்குத் தாமே ஆறுதல் கூறிக் கொள்வது போல் இருந்தது, அவர் அப்படிச் சொன்னது.

"தம்பி வந்தா எல்லாம் சரியாப் போயிடுங்க. இந்த வருஷப் பண்டிகையை ஜமாய்த்திடுவோம்" என்று கூறியபடி, அப்துல்லா பேச்சை வேறு பாதையில் திருப்பி விட்டார்.

"ஊம்......" நீண்ட பெருமூச்சு விட்டவராய் இமை விளிம்பில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் ஜோசப் ஆசாரி.

இது நேரமும் மறைந்து நின்று அவர்கள் பேசியதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த மேரி, தன் அத்தான் வில்லியத்தைப் பற்றிய எண்ணங்களிலே மனத்தைப் பறி கொடுத்தவளாய்க் கொய்யா மரத்தில் சாய்ந்தபடி நின்றாள்.

வில்லியம் லண்டனுக்குப் புறப்பட்ட இனத்தன்று மாலை, கடைசியாக அவளிடம் அவன் பேசி மகிழ்ந்த அந்த இன்பக் காட்சி இப்பொழுது அவள் மனத் திரையில் நிழலாட ஆரம்பித்தது!

"மேரி! நான் புறப்பட இன்னும் மூன்று மணி நேரந்தான் இருக்கு. அதுக்குள்ளே கேட்கிற கேள்வியைக் கேட்டு முடிச்சிடு......"

"ஏன், அத்தான்! நீங்க திரும்பி வர எத்தனை வருஷமாகும்?"

"இரண்டு வருஷமாகும். மேலும் ஒரு வருஷமானாலும் ஆகலாம்......"

"அம்மாடி...... அது வரை உங்களை எப்படி என்னாலே பார்க்காம இருக்க முடியும்?"

"நான் போறது உனக்கு வருத்தமா இருந்தா, படிப்புக்கு இதோடு முற்றுப் புள்ளி வச்சிடுறேன்........"

"பேச்சைப் பாரு." தன் தளிர் விரல்களால் அவன் உதட்டை மூடினாள்.

"நீங்க படிச்சச் சிறப்பா விளங்கணும்னுதானே நான் தினமும் அன்னை மேரியிடம் பிரார்த்தனை செய்து வரேன். உங்க வாழ்க்கைப்பிரகாசத்திலேதானே அத்தான், என் எதிர்கால வாழ்க்கைப் பாதையே பூரிப்புடன் தொடரணும்..."

"ஊம்........" அவளையே விழுங்கி விடுவது போலப் பார்த்தான் வில்லியம்.

"அத்தான்...." ஏதோ அவள் சொல்லத் தயங்கினாள்.

"என்ன மேரி?" அவளை நெருங்கினான்.

"உங்கள் விரலிலே அன்று நான் போட்ட நீலக் கல் மோதிரம் இருக்குதா?"

தன் மோதிர விரலை அவள் முகத்தருகே நீட்டினான். "இதோ! இதை என் இறுதி மூச்சு வரை கழற்றவே மாட்டேன்."

அன்பு மயமான அவன் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க அவள் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.



வேகமாக அடித்த காற்றிலே மரத்திலிருந்த சருகுகள் உதிர்ந்து அவளை மெய் சிலிர்த்து உணர்வடையச் செய்தன. கண் கலங்கிய மேரி குச்சியை ஊன்றித் தள்ளாடி நடந்தபடி தன் அறைக்கு வந்தாள்.

இருள் கவியும் நேரம். விளக்கை ஏற்றி வைத்துக் கடந்த மூன்று ஆண்டுகளாக வில்லியம் எழுதிய கடிதங்களை யெல்லாம்



எடுத்து மேஜையில் பரப்பி வைத்து அவை களை வெகுநேரம் கூர்ந்து பார்த்தாள்.

ஒவ்வொரு கடிதத்தின் மேலும் வில்லியத் தின் அழகு முகம் தோன்றி, 'மேரி மேரி' என்று ஆசை பொங்க அழைப்பது போல் ஒரு மனப்பிரமை அவளுக்கு ஏற்பட்டது. ''அவ ருக்குத்தான் என் மீது எவ்வளவு ஆசை! கடிதங்களில் உள்ள ஒவ்வொரு வாசகமும் எவ்வளவு இனிப்பு? இப்படிப் பக்கம் பக்க மாக எழுத அவருக்கு எப்படித்தான் நேரம் கிடைத்ததோ?'' என்று கூறியபடி ஒரு கவரை எடுத்தாள்.

'இந்த நீலக் கவரில் வந்த கடிதம்தான் படிக்கப் படிக்க எனக்கு புதுச் சுவை ஊட்டு கிறது' என்று அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

''வானத்து வெள்ளிப் பூக்களைப் பார்க் கும்பொழுது என் மேரிப் பெண்ணின் பட படத்துச் சுடர்விடும் சொக்கும் விழிகள்தான் எனக்கு நினைவு வருகிறது. சாலையிலும், கட்ட டக் கூரையிலும் இங்கு படிந்து கிடக்கும் பனிப் படலங்களை உதயநேரத்தில் காணும் பொழுது, உன் பஞ்சுக் கன்னத்தின் வசீகரம் தான் என் கண் முன்னே வந்து நிற்கிறது. இந்த இன்ப பூமியில் என் கரம் கோர்த்து ஆடிப் பாட நீ அருகில் இல்லையே என்ற வருத்தம் தான் என்னை உயிரற்ற உடலாக்கி விடுகிறது.

உன்னைப் பிரிந்து வந்து இரண்டு கிறிஸ்துமஸ்கள் ஓடிவிட்டன. வரும் கிறிஸ்து மஸாவது நாம் ஒன்று கூடுவோம் என்று நம்புகிறேன். பண்டிகை கொண்டாடுவதில் நமக்கும் இங்குள்ளவர்களுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. நடுநிசி பூசைக்குப் போகிறார்கள். எங்கும் மெழுகுவர்த்தி தீப அலங்காரம்தான். கேக்குகளைப் பரிமாறி உண்கிறார்கள்; வாழ்த்துக்கள் அனுப்புகி றார்கள்; குறிப்பாக இளைஞர்களின் கரோல் முழக்கம்தான் வீதியெல்லாம்.

கிறிஸ்துமஸ் தாத்தா பரிசளிக்கும் விழாவே இங்கு ஒரு தனிச் சிறப்புத்தான்! மகிழ்ச்சியும் ஆறுதலும் தரக் கூடிய கிறிஸ்துமஸ் தாத்தா பொம்மை யொன்றும் உனக்கு நான் பரிசாக அனுப்பியிருக்கிறேன்.''

மேரி கடிதத்தை மூடி வில்லியம் அனுப் பிய கிறிஸ்துமஸ் தாத்தா பொம்மையை எடுத்து ஸ்டாண்டில் எடுப்பாக வைத்தாள்.

தன் அத்தானைப் பற்றிய எண்ணக் குமுறல்கள் அதிகமாக அதிகமாக அவள் தொண்டையை அடைத்தது. 'படுகட்டு' என்று சதா என்னைப் பரிகசிக்கும் அவர், இன்று ஊன்றுகோல் உதவியுடன் தத்தி நடக் கும் இந்த நொண்டி மேரியைப் பார்த்தால்?' தான் நொண்டி என்பதை நினைத்ததுமே தன் தலையில் கையை வைத்து அருகிலிருந்த சாய்வுநாற்காலியில் அப்படியே அவள்சாய்ந்து விட்டாள். அவள் சிந்தனை மேலும் பின் நோக்கி விரைந்தது!

தனது இடது கால் உடைந்த அந்தப் பயங்கர நாளை அவளால் எப்படி மறக்க முடியும்? அந்த நாள் மறைந்து ஓர் ஆண்டுக்கும் மேலாகி விட்டது. அந்தச் சம்பவ நினைத்தன்று மேரியின் மனம் கலங்கிச் சேறுள குட்டையாகி விட்டது. காரணம்? லண்டனிலிருந்து வில்லியம் எழுதிய கடிதம் தான் அப்படி அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. ஹாக்கி விளையாடும் பொழுது அவன் தவறி விழுந்து காயத்துடன் ஆஸ் பத்திரியில் இருப்பதாகவும் இன்னும் கொஞ்ச நாள் ஆஸ்பத்திரியிலேயே தங்கியிருக்க வேண்டியிருக்கும் என்றும் எழுதியிருந்தான்.

'அடி பலமாக இருக்குமோ?' அங்கு அவன் அநுபவித்த வேதனையைவிடக் கடிதம் கண்ட அவள் அதிகம் அநுபவித்துத் துடியாய்த் துடித் தாள். எதிலுமே அவள் மனம் ஓடவில்லை. குழப்பத்துடன் குடத்தை எடுத்துக் கொண்டு குளத்துக்குக் குளிக்கப் போனாள் மேரி.

அப்பொழுது அவள் விழிகளின் எதிரில் இருப்பது எதுவுமே தென்படவில்லை. வில்லி யம் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் கற்பனைக் காட்சிதான் நிறைந்து நின்றது. குளத்துப் படிக்கட்டில் இதே சிந்தனையுடன் இறங்கிய வள், பாசி படிந்த இடத்தில் காலைத் தவறி வைத்து விட்டாள். வழுக்கித் தடுமாறி நிலை குப்புற உருண்டு தண்ணீரில் விழுந்தாள். மடக்கென்று ஓர் அதிர்ச்சி அவள் இடது காலில் ஏற்பட்டது.

''அம்மா!'' என்று அலறி மூர்ச்சித்த அவள் – பிறகு கண் விழித்த போது, ஆஸ்பத்திரிக் கட்டிலில் காலை அசைக்க முடியாமல் இருப்பதைத்தான் கண்டாள்.

நீர் திரையிட்ட விழிகளுடனே தன்னைப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழும் தன் தந்தை ஜோசப் ஆசாரியைப் பார்த்ததும், உதடுகள் துடிக்க, ''அப்பா!'' என்று அவள் ஈனக் குரலில் முனு முனுத்தாள்.

''மேரி கண்ணு!'' அவள் கைப்பிடித்துக் குழந்தையைப் போன்று கதறி அழுதார் ஜோசப் ஆசாரி.

மூன்று மாதங்களுக்குப் பிறகு மேரி ஆஸ்பத்திரியிலிருந்து வரும் பொழுது தனது இடது காலை வெட்டிக் கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக மர ஊன்றுகோலை வாங்கிக் கொண்டு தன் வீடு வந்தாள்.

படிக்கட்டில் அவள் விழுந்த போது அவள் இடது முழங்கால் வரையில் எலும்பு நொறுங்கி விட்டது. சிதைந்த பாகத்தை ஆஸ்பத்திரியில் வெட்டி எடுத்து விட்டனர்.

ஆஸ்பத்திரியில் அவள் கண் விழித்த முதல் நாளே தன் தந்தையிடம் கண்டிப் பான உத்தரவு போட்டு விட்டாள், இது பற்றித் தன் அத்தானுக்கு எந்தத் தகவலும் எழுதக் கூடாதென்று! இது பற்றித் தெரிந் தால் அவர் படிப்பல்லவா பாழாகி விடும்? அவர் மனம் என்ன பாடுபடும்?

இந்த ஓர் ஆண்டுக் காலமாக அவள் மனத்தோடு போராடிய போராட்டம்? வாழ்க்கையில்தான் எவ்வளவு பெரிய சோதனை? அவள் தந்தை உடல் துரும்பாகி விட்டார். மகள் நொண்டியான வேதனை யோடு – அவர் பாங்கில் போட்டிருந்த பெருந்தொகை – பாங்கி திவாலானதால்

பறிபோய் விட்டது. அவரது பூஸ்திதியான சொற்ப நிலத்திலும் விளைச்சல் காணவில்லை. நிலத்தை ஒன்றுக்குப் பாதியாக விற்றார். வீட்டையும் அடமானம் வைத்தார். தம் கையில் பிடித்துக் கொடுத்துக் கண்ணை மூடிய தம் தங்கை மகன் வில்லியத்தின் மேற்படிப்பு அவன் திட்டமிட்டபடி இரண்டு ஆண்டுகளில் முடியவில்லை. மேலும் ஓர் ஆண்டு கூடுதலாகி விட்டது. மேலே மேலே ஏதேதோ கஷ்டநஷ்டங்கள். அவர் மாடி வீடும் கடைசியாகக் கடனில் மூழ்கிவிட்டது.

தம் தொண்டி மகளுடன் மிஞ்சியிருந்த தம் மாமரக் கொல்லையில் ஒரு கூரை வீட்டைக் கட்டிக் கொண்டு ஜோசப் ஆசாரி குடியேறி விட்டார். தம் மருமகன் வில்லியம் லண்டனிலிருந்து திரும்பி வந்து பெரிய உத்தியோகத்தில் அமர்வான், பிறகு தாம் பழையபடி தலை நிமிரலாம் என்று தன் தளர்ந்த நெஞ்சில் நம்பிக்கை வைத்திருந்தார். இதை அவர் மேரியிடம் சொல்லும் பொழுது அவள் கன்னம் சிவக்கப் பூரித்து மகிழ்ந்தாள்.

"மேரி! ஏம்மா, உன் கண் கலங்கி இருக்கு?" தந்தையின் குரல் கேட்டுக் கண்களைத் துடைத்த அவள், ஊன்றுகோலை ஊன்றியபடி எழுந்தாள். சற்றுமுன் கடந்த காலச் சம்பவங்களில் லயித்திருந்த அவள், மெய் உணர்வடையச் சில நிமிஷங்களாயின.

"வில்லியம் கிறிஸ்துமஸுக்கு எப்படியும் வந்து விடுவான். ஆனால் உன்னை இந்த நிலையில் அவன் ஏற்பான் என்பது என்ன நிச்சயம்?"

"அத்தானை அப்படி யெல்லாம் குறைவாய்ப் பேசாதீங்கப்பா. அவர் மனசு எனக்குத் தெரியும்."

"ஆனால்..." அவர் வார்த்தையை நிறுத்திக் கலங்கிய கண்களால் அவளையே பார்த்தார். "என்னமோம்மா. நம் நம்பிக்கை வீண் போகாமல் சேசுபாலன்தான் அருள் புரியணும். வாம்மா! சாப்பிடுவோம். நேரமாகலே........"

அவரைப் பின்தொடர்ந்து அவள் உள்ளே போனாள்.

பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்பே திடீரென்று வில்லியத்திடமிருந்து தந்தியொன்று வந்தது புறப்பட்டு வருவதாக! அந்தத் தந்தியைப் பார்த்ததிலிருந்து மேரியின் மனம் ஒரு நிலையில் இல்லை. அச்சமும், ஆனந்தமும் அவளை ஆட்டிப் படைத்தன. வேலைக்காரியை வைத்துக் கொண்டு வீட்டை அலங்காரம் செய்ய ஆரம்பித்தாள். 'மேல் நாட்டிலிருந்து அவர் வரும் பொழுது எவ்வளவு அழகாக இருப்பார். நாகரிக உடையணிந்து வருவார்' என்றெல்லாம் அவன் உருவத்தைத் தன் மனக் கண்ணில் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாள் மேரி.

வில்லியம் ஊர் வரும் நாளன்று அதாவது கிறிஸ்துமஸுக்கு முதல் நாள் வண்டியைக் கட்டிக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனார் ஜோசப் ஆசாரி. தம் மகளைவிட அவருக்குத்தான் வில்லியத்தைப் பார்க்க வேண்டுமென்ற துடிதுடிப்பு இருந்தது.



"நூறு ரூபாய் கடனாகக் கொடுங்கள்!"
"சரி, இந்தாருங்கள்!"
"ரொம்ப நல்லது! உங்க அட்ரஸைச் சொல்லுங்க; நான் திருப்பி கொடுத்துவிடுகிறேன்!"
"சரி! எழுதுங்கள்: "மிஸ்டர் நாராயணன் எமப்பட்டினம்!" ஏனய்யா திகைக்கிறீங்க? நீங்க ரூபாய் திருப்பிக் கொடுக்கும்போது நான் அங்குதான் இருப்பேன்!"

குறித்த நேரத்தில் ரயிலும் வந்தது. வண்டியிலிருந்து கோட்டு சூட்டுடன் கம்பீரமாக இறங்கிய வில்லியம் தன் மாமனைப் பார்த்ததும் ஓடி வந்து காலில் விழுந்து வணங்கினான். அவனை அப்படியே தூக்கி அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார் ஜோசப் ஆசாரி.

"மேரியை எங்கே மாமா காணோம்?"

"வீட்டிலே காத்துக்கிட்டு இருக்கு....."

"சீக்கிரமா போவோமே......" என்று சாமான்களைத் தூக்கிக் கொண்டு பரபரப்புடன் வண்டியை நோக்கி நடந்தான் வில்லியம். தன் மருமகன் வெள்ளைக்காரன் போல் உடையணிந்து புதுக் கவர்ச்சியுடன் நடந்து போகும் அழகைப் பார்த்து ரசித்தபடி அவன் பின் நடந்தார் ஜோசப் ஆசாரி.

வண்டியில் போகும் போது வீடுகள் தோறும் பண்டிகைக்காகத் தோரண அலங்காரங்களெல்லாம் செய்து கொண்டிருப்பதை வில்லியம் பார்த்தான். "ஏன், மாமா நம்ம வீட்டையும் அழகாக ஜோடிச்சிருக்கீங்கள்ளே? இந்த வருஷப் பண்டிகையை நாம சிறப்பாக் கொண்டாடணும். உங்களுக்கும் மேரிக்கும் விதம் விதமான உடைகள் வாங்கி வந்திருக்கிறேன்" என்றான் மகிழ்ச்சியாக.

அவர் பதில் எதுவும் கூறாது தம் மனக் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் அவனையே பார்த்தார்.

மாட்டு வண்டி பழைய வீட்டில் நில்லாது கொல்லைப்புறக் கூரை வீட்டருகே

வந்து நின்றது. அதைப் பார்த்து வில்லியம் வியப்படைந்தான்.

"ஏன், மாமா! நம்ம வீடு திப்பேராகுதா? கொஞ்ச நாளைக்குக் கூரை வீட்டு வாசமா? எனக்கும் கூரை வீட்டிலே இருக்கத்தான் ஆசை. ஆமாம், நம்ம கிராமம் ரொம்ப மாறுதலடைஞ்சிருக்கே? நம்ம மேரியும் மாறுதலாகி யிருப்பாளோ?"

ஜோசப் ஆசாரி பதில் எதுவும் கூறாது கண்களைத் துடைத்தபடி வண்டியை விட்டு இறங்கினார்.

வண்டியிலிருந்து குதித்து இறங்கிய வில்லியம் கூலிங்கிளாஸ் கண்ணாடியைக் கழற்றி, "மேரி, மேரி" என்று குரல் கொடுத்தபடி வீட்டில் நுழைந்தான். அவன் முதல் பார்வை சுவரில் மாட்டியிருந்த அவள் படத்தின் மீது விழுந்தது. அவள் படத்துக்கு மல்லிகைச் சரம் போடப்பட்டிருந்தது. ஒரு மூலையில் கிறிஸ்துமஸ் குடில் அழகாக ஜோடிக்கப்பட்டிருந்தது. அதில் அவன் லண்டனிலிருந்து அனுப்பிய கிறிஸ்து மஸ் தாத்தா பொம்மையும் இருந்தது. அவைகளையெல்லாம் பார்க்கப் பார்க்க வில்லியத்துக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

"மேரி..... மேரி!" என்று பலமாகக் குரல் கொடுத்துச் சுற்றிலும் பார்த்தான்.

"அத்...தான்!" அவள் குரலை அடுத்துத் தடாரென்ற சப்தம் பக்கத்து அறையில் கேட்டது.

"மேரி!" பதறி ஓடினான் வில்லியம்.

மேரி எழ முடியாமல் கீழே கிடந்தாள். அவளைப் பார்த்த அதிர்ச்சியில் மெய் சிலிர்த்தவனாய் அவன் நடுங்கிக் கீழே விழுந்து விட்டான். அவள் ஊன்றுகோல் தூரத்தில் கிடந்தது. அவளை அந்த நிலையில் பார்த்த வில்லியம் வாயடைத்துச் சிறிது நேரம் பேச முடியாமல் நின்றான்.

"என்ன மேரி இது?" குனிந்து அவளை ஒரு கையால் தூக்கி நிறுத்தித் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

"நான் ஒரு நொண்டியாகி விட்டேன், அத்தான்! உங்களைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது."

"கால்தானே நொண்டியானது. உன் உள்ளம் ஒன்றும் நொண்டியாக வில்லையே?"

பதில் சொல்ல முடியாமல் அவன் முகத்தையே பார்த்தாள் மேரி.

"பைத்தியம். உனக்காக நான் வாங்கி வந்த கிறிஸ்துமஸ் பரிசைப் பாரேன்" என்று பெட்டியைத் திறந்து ஒரு ஜோடி வெல்வெட் ஸ்லிப்பரை அவள் முன் எடுத்து வைத்தான்.

மேரி ஸ்லிப்பரை எடுத்துப் பார்த்துக் கண் கலங்கினாள். நொண்டியான அவள் அதை எப்படிப் போட முடியும்? அவள் மன வேதனையைப் பார்த்த அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"நீங்க ஆஸ்பத்திரியிலே இருக்கிறேன்னு கடிதம் எழுதின தினத்தன்று கவலைப்பட்ட நான், குளத்தில் குளிக்கப் போனபோது படிக்கட்டில் தவறி விழுந்து கால் முறிஞ்சு நொண்டியானேன். ஆமாம், இந்த நொண்டியை நீங்க கல்யாணம் செஞ்சா, உலகம் பழிக்கும். மேல்நாட்டில் படித்த நீங்க எதிர் காலத்தைப் பற்றி எவ்வளவோ கனவு கண்டிருப்பீங்க....."

"மேரி! உன்னிடம் நான் ஒன்று கேட்கலாமா?"

"ஒன்றென்ன, ஆயிரம் கேளுங்களேன், அத்தான்!"

"நான் உன்னைப்போல் நொண்டியாகி யிருந்தால் நீ இப்படித்தான் என்னை வெறுத்து ஒதுக்கியிருப்பாயோ?"

"எனக்கு இரண்டு உள்ளங்கள் இல்லையே, அத்தான். பெண் இதயத்தில் ஒருவருக்குத் தான் இடம் உண்டு. ஏற்றதை ஒதுக்கும் மனப் பண்பு பெண்களுக்கு இல்லை என்பதை நீங்கள் உணர வேண்டும். ஆமாம். உங்கள் விரலில் நான் போட்ட நீலக் கல் மோதிரம் எங்கே? காட்டுங்கள்......"

"முடியாது........."

"முடியாதா? எந்த வெள்ளைக்காரிக்காவது போட்டு விட்டீர்களா? காட்டுங்கள்" என்றாள் மேரி படபடப்புடன்.

அவன் நகர்ந்து அப்பால் திரும்பினான்.

"ஏன் உங்கள் வலது கையைக் காட்டாமல் கையில் கோட்டுப் பக்கத்தை மட்டும் தொங்க விட்டிருக்கிறீர்கள்? கோட்டை நான் கழற்றவா?" என்று கோட்டைப் பிடித்து இழுத்தாள் மேரி. வில்லியம் வேகமாகத் திரும்பினான். அவள் பிடியில் கோட்டு சிக்கியது.

அவன் இடது கை பாதி அறுபட்டுத் தொங்குவதைப் பார்த்ததும், "அத்தான்!" என்று ஆவேசத்துடன் அலறி அவன் நெஞ்சில் சாய்ந்து அழுதாள் மேரி.

"இது என்ன அத்தான்?"

"நீ போட்ட மோதிரம் வலது கைவிரலில் இருக்கிறது. லண்டனில் நடந்த ஹாக்கிப் பந்தயப் போட்டியில் நான் அடிபட்டுக் கீழே விழுந்த போது, என் கை முறிந்தது. சிதைந்த பாகத்தை ஆஸ்பத்திரியில் நீக்கி விட்டார்கள். எங்கே இந்தக் கைபோன நொண்டியை நீ ஏற்றுக் கொள்வாயோ என்றுதான் நான் கலங்கித் தவித்து வந்தேன்."

"சேசுபாலன் என் பிரார்த்தனையை ஏற்று என்னைக் கைதூக்கிவிட்டு விட்டார்!" விழிகளில் ஆனந்த நீர் பொங்க மேரி பரவசமாகி நின்றாள்.

"ஆமாம், மேரி! எனக்கு நீ கிறிஸ்துமஸ் பரிசாக எதைக் கொடுக்கப் போகிறாயாம்?"

"என் அன்புக் கரங்களைத்தான் உங்களுக்கு நான் கொடுக்கப் போகிறேன் அத்தான்...." அவனை இறுக அணைத்துக் கொண்ட அவள் அதீத ஆனந்தத்தால் அழுதே விட்டாள்.

இந்த இன்பக் காட்சியைக் கதவோரத்தில் நின்றபடி பார்த்த ஜோசப் ஆசாரி, தம் கண்களை மேல் துண்டால் துடைத்துக்கொண்டார். அப்பொழுது அவர் காதில், சேசு பிரான் பிறந்த அன்று ஞான தூதர்கள் பாடிய பாடலின் வரிதான் ஒலித்துக்கொண்டிருந்தது: "உன்னதத்திலிருக்கும் தெய்வத்துக்கு மகிமையும், உன்னதத்திலிருக்கும் — பூமியிலே நல்ல மனமுள்ள மனிதர்களுக்கு அமைதியும் உண்டாவதாக !"

சாதல் இல்லையேல் காதல்

சோ

காட்சி 26

சபேசன் வீட்டில் ஓர் அறை

(பழைய பெட்டிகள், நாற்காலிகள் பல ஒரு கும்பலாகச் சேர்க்கப்பட்டு ஒரு மூலையில் கிடக்கின்றன.)

(மாலதி, நாகராஜன் கொடுத்த கவரில் இருந்த வெற்றுக் காகிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள். நாகராஜன் வருகிறான்.)

நாக: குட்மார்னிங் மாலதி......

மால (தலை நிமிர்ந்து): ஓ! நீங்களா? மறுபடியும் எதுக்காக இங்கே வந்தீங்க?....

நாக: மாலதி..... நான் சொல்றதை நீ கொஞ்சம் பொறுமையாகக் கேக்கணும்....

மால: மிஸ்டர் தியாகராஜன்.... நீங்க மறுபடியும் பழையமாதிரி பேசறதா இருந்தா, என்னாலே பொறுமையாக் கேக்க முடியாது.

நாக: நான் சத்யமா சாகலே மாலதி....

மால: அதை நினைச்சு நான் ரொம்ப வருத்தப்படறேன்.

நாக: நான் தியாகராஜன் இல்லே. நாகராஜன்தான்னு நிரூபிக்கிறேன். நாகராஜன் இன்னும் சாகலே.

மால: ஆல் ரைட்! மாலதி செத்துட்டா. நான் மாலதி தங்கை மாதவி.

நாக: சரி.... மாதவி..... நான் தியாகராஜன்..... என்னை நீ ஏத்துக்கிறியா?

மால: சே! உங்களுக்கு என்ன வெட்கமே கிடையாதா?

நாக: உங்க அக்கா மாதிரியே பேசறியே ?

மால: மிஸ்டர் தியாகராஜன்.....உங்க தமாஷெல்லாம் எங்கிட்ட வெச்சுக்காதீங்க.

நாக: ஐ ஆம் ஸாரி..... மாலதி.... நான் நாகராஜன்னு நிரூபிக்கப் புது சாட்சியம் அகப்பட்டிருக்கு..... சுரேஷ், என் நண்பன் சுரேஷ், எங்க திட்டத்தை விவரிச்சு, அவனுடைய சிநேகிதனுக்கு எழுதின லெட்டர் ஒண்ணு அகப்பட்டிருக்கு.....

மால: இப்ப அப்படி ஒரு லெட்டரைத் தயார் பண்ணிக் காட்டி என்னை ஏமாத்திடலாம்னு பார்க்கிறீங்களா?

நாக: இல்லவே இல்லே. அவன் நான் மெட்ராஸ்லேயிருந்து கிளம்பறபோது எழுதின லெட்டர் அது. அன்றையத் தேதி தபால் முத்திரை அந்த லெட்டரிலே இருக்கும். இதை விட வேறென்ன அத்தாட்சி வேணும்? பழைய தேதி தபால் முத்திரையை, இப்ப தயார் பண்ணின லெட்டர்லே வாங்க முடியுமா ? தபால் ஆபீஸிலே பழைய தேதி முத்திரையைப் போட்டுக் கொடுப்பாங்களா?

மால: இந்தக் காலத்திலே எது நடந்தாலும் ஆச்சரியப்படறதுக்கில்லே.

நாக: இப்படிச் சொன்னா எப்படி மாலதி? அந்த லெட்டரைப் பார்த்தப்புறம்கூட என்னை நம்ப மாட்டாயா, மாலதி?

மால: எங்கே, அந்த லெட்டர்? காட்டுங்க, பார்க்கலாம்.

நாக: அது இப்ப என் கையிலே இல்லே.

மால: ஓ! நான் நம்பறேனுன்னு பார்த்துக்கிட்டு அப்புறம் தயார் பண்ணிக்கிட்டு வரலாம்னு பார்த்தீங்களா?

நாக: இல்லையே, முதல்லேயே தயார் பண்ணிட்டேன்!...... சே.... வந்து.....அது நிஜ லெட்டர்.... இன்லண்ட் லட்டர்.

மாலதி: இப்ப அந்தக் கடிதம் எங்கே?

நாக: சுரேஷ் அதைச் சிநேகிதன்கிட்டே யிருந்து வாங்கிட்டு வரப் போயிருக்கான். இப்ப வந்துடுவான்... உட்காரேன் மாலதி... பேசிக்கிட்டிருக்கலாம்.

மாலதி: எங்கிட்ட எதையாவது பேசி மனசை மாத்திப்பிடலாம்னு பார்க்கிறீங்க. அதுதான் நடக்காது. அந்த மாதிரி ஒரு லெட்டர் இருந்தா அதை எடுத்துக்கிட்டு வாங்க.

(உள்ளே போகிறாள்.)

நாக (அவளைப் பின்தொடர்ந்து): மாலதி..

மாலதி: அந்த லெட்டரை எடுத்துக்கிட்டு வராமல் நீங்கள் வரவேண்டியதில்லே.

நாக: வந்தா லெட்டர் எடுத்துக்கிட்டுத் தான் வரணுமா? நான் என்ன போஸ்ட் மேனா....?

மாலதி: நான் அன்னிக்குச் சொன்னது ஞாபகம் இருக்கா உங்களுக்கு? தயவுசெய்து நான் அன்னிக்குச் சொன்ன மாதிரி செய்யறீங்களா?

நாக: ஓ! எஸ். கண்டிப்பா செய்யறேன்... ஆமாம் நீ அன்னிக்கு என்ன சொன்னே? சொல்லு, செய்யறேன். என்ன சொன்னே...?

மாலதி: திரும்பச் சொல்லணுமா?

நாக (ஆர்வத்தோடு): சொல்லு... சொல்லு

மாலதி: கெட் அவுட்!

(உள்ளே போய் விடுகிறாள்.)

நாக: மாலதி... ப்ளீஸ்... மாலதி....

(அவளைப் பின்தொடர்ந்து வேகமாகப் போகிறான்.)

சபே: மாலதி...மாலதி...உனக்கு ஒரு பிரஸண்ட்...பரிசு...! (கையில் எதையோ மறைத்துக்கொண்டு வருகிறார்) மாலதி! எங்கே போயிட்டா அவ?....

(சுரேஷ் வீட்டினுள் நுழைவதைச் சபேசன் திடீரெனக் கவனிக்கிறார்.)

இவன் எங்கே இப்போ வந்தான்......?

சுரே: குட் மார்னிங் ஸார்!

சபே: குட் மார்னிங்... குட்மார்னிங்... அப்போ நீ போயிட்டு வரியா?

சுரே: என்ன ஸார் இது? இப்பத்தான் வரேன். அதுக்குள்ளே துரத்தறீங்களே... ஆமாம் இதெல்லாம் என்ன ஸார் காயலாங் கடை மாதிரி....?

(பழைய சாமான்கள் பல போடப்பட்டிருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டுகிறான்.)

சபே: ஹி... ஹி... ஆமாம். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு.

சுரே: போயிட்டு வாங்கப்பேன்.

சபே: சுரேஷ்! இந்தச் சாமானெல்லாம் ஏலத்துக்குப் போறது... நம்ம நாதன் கம் பெனியிலேதான். நீ போய் அதைக் கொஞ்சம் கவனிச்சுக்கோயேன்....

சுரே: என்ன இது? என்னே விரட்டிக் கிட்டே யிருக்கிறீங்க? ...

(சபேசன் இதற்குள் பழைய பெட்டிகள் அடுத்து மூலைக்குப் போய் ஒரு சிறு பெட்டியைச் சுரே ஷுக்குத் தெரியாமல் திறக்கப் பார்க்கிறார். அது முழுவதும் திறக்க முடியாமல் மூடிக் கொண் டிருக்கிறது. சிறிது இடைவெளி மட்டும் கிடைக்கும்படியாகத் திறக்கிறது.)

சுரே: என்ன ஸார் விஷயம்? ரொம்ப... ஏதோ ஒரு மாதிரியா 'பிஹேவ்' பண்றீங் களே...!

சபே: ஒண்ணுமில்லே... உனக்கு ஒண்ணு மில்லே....

(பெட்டியில் கிடைத்த இடைவெளி வழியாக, கையில் மறைத்திருந்ததைப் பெட்டிக்குள் போட்டு விடுகிறார்)

(அவர் போடுவதற்கும் நாகராஜன் வருவதற்கும் சரியாக இருக்கிறது.)

அப்பாடி! இனிமே நிம்மதி.

சுரே: ஏன் என்ன? ஏன் என்னைப் பார்த்துப் பயப்படறீங்க?

சபே: எனக்கென்ன உங்கிட்ட பயம்? இப்பத்தான் என் கையிலே ஒண்ணுமில்லையே!

சுரே: கையிலே ஒண்ணுமில்லையா? என்ன சொல்றீங்க?

சபே: வந்து இல்லே... மடியிலே பயம் இருந்தாத்தானே... வழியிலே கனம்... இல்லே... வழியிலே கனம் இருந்தாத்தானே மடியிலே பயம்? சரி.. எங்கே கனம், எங்கே பயம்? இல்லே... என்னப்பா பழமொழி அது?

சுரே (சிரித்து): என்ன ஸார் இது... இந்தச் சாதாரணப் பழமொழி உங்களுக்கு மறந்து போச்சே... வந்து... வழியிலே மடி இருந்தா பயம் கன...கனம் மடியா...

சபே: ஏழை! அப்படியில்லே....அது.... களவாடிகள்... மடியா....

சுரே: ஆமாம்! களவாடிகள் மடியாப் போனா வழியிலே பயமா இருக்கும்! நீங்க ஒண்ணு! ஏதோ ஒரு பழமொழி...

சபே: கொஞ்சம் இருப்பா. ஒரே தாகமா இருக்கு... நான் போய் வாட்டர் குடிச்சுட்டு வந்துடறேன்.

(உள்ளே போகிறார். போகும்போது அந்தச் சிறு பெட்டியை ஒருமுறை பார்த்து விட்டுத் திரும்பி ஊோடி போகிறார்.)

நாக: டேய் சுரேஷ்! ஆபத்பாந்தவா! அனாதை ரக்ஷகா! உன்னைத்தான்டா எதிர் பார்த்துக்கிட்டிருந்தேன். அந்தக் கடுதாசி யைக் கொண்டு வந்திருக்கியா?...

சுரே: ஆஹா! இதோ! பார்டா.

(சட்டைப் பையிலிருந்து இன்லண்ட் லெட்டரை எடுத்துக் காட்டுகிறான்.)

நாக (அதைப் பிடுங்கிப் படிக்கிறான்): ஆஹா! அப்படியே எல்லாம் கிளீனா எழுதி யிருக்கியே. வெரி குட்! இதை இப்பவே மாலதிகிட்டக் காட்டிடணும்.

சுரே: டேய்... டேய்... அதைக் கொண்டா டேய்... சபேசன் வரார். அவர் கண்ணிலே அது பட்டால் நம்ம திட்டமே கோவிந்தா...

நாக: இதை எங்கேடா வைக்கிறது...

சுரே: என் கையிலே கொடுடா...

(நாகராஜன் கடிதத்தைச் சுரேஷிடம் கொடுக்க, சுரேஷ், சபேசனுக்குத் தெரியாமல் அதை மறைக்கப் பார்க்கிறான்.)

சபே: என்னப்பா அது பின்னாலே... கையிலே என்ன?

சுரே: ஒண்ணுமில்லே... ஹி...ஹி...

சபே: ஏன் இப்படி அசடு வழியறே? என்ன நாகராஜன்... (பயந்துகொண்டே) உடம்பு எப்படி இருக்கு?

நாக: என் உடம்புக்கு என்ன?





சபே: உடம்புக்கு ஒண்ணுமில்லே...சும்மா தான் கேட்டேன்... என்ன விசேஷம் இப்படி வந்தே?

சுரே: அப்பாடா!

சபே: என்ன?

சுரே: இனிமே நிம்மதிதான்.

சபே: ஏன்?

சுரே: மடியிலே கனம் இருந்தாத்தானே வழியிலே பயம்?

சபே: என்ன சொல்றே? ஓ! (முகத்திலே பிரகாசம் வீசுகிறது.) ஓஹோ! அந்தப் பழ மொழியைக் கண்டுபிடிச்சுட்டியா நீ! அதான் ஒரே குஷியா யிருக்கே!.

சுரே (அசடு வழிய): ஆமாம்... ஹி ஹி...

சபே: ஆனா உங்கிட்ட ஒண்ணுப்பா! வருத் தமாயிருந்தாலும் சரி, குஷியா யிருந்தாலும் சரி. உனக்கு ஒண்ணும் வித்தியாசமே கிடை யாது. எப்பவும் ஒரே மாதிரிதான் இருப்பே...

சுரே (இன்னும் அசடு வழிய) ஹிஹிஹி... யெஸ்... ஆமாம்.... ஹிஹிஹி...

சபே: எப்பவும் அசடு வழியறதே! தோ சேஞ்ஜ்!... ஆமாம் (ரகசியமாக) இவனே எதுக்காக இப்ப அழைச்சுக்கிட்டு வந்தே...

சுரே: ஸார்... அவன் ரொம்பக் கஷ்டப் படறான்... பெண்டாட்டி பசங்க, பட்டினி... நாகராஜன் வெச்சுட்டுப் போன கடன் வேறே...

சபே: கடனா? எவ்வளவு?
சுரே: பத்தாயிரம் ரூபா!
சபே: யார்கிட்டே வாங்கினான்?
நாக: கனக சபை!
சபே: கனகசபையா?

சுரே (நாகராஜனை அடக்கி, சமாளித்து) ஆமாம்! கனகசபை.... க. ந. க. சபை....

சபே: க–ந–க–சபையா?

சுரே: வெல்... கடன் வேண்டுவோர் நலம் கருதும் சபை! க. ந. க. சபை!



சபே: புதுசா இருக்குதே... எப்ப அது ஆரம்பிச்சது?

சுரே: இப்பத்தான்.

சபே: இப்பத்தானா?

சுரே: இப்பத்தான். கொஞ்ச நாள்தான் இருக்கும். இரண்டு மாசத்துலே திருப்பித் தந்துடறேன்னு வாங்கினான்.....தராமலே செத்துட்டான்.... இப்ப தியாகராஜனுக்கு மெட்ராஸ்லேந்து வக்கீல் நோட்டீஸ் வந் திருக்குது.

சபே: எதுக்கு?

சுரே: அந்த வக்கீலுக்கு ஒரு பெண் இருக்காளாம். அவளைத் தியாகராஜனுக்குக் குடுக்கிறதா நோட்டீஸ் விட்டிருக்கார்! — என்ன ஸார் நீங்க? வக்கீல் நோட்டீஸ் எதுக்கு வரும்? கடனைத் திருப்பிக் கொடுக் காட்டி இவன் மேலே நடவடிக்கை எடுக் கிறதா நோட்டீஸ் விட்டிருக்காங்க.

சபே: நாகராஜன் வாங்கின பணத்துக்கு இவன் எப்படி ஜவாப்தாரி? ஷூரிட்டிக் கையெழுத்து — தான்தான் ஜவாப்தாரின்னு — தியாகராஜனும் கையெழுத்துப் போட்டுப் பிட்டானா?

நாக: நல்ல வேளை. நீங்களே சொல்லிட் டீங்க....

சுரே: ஆமாம் ஸார்! கரெக்ட்! இவனும் கையெழுத்துப் போட்டுப்பிட்டான்... இப்ப மாட்டிக்கிட்டு முழிக்கிறான்.

சபே: அட பாவமே! அதுனாலேதான் சித்தப் பிரமை அதிகமாயிடுத்து!

சுரே: ஆமாம் ஸார்! கரெக்ட்! நீங்க தான் ஸார் ஏதாவது உதவி பண்ணணும்.

சபே: அவ்வளவு பணம் நான் தர முடியாதுப்பா ... ஏதோ ஒரு ஜவாபி ராம் வேணுமானா பார்க்க லாம்....

சுரே: இப்ப தர்ரீங்களா?

சபே: இல்லாட்டி ஒண்ணு செய்யலாம். நான் அந்த க. ந. க. சபைக்கு லெட்டர் எழுதறேன். மாசா மாசம் இவ்வளவு பணம் தியாகராஜனுக்குப் பதிலா நானே கட்டிப்பிடறேன்.... ஒரே வருஷத்தில் கடனைத் தீர்த்துப்பிடலாம்!

சுரே: அய்யய்யோ! இந்தப் பணத்தை இன்னும் பத்துப் பதி னைந்து நாள்லே தீர்த்தாகணும் ஸார்!

சபே: அதெல்லாம் நான் கவ னிச்சுக் கறேன்யா. நீ கவலைப் படாதே. தியாகராஜன்! அந்தக் கடன்கார சபை உன் மேலே கேஸ் போட்டா அவங்களுக்கு ஒரு பைஸா வாவது கிடைக்கப் போறதா? கிடை யாது. ஏதோ கேஸ் இல்லாம, ஒரே வருஷத் துலே கடன் அடையறதுன்னு அவங்களே தன்னிச்சா ஒத்துக்குவாங்க!

நாக: நானே இரண்டு மாசத்துலே அடைக்க வேண்டிய கடன் ஸார் அது! அந்தக் கடனே இன்னும் பத்து நாள்லே அடைக்கலேன்னு நான் பிரம்மச்சாரியாகவே இருக்க வேண்டியதுதான்!

சபே: கடன் அடைக்கலேன்னு பிரம்மச் சாரியா? மகரிஷி சாபமா? இரு. இரு... உனக்குத்தான் கல்யாணம் ஆயிடுத்தே! எப்படிப் பிரம்மச்சாரியா இருப்பே?

சுரே: ஸார்... அவன்...

சபே: ஓ!...திரும்பி ஆரம்பிச்சுட்டானா? சித்தப் பிரமையா? என்னப்பா இந்தச் சித்தப் பிரமை! ஒரு பத்து நிமிஷம் சேர்ந்த மாதிரி ரெஸ்ட் எடுக்க மாட்டேங்குதே...

நாக: ஸார்...

சபே: வேண்டாம். கிட்ட வராதே!...

(உள்ளே ஓடி விடுகிறார்.)

(நாகராஜனும் சுரேஷும் அவரைத் தொடர்ந்து போகின்றனர்.)

(ஒரு வேலைக்காரன் வந்து....அங்கு ஹாலில் கிடக் கும் சாமான்கள் அனைத்தையும் சபேசன், சுரேஷ் உபயோகப்படுத்திய சிறு பெட்டி உள்

படத் தூக்கிச் செல்ல ஆரம்பிக்கிறான். அப்போது நிர்மலாவின் தந்தை நாதன் வருகிறார். பின்னால் சில ஆட்களும் வருகிறார்கள்.)

நாதன்: என்னப்பா... சபேசன் எங்கே?

வேலையாள்: உள்ளே இருக்கார். கூப்பிடவா?

நாதன்: வேண்டாம், வேண்டாம். எனக்கு டைம் இல்லே. இந்தச் சாமான்களையெல்லாம் எடுத்து வாசல்லே எங்க கம்பெனி வண்டி வந்திருக்குது. அதுலே போட்டுடு...சபேசன் வந்தாருன்னா நான் எல்லாச் சாமான்களையும் அவர் சொன்னபடியே இன்னிக்கு ஏலத்துலே விட்டுடறேன்னு சொல்லிடு. எனக்கு டைம் ஆறது. நான் வரேன்.

(போகிறார். வேலையாளும் நாதனுடைய ஆட்களும் சாமான்களை எடுத்துக்கொண்டு போகிறார்கள். அந்த ரூமே காலியாகக் கிடக்கிறது.)

(நாகராஜனும் சுரேஷும் திரும்பி வருகின்றனர்.)

நாக: என்னடா இது? சபேசன் இப்படிச் சொல்றாரே?

சபே: எவ்வளவு கேட்டுப் பார்த்தும் மசியலே. ஆல்ரைட்... இனிமே ஒரே வழிதான். நாளைக்கு இங்கே வந்து நீ தற்கொலை பண்ணிக்கப் போறேன்னு நீ ஒரேயடியா அழு. மேலே நடக்க வேண்டியதையெல்லாம் நான் கவனிச்சுக்கறேன்.

நாக: அந்த லெட்டரை என்னடா பண்ணினே? மாலதிகிட்டே இப்பவே காட்டிடறேன். இப்ப அதுதானே முக்கியம்? நான் சாகலேன்னு நிரூபிக்க ஒரே ஒரு சாட்சியம்? எங்கேடா அது?

சுரே: கவலைப்படாதே! அந்த ரூமிலே ஒரு பெட்டியிலேதான்... (திரும்பிப் பார்த்துத் திகைத்து) எங்கேடா அந்தப் பெட்டி?

நாக: எந்தப் பெட்டி?

சுரே: இங்கேதான்... நிறைய சாமான் இருந்தது... அதுலே ஒரு பெட்டி அரைகுறையா திறந்திருந்தது... சபேசனுக்குப் பயந்து அந்தப் பெட்டியிலேதான் கடுதாசைப் போட்டேன். இப்ப அந்தப் பெட்டியைக் காணுமே... அந்தச் சாமான் ஒண்ணுமே இங்கே காணுமே!...

நாக: அய்யய்யோ! இப்ப என்னடா செய்யறது?...

சுரே: இரு, இரு...அதோ அவனைக் கேட்கலாம். (வேலையாள் வருகிறான்) ஏம்பா... இங்கே இருந்த சாமான்களெல்லாம் எங்கே?

வேலையாள்: எல்லாம் ஏலத்துக்குப் புடிச்சு.... அதுக்குத்தானே இங்கே வச்சிருந்தோம்...

நாக: ஏலமா?

வேலை: ஆமாங்க! நம்ப நாதன் கம்பெனிலே ஏலத்துக்கு உடறாங்க...

சுரே: என்னிக்கு?

வேலை: இன்னிக்குத்தான். இப்பத்தானே எடுத்துக்கிட்டுப் போறாங்க!

(போய் விடுகிறான்.)
(மாலதி வருகிறாள்.)

மாலதி: என்ன... இவர்தானே மிஸ்டர் சுரேஷ்? ஏதோ லெட்டர் சொன்னீங்களே, எங்கே காட்டுங்க, பார்க்கலாம்!

நாக: இல்லே. அது ஏலத்துக்குப் போயிடுத்து.

மாலதி: விளையாடறீங்களா? மிஸ்டர்...

சுரே: இல்லே... மிஸ் மாலதி. நான்தான் அதைத் தவறிப் போய் ஏலத்துக்குப் போற பெட்டியிலே போட்டுட்டேன். அது ஏலத்துக்குப் போயிடுத்து!


மாலதி: இரண்டு அயோக்கியங்க ஒண்ணு சேர்ந்துக்கிட்டு, திட்டம் போட்டு மோசடி செய்யப் பார்க்கிறீங்க இல்லே? இந்தக் கட்டுக் கதையை என்னை நம்பச் சொல்றீங்களா? உங்க முன்னாலே நிக்கறதுகூட மகா பாவம்!

நாக: திருப்தியாடா? என் காதலை ஏலத்துக்கு விட்டுட்டியே மகா பாவி! (தொடரும்)



"பேஷ்! நீ பண்ணின ஸ்வெட்டர் கனகச்சிதமாக இருக்கே!"
"நாய்க்குப் பின்னினேன்; உங்களுக்கும் சரியாக இருக்கு!"

★



"என்ன பண்றது? கல்யாணமான பிறகு அடிக்கடி டயரை ரீடிரேட் பண்ணும்படியாப் போச்சு!"

வட்ட மேஜை

★ கலைவிருந்து
★ களம் கண்டேன்!
★ ராஜாஜி மலர்
★ ராணுவ மலர்

★ கல்கி யிதழிற் கலைவிருந்தாய்ப் பாட்டமுதம்
மல்கிக் கிடக்க மகிழ்ந்துண்டேன்!—நல்கிய
செந்தமிழ்ப் பாவாணர் தேவியரு
சால்வாழ்க
கொந்தவிழ்தேன் என்றுங் குடித்து!

★ 12 - 12 - 65 இதழ்

சென்னை-30
10-12-65 தேவிநாசன்

திரு எஸ். எஸ். மாரிசாமி எம். பி. அவர்கள் "களம் கண்டேன்" என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகள் படிப்பவரை மெய்சிலிர்க்க வைத்தன. இந்தியா – பாகிஸ்தான் போரில் என்ன நடந்தது என்பதுபற்றி இதுகாறும் வெளிவராத செய்திகளைச் சுவைபட அவருக்கே உரிய பாணியில் தந்தார். பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து பெற்ற அசுரக் கோட்டைகள் எனப்படும் "பாட்டன் டாங்கி"களை நம் படையினர் எவ்வுபாயங்களினால் செயலற்றுப் போகச் செய்தனர் என்பதை அறியும்போது வியப்பாக இருக்கிறது. இதேபோல் பாகிஸ்தானின் 'ஸாபர்ஜெட்' கழுகுகளை பங்களூர் 'நாட்' பூச்சிகள் எங்ஙனம் அழித்துத் தவிடு பொடியாக்கின என்பதை அறியும்போது உவகை அடைகிறோம்.

நாகர்கோவில்-2
26-11-65 ஏ. எஸ். ரஞ்சன்

கல்கி ராஜாஜி இதழைப் பலதடவை அதற்குரிய பக்தியோடு வாசித்தேன். அதை மூடும்போது அந்த அழகிய மாலையில் ஒரு பூ குறைவாக இருப்பதாக எனக்குப் பட்டது. தேசபிதா காந்தியடிகளின் அபிப்பிராயத்துடன் தொடங்கியிருக்கும் மலர் நேருஜி அவர்களின் அடியிற் கண்ட மதிப்பீட்டுடன் முடிக்கப்பட்டிருந்தால் மணம் அதிகமாயிருந்திருக்கும்.

"இராசகோபாலாச்சாரியார் காங்கிரஸின் வலதுசாரி பிரிவைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுபவர். அவருடைய சிறந்த மேதை, தன்னலமற்ற பண்பு, பகுத்தாராயும் கூரிய திறன், அனைத்தும் நம் இலட்சியத்துக்குப் பெரும் சொத்தாய் விளங்கின."

ஆதாரம்: ஜவாஹர்லால் நேரு சுயசரிதம்

நான்குநேரி,
10-12-65 ஜே. எஸ். டி. செல்லையா

கல்கி பத்திரிகை நன்றாக இருக்கிறது என்பதற்காகப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் சேர்த்து வைத்துக்கொள்ள வீட்டில் இடம் போதவில்லை. தங்கள் அரசியல் பகுதிகள், ராஜாஜியின் கருத்துக்கள் மட்டும்தான் வீட்டு லைப்ரரியில் இடம்பெற முடிகிறது. ஆயினும் இந்த வருடம் தாங்கள் வெளியிட்ட 'ரயில்வே மலர்', 'ராணுவ மலர்', ராஜாஜி மலர்' இவை மூன்றும் ஒரு வாரப் பத்திரிகை என்று இல்லாமல் சிறப்புள்ள புத்தகங்களாகவே லைப்ரரியில் வைக்கத் தகுந்தவைகள் ஆகிவிட்டன. ராஜாஜி மலர் அட்டை ரொம்ப நேர்த்தி. எடுத்து 'ப்ரேம்' செய்துகொள்ளத் தகுந்ததாக பூஜ்யர் ராஜாஜியின் போட்டோவை வெளியிட்டிருக்கிறீர்கள்.

சென்னை-4
10-12-65 எஸ். கே. ராமராஜு

ராணுவ மலரில் 'ஐ.என்.ஏ. வீரர்களின் அற்புத சாதனை' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் ஆரம்பத்தில் "புல் வெட்டிக்கொண்டும் ரப்பர் மரங்களிலிருந்து பால் வெட்டிக்கொண்டும் ஓய்ந்த நேரங்களில் வெற்றிலை பாக்கு புகையிலை போட்டுக்கொண்டும் அப்பாவிகளாக இருந்த தமிழ்த் தொழிலாளர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பால் வெட்டும் கூலிகளே ஐ. என். ஏ. வீரர்கள் என்று அர்த்தம் தொனிக்கும் முறையில் கட்டுரை ஆரம்பமாயிருப்பது வருந்தத் தக்கது.

ஜெயமணி சுப்பிரமணியம் அவர்கள் இம்மாதிரிச் சொற்களை உபயோகித்திருப்பது கண்டு மிகவும் வருந்துகிறேன்.

பசுபதிகோவில் மு. இலக்குமணன்
3-12-65 ஐ.என்.ஏ. அவுல்தார் குமாஸ்தா

ஐ. என். ஏ. வீரர்கள் அனைவரும் இப்படிப்பட்டவர்கள் என்று ஆசிரியர் குறிப்பிடவில்லை. சாது ஜனங்களாக இருந்தவர்களையும் தாய்நாட்டுக்காகத் துப்பாக்கி ஏந்தி உயிர்த் தியாகம் புரியக்கூடிய வீரர்களாக மாற்றிய பெருமை நேதாஜியின் சிம்மக் குரலுக்கு உண்டு என்பதையே கட்டுரை ஆசிரியர் வலியுறுத்துகிறார். — ஆசிரியர்


இந்த வாரம் கல்கி இதழை ராணுவ மலராக வெளியிட்டதற்கு மிக்க நன்றி. இதழில் உள்ள ஒவ்வொரு பகுதியும் படிப்பதற்கு உற்சாகமாக இருந்தது. போர் ஆயுதங்களைப்பற்றியும், ஆவடி தொழிற்சாலை போன்ற பலவற்றையும் வெளியிட்டதற்கு மிக்க மகிழ்ச்சி. இந்த இதழில் "போர் ஆயுதங்கள்" என்ற பகுதியில் ராணுவ வீரர்கள் உபயோகிக்கும் துப்பாக்கியின் (Rifle) குழலின் விட்டம் (Diameter) ·003 அங்குலம் என்று குறிப்பிட்டுள்ளீர். ஆனால் ராணுவ வீரர்கள் உபயோகிக்கும் No I Mark III Rifle—ன், குழலின் விட்டம் 0. 303 அங்குலமாகும்.

பி. பட்டாபிராமன். (என். ஸி. ஸி.)

போர்முனை — போர் என்றால் என்ன என்று அறியாத கிராம மக்களுக்கும் போர் வீரர்களின் சாதனைகளை மிகத் தெளிவாகக் காட்டிய தங்களுக்கு என் நன்றிகள் என்றும் உரித்தாகுக.

வாழைப்பந்தல்
3-12-65 கோவி. பரஞ்சோதி

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

